Free Website :
for Matrialmonial Website

micheaijulian@facebook.com
www.indianadarmurasu.com

ஜனவரி-2024
நாடார் :14
முரசு :1



# இந்தியன் நாடார் முரசு

INDIAN NADAR MURASU

விலை ரூ.15/-

## நாடார் மஹாஜன சங்க 72வது மாநில மாநாடு

## நாடார் இன தலைவர் G.கரிகோல்ராஜ் அவர்கள் அழைக்கிறார்



பாலூர் D.சபரியானந்தம் ஆசான் அவர்களின்
43ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 17.12.1912

இறப்பு: 10.01.1981.



Paloor. D. Sabarianandham Asan

S. Maria Thangam

என்றும் நினைவுடன்

**ANNAI VEILANKANNI'S**
**GROUP OF EDUCATIONAL INSTITUTIONS**





**Dr. S. Devaraj**
Chairman



**Dr. D. Dev Anand**
Secretary



**Dr. D. Johny Christopher**
Director

#81, VGP Salai, West Saidapet, Chennai-600 015
**Tel.: 044-43523712, 24710820**

#33, Gandhi Road, Near Perungalathur Railway Station
Nedungundram, Chennai-127
**Tel.: 044-22794192, 22794155, 22794064**

Helpline : 9282144444 | Email : mail4avc@gmail.com | www.annaiveilankannis.com

அகில உலக நாடார்களின் செய்திக்களஞ்சியம்

R.Dis.NO.1434/09

இந்திய நாடார் முரசு

சமுதாய பல்சுவை மாத இதழ்

கௌரவ ஆசிரியர்: **விஜய்வசந்தகுமார்.**

பேராசிரியர்: **திரு.ஜூலியன் நாடார்**

ஆசிரியர்: டாக்டர்.J.*அர்னால்ட் அரசு ஜூலியன்*

துணை ஆசிரியர்:திருமதி.எல்மாமதி.,எம்.ஏ.பி.எட்

இணை ஆசிரியர்:ரேஷ்மாமதி M.Sc.,(U.S.A)

இலக்கிய ஆலோசகர்: கலைமாமணி திரு.தாமரை செந்தூர்பாண்டியன்

சட்ட ஆலோசகர்:

Dr.தே.தேவ் ஆனந்த். MBA.,M.Com.,MHRM.,MSW., ML., Ph.D.,

செயலாளர்,அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.

ஆலோசனைக் குழு:

திருமதி.ராணிவெங்கடேசன் முன்னாள் MLA.,

டாக்டர்.S.தேவராஜ் Chairman

Annai Veilankanni's Group of Educational Institutions

R.K.காளிதாஸ் தலைவர்.தெக்ஷணமாற நாடார் சங்கம், மாவட்டதலைவர்: தென்காசி, திருநெல்வேலி மாவட்ட வர்த்தக கழகம், தலைவர், பெருந்தலைவர் காமராஜர் தினசரி மார்கெட் பாவூர்சத்திரம்., அமைப்பாளர்: தென்காசி மாவட்ட அனைத்து சமுதாய ஆலோசனை கமிட்டி.

திரு.பி.சின்னமணி நாடார்

தலைவர், சென்னைவாழ் நாடார் சங்கம்

டாக்டர் வி.ஜி.சந்தோஷம்

டாக்டர்.குமரேசன்

போரூர் ஆனந்தராஜ்

தலைவர் நெ.தூ.நா.மகமை பரிபாலன சங்கம்.

தலைமை அலுவலகம்:

**புதிய எண்:1, ப.எண்:21, கிருஷ்ணப்ப நாயக்கன் தெரு, மேட்டுப்பாளையம்,மேற்கு மாம்பலம், சென்னை-600 033.**

**போன்:044-23810610 (வீடு)**

**E-mail:nadar10_2000@yahoo.com, indianadarmurasu@yahoo.com**

தலைமை வியாபார அலுவலகம்:

**30, தேரடி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.**

**போன்: 044-23811087,**

**அலுவலக நேரம்:10.00am to 9.00pm**

இந்திய நாடார் முரசுக்காக அச்சிட்டு வெளியிடுபவர்
டாக்டர்.திரு.K.M.J.A.அரசு, ஜூலியன்.

அலுவலக நிர்வாகம், கம்ப்யூட்டர்: திருமதி.G.சத்தியாபுரூஷோத்தமன்,M.A.,B.Ed

ALL RIGHTS RESERVED LEGAL JURISDICTION CHENNAI CITY COURTS ONLY. NOTHING INDIANADAR MURASU IS INTENED TO DEFAME ANY PERSON. BUT EXPRESSED IN GOOD FATH, PURSUIT OF TRUTH AND PUBLIC GOOD.

எந்த வகையிலும் மறுபதிப்பு செய்தல் தடை செய்யப்படுகிறது. கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. கதை, கட்டுரை முதலியன எதையும் தபால் அல்லது மின் அஞ்சல் மூலமாக அனுப்பவும். அவற்றை திருத்தி அமைக்கவும், சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. வெளியூர் சந்தாதாரர்கள் தபால் மூலமாகவோ, காசோலையாகவோ அனுப்பி வைக்கவும். அறிமுகம் இல்லாதவர்களிடம் சந்தா மற்றும் விளம்பரத் தொகையை கொடுத்து ஏமாற வேண்டாம்.

விளம்பர கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| வெளி முன் அட்டை | (17X24 CMS) | ரூ. 25,000 |
| வெளி பின் அட்டை | (17X24 CMS) | ரூ. 15,000 |
| உள் அட்டை | (17X24 CMS) | ரூ. 10,000 |
| முழுப்பக்கம் | (17X24 CMS) | ரூ. 5,000 |
| அரைப்பக்கம் | (17X12 CMS) | ரூ. 2,500 |
| கால்பக்கம் | ($8^{1/2}$X12 CMS) | ரூ. 1,500 |
| அரைக்கால்பக்கம் | ($8^{1/2}$X6 CMS) | ரூ. 900 |

ஆண்டு சந்தா- ரூ.550, 2ஆண்டு சந்தா-ரூ.1100

ஆயுள் சந்தா ரூ.15,000, 5 ஆண்டு சந்தா- ரூ.5000.

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, கனடா,

தென் ஆப்பிரிக்கா மற்றும் அயல் நாடுகளுக்கு

ஆண்டு சந்தா/ ரூ.3000 அல்லது அமெரிக்கா டாலர் $100

ஆயுள் சந்தா/ரூ.20,000 அல்லது அமெரிக்கா டாலர் $600

சந்தா அனுப்ப வேண்டிய வங்கி கணக்கு எண்:

The Karur Vysys Bank Saidapet Branch: MR.K.M.Julian

IFSC Code: KVBL0001651.

A/c **No: 1651173000000900**

**Google Pay : 9382172884** paytm **9382172884**

# ஆசிரியர் உரை

**சேர, சோழ, பாண்டியர் மற்றும் காமராஜர் வழி வந்த நாடார்களே!!!**



அனைவருக்கும் புத்தாண்டு பொங்கல் நல்வாழ்த்துக்கள்!!! இந்த ஆண்டு உங்களுக்கு சகல பாக்கியங்களும் கிடைக்கட்டும், வாழ்த்துக்கள்!!!!

2023 ஆம் ஆண்டு நாடார்களுக்கு அதிக சோதனையான ஆண்டு என்றே கூற வேண்டும். கொரானா கால நஷ்டத்திலிருந்து இன்னும் மீளாத காலத்தில் இந்த டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட கடும் புயலாலும், மழையாலும் ஏற்பட்ட வெள்ள பெருக்கு சென்னையை அதிகமாக தாக்கியது. பலருக்கும் ஏகபட்ட நஷ்டங்கள் முக்கியமாக அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் நாடார்களே. சிறு வியாபாரிகள், மளிகை கடை, பெட்டி கடை, தள்ளுவண்டி கடை போன்றவைகள் வைத்து தென்னக நாடார்கள் அதிகமாக உழைப்பால் வாழ்ந்து வந்தார்கள். இந்த புயலால் தரை பகுதி வீட்டில் வசித்தவர்களுக்கு அதிக பாதிப்பு ஏற்பட்டது. நம் அண்ணாச்சி கடைகள் அதிகமாக தரை பகுதி கடைகளில் தான் இயங்கி வருகிறது. அதில் பெரும்பான்மையான பள்ளி பொருட்கள் நனைந்து வீணாகிவிட்டது. சென்னையில் அதிகமாக பாதிப்பு அனுபவித்தவர்கள் நாடார்களே அதே போல் தென் மாவட்டங்களில் நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி போன்ற தென்மாவட்டங்களில் கடுமையான வெள்ளம், அங்கு வசிப்பவர்கள் அதிகமானவர்கள் நாடார்களே! அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்கள் இன்னும் கணக்கிட முடியவில்லை வாழை தோப்பு, சிறு விவசாயம், தென்னந்தோப்பு, ஆடு மாடு, கோழி போன்ற அனைத்தும் பாதிக்கு பாதி சேதமடைந்துவிட்டது. இவற்றையெல்லாம் கணக்கிடும் போது கடந்த ஆண்டு கஷ்டத்தையும் நஷ்டத்தையும் அதிகமாக அனுபவித்தவர்கள் நாடார்களே!

ஆகவே நாடார்களே நாம் 2024ம் ஆண்டு முதல் கடுமையாக உழைக்க வேண்டும் நம் மூதாதையர்கள் வழி நடந்து நமது பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற பெரியவர்கள் அறிவுரைப்படி நம் இளைஞர்கள் தன்னை மாற்றி கொள்ளவேண்டும். ஆங்காங்கே ஆராய்ந்து பார்க்கும் போது வேலையில்லா வாலிபர்கள் தனது இளம் வயது படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு சங்கம், வாட்சப், ஜாதி சண்டை மத சண்டை போன்றவற்றில் அதிக ஈடுபாட்டோடு இருப்பதை மாற்றி நல்ல உத்யோகம், இழந்தவைகளை ஈடுகட்டும் வருவாய், படிப்பு, பெரியவர்களின் சொல்கேட்டு தங்களை மாற்றி சமுதாயத்தை உயர்த்த வேண்டும் இளைஞர்களே! உங்களை உணர்வீர்களா?

தமிழகத்தில் ஏற்பட்ட கடும் வெள்ள பாதிப்பு இடங்களில் தன்னலம் கருதாது பல உதவிகள், நலத்திட்டகள் என நம் நாடார் சமுதாயத்தினர் மனமுவந்து துணிவுடன் செய்தார்கள் குறிப்பாக அன்னை வேளாங்கண்ணி செயலாளர் திரு.தேவ் ஆனந்த் அவர்கள் பல இடங்களுக்கு சென்று பல நலத்திட்டங்களை செய்தார்கள் அவர்களுக்கு எங்களது பாராட்டுக்கள்.

அதே போல் என்.டி.ஆர்.பவுண்டேஷன் நிர்வாகிகள் குறிப்பாக செயலாளர் பாலகிருஷ்ணன், தலைவர் ஜே.அர்னால்ட்அரசு இவர்களது பெரும் முயற்சியால் நெல்லை தூத்துக்குடி பகுதியிலுள்ள பெரும்பான்மையான மக்களுக்கு பல உதவிகளை செய்தார்கள். இதற்கு தோள்கொடுத்து உதவிய நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும் எங்களது பாராட்டுக்கள்.



என்.டி.ஆர்.பவுண்டேஷன் நிர்வாகிகள்

## வெள்ள நிவாரண நிதி:

1.லட்சுமணன்-1000.
2.சசிகாந்த் பெங்களூர் -2000
3.ஜே.பேச்சியம்மாள் -1000
4.மும்பை செல்வராஜ்-1500
5.கிருஷ்ணா ராதாகிருஷ்ணன்-1000
6.மும்பை புவனேஸ்வரன்-1000
7.ஜே.சண்முகராஜன்-1000
8.கிஷோர்-1500
9.தேவ் ஆனந்த்-5000
10.மும்பை முருகன்-1000
11.டாக்டர்.பழனிச்சாமி-1000.
12.எபிநேசர் சாமுவேல்-500
13.செந்தில் திருப்பூர்-500
14.ரமேஷ் ராமலிங்கம்-1500
15.சார்லஸ் துரைசிங்-1000
16.ரவிக்குமார்-1000
17.மும்பை சூசை நாடார்-500
18.கண்ணன் திருச்சி-1000
19.விஜயகுமார்-500
20.ஆடிட்டர் செல்வகணேஷ் -2000
21.எம்.குணசேகரன்-1000
22.ஜனகதேவி-5000
23.அர்னால்ட்அரசு-5000
24.மாவடி அசோக்-1000
25.மகாராஷ்டிரா விஜயகுமார்-1000
26.எஸ்.பாலகிருஷ்ணன்-1500
27.கரூர் முருகேசன்-1000
28.ஆனைகுடி வீரகுமார்-1000
29.விமல் ஆதித்தன்-500
30.மதுரை.வைரக்கனி-2000
31.மும்பை ஆர்.எஸ்.மணி-2000
32.நேவி மும்பை சுதாகர்-1000
33.ஜெய கிருஷ்ணன்-2000
34.டாக்டர்.எஸ்.பி.சரவணன்-1000
35.ஆர்.சுரேஷ்-500
36.லிங்கராஜ்-5000
37.கேசவ்.USA.-3000
38.Lt col மனோகரன் -5000

மொத்த வரவு-64000

நலத்திட்ட உதவிகள் செலவு:

1.ஆறுமுகநேரி--- 21000
2.பரமன்குறிச்சி.---14800
3.குரும்பூர்----------15000

மொத்த செலவு.......50800

இருப்பு..................13200.

ஜே.அர்னால்ட் அரசு தலைவர்.
என்டிஆர்.பவுண்டேஷன். செல்: 9382826686...

# விழித்தெழு!! இளைஞனே...விழித்தெழு

## *மனிதம் தான் தீர்வாகும்!!!*

மிக்ஜாம் புயலால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூவர் மாவட்டங்கள் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டது. டிசம்பர் 3,4ம் தேதிகளில் மிக்ஜாம் புயல் சென்னையை புரட்டி போட்டது. கடந்த 47ஆண்டுகளில் காணாத கடும் மழையின் சீற்றம் காரணமாக சென்னையில் 73 செ.மீ மழை கொட்டி தீர்த்தது. கடந்த டிசம்பர் 4ம் தேதி மிக்ஜாம் புயல் காரணமாக பெய்த கனமழையினால் ஒட்டு மொத்த சென்னையையும் புரட்டி போட்டுவிட்டது. 2015-ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் வெள்ளம் சென்னைக்கு முக்கிய பாடமாக இருந்த போதும், அந்த அனுபவத்தை கொண்டு இந்த புயல் மழையை எதிர்கொள்ள முடியவில்லை. இதற்கு முக்கிய காரணம், ஒரே நாளில் 40-செ.மீ வரை மழை பொழிந்தது தான். சென்னையின் ஆண்டு சராசரி மழை அளவு 100மிமீ முதல் 1100மி.மீ. ஆனால் இதில் மூன்றில் ஒரு பகுதி மழை கடந்த 4ம் தேதி பெய்திருக்கிறது. இது தான் பெரும் வெள்ளத்திற்கு காரணம். வெள்ளத்தில் ஏராளமான பொருட்கள் அடித்து செல்லப்பட்டிருக்கின்றன. சுமார் 4 லட்சம் வாகனங்கள் சேதமடைந்தன. இதில் பெரும்பாலும் பைக்குகளும், ஆட்டோக்களும் தான் இதனால் சாமானிய மக்களின் வாழ்வில் கூடுதல் பொருளாதார சுமை ஏறியிருக்கிறது. இந்நிலையில் பாதிப்புகளில் இருந்து மக்கள் இன்னும் மீள முடியவில்லை. இதில் மனித உயர்பலியும், குடிசைகளும் சேதமடைந்து இருக்கின்றது.



எட்டு வருடம் முன்பு 2015ல் ஏற்பட்ட சென்னை வெள்ளத்தில் இருந்து நாம் பாடம் கற்றுக் கொண்டோமா? தற்போது 2023 பெரு மழை பாதிப்பில் இருந்து என்ன பாடம் கற்றுக் கொள்ளப் போகிறோம். நவீன அறிவியல் தொழில் நுட்ப உதவியோடு வழஙகப்பட்ட வானிலை அறிக்கை வங்காள விரிகுடாவில் உருவான குறைந்த தாழ்வுழுத்தம் சூறாவளியாக மாறும் என்றும், அதன் நேரம், வேகம், பாதை ஆகியவற்றையும் சரியாகவே கணித்தது ஆனாலும், அறிக்கையின் கணிப்பை மீறி பலத்த காற்றுடன் கூடிய சூறாவளி வடக்கு நோக்கி எதிர்பார்த்த வேகத்தில் நகராமல் சற்றே மேற்கு நோக்கி நகர்ந்து 16மணி நேரம் வட தமிழகத்தைச் சூழ்ந்திருந்தது. இதனால் சென்னை மற்றும் அண்டை மாவட்டங்களில் 36 மணி நேரம் தொடர் மழை பெய்தது. இதன் காரணமாக 2015-ஐ விட 2023-ல் மழையின் அளவு அதிகமாக இருந்தது.

**பரவலான பலத்த பாதிப்பு:-** சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூவர் மாவட்டங்கள் நான்கும் மழை வெள்ளத்தில் தத்தளித்தன. வீதிகளில காட்டாறு வெள்ளம் போல கரைபுரண்டோடியது. மரங்கள் வேரோடு சாய்ந்தது. வாகனங்கள் நீரில் மூழ்கி இழுத்துச் செல்லப்பட்டன. சாலை, ரயில், விமானப் போக்குவரத்துக்கள் முடங்கின. நிவாரணம் மற்றும் பேரிடர் மீட்பு பணிகளுக்கு படகுகளைப் பயன்படுத்த வேண்டி இருந்தது. பால் மற்றும் குடிநீர், அன்றாட தேவைகள் விநியோகம் தடைப்பட்டது. குழந்தைகளுக்கு பால் பவுடர் கூடக் கிடைக்கவில்லை.

ஆயிரக்கணக்கான குடியிருப்பு பகுதிகளுக்குள், வீடுகளுக்குள், தொழிற்பேட்டைகளுக்குள், வியாபார நிறுவனங்களிலும் வெள்ள நீர் புகுந்து வீட்டு உபயோக பொருட்கள், தொழில் இயந்திரங்கள் பழுதாகியுள்ளன. பயிர்கள் நாசமடைந்தன, கால்நடைகள் இறந்தன. பல குடும்பங்களில் குடும்ப அட்டை, பிறப்புச் சான்று போன்ற பல ஆவணங்களை இழுந்தனர். மழை நீருடன் குப்பைகள், தோட்டக் கழிவுகள், பிளாஸ்டிக் கழிவுகள், கழிவுநீர் கலந்து துர்நாற்றம் அடித்து சுகாதார சீர்கேட்டுக்கு வழிவகுத்தது. தகவல் தொலைத் தொடர்பு பாதிக்கப்பட்டது. மின்சாரம் தடைப்பட்டது. சென்னை உள்ளிட்ட நான்கு மாவட்டங்களில் 1.75 கோடி மக்களும், 3.75 லட்சம் தொழிற்சாலைகளும் பாதிக்கப்பட்டது.

**ஏன் இந்தப் பிரச்சனை?**

தற்போதைய அறிவியல் தொழில்நுட்பத்தால் வானிலை மாற்றங்களைக் கணிக்க மட்டுமே முடியும். சூராவளி, பெருமழை போன்ற இயற்கை சீற்றங்கள் உருவாவதை தடுக்கவோ, அதன் பாதையை மாற்றவோ, வேகத்தை குறைக்கவோ முடியாது. **"புவி வெப்ப மயமாதல் உலகளாவிய கால நிலை மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது"**. இதனால் வரலாறு காணாத இயற்கை சீற்றங்கள், பெருமழை, வெள்ளம், வறட்சி, காட்டுத்தீ, பனிப்பாறைகள் உருகுதல், பவளப் பாறைகள் அழிவு, மண் அரிப்பு, கடல் நீர் மட்டம் உயர்தல் போன்றவை பெருகி வருகின்றன.

**வெப்பமயமாதலுக்கு** தீர்வு காண தீவிர முயிற்சி இல்லை.

அதிகமான மக்கள் சென்னை போன்ற பெரு நகரங்களை நோக்கி வாழ்வாதாரம் தேடி இடம் பெயர்கின்றனர், **தொலை நோக்கு பார்வையோடு பெருநகர் கட்டமைப்புகள் உருவாக்கப்படுவதில்லை, சீரமைக்கவும் படுவதில்லை மாறாக சிதைக்கப்படுகின்றன. வளர்ச்சி என்ற பெயரில் திட்டமிடப்படாத நகரமயமாதல் நடக்கிறது.**

**மாற்றுக் கொள்கைகள் திட்டங்கள் வேண்டும்:**

இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்க மாற்று கொள்கைகள், செயல் திட்டங்கள் நடவடிக்கைகள் வேண்டும்.

மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்னை சைதாப்பேட்டை, நெடுங்குன்றம், பொத்தேரி அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனங்களின் செயலாளர், சமூக சேவகர் டாக்டர். தே.தேவ் ஆனந்த் அவர்கள் நண்பர்கள் உடன், இணைந்து சென்னை உள்ளிட்ட புறநகர் பகுதிகளில் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக வெள்ளம் பாதித்த பகுதிகளில் பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்களான, பால், பிஸ்கட், பிரட், உணவு, பாய், போர்வைகளும் வழங்கினார். சென்னை தைப்பேட்டை, ஜோதியம்மாள் நகர், தாம்பரம், முடிச்சூர், வரதராஜாபுரம், பள்ளிக்கரணை, வேளச்சேரி, வடசென்னை வியபாசர்பாடி எம்.ஜி.ஆர்.நகர், முல்லை நகர் உள்ளிட்ட இடங்களுக்கு சென்று வழங்கினார் மனித நேயம் வளர வேண்டும் அனைவரிடத்திலும்!!!



**என்றும் கல்விப் பணியில் Dr.தே.தேவ்ஆனந்த்** MBA.,M.Com.,MHRM.,MSW.,M.L(Labour & Admn, Law), Ph.D.,
**செயலாளர், அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.**
**www.annaiveilankannis.com E-mail:devanand22@gmail.com Help line:9282144444. 044-43523712.**




எப்போதும் வென்றான் ஸ்ரீ சோலையப்ப சுவாமி துணை

**அடையார் ஆனந்த விநாயகர்**

**காய்கனி & பழங்கள் அங்காடி**

(எங்களிடம் தரமான காய்கனி அனைத்தும் கிடைக்கும்)

**அடையார் முருகன் டிராவல்ஸ்**

நெ. 69/14, 2வது குறுக்கு தெரு, கஸ்தூரிபாய் நகர், அடையார்,
சென்னை-20 செல்: 9840038140, போன்: 24416633, 42116663,





உரிமையாளர்:
த.பரமசிவன்

**24 மணி நேர சேவை**





**உரிமை:T.DURAI, T.KUMAR. Cell:9444316813**

**பேபி. புரோட்டீன்ஸ்**

**WHOLESALE & RETAIL**

**2/37, 4th Lane, 1st Street Main Road, Shasthri Nagar, Adyar, Chennai-20. Ph:24465921. FREE HOME DELIVERY.**





Prop.S.Balakrishnan

**(FOR HIRE CENTRING SHEET, COLUMN BOX, SPAN, PROPS ETC.,)**

SELVAM TRADERS

**New No : 7, Old No : 6, Medavakkam Main Road,**
**Madippakkam, Chennai- 600 091**
**Ph: 9841193884, 044-22242096**






**R.S.SANTHANAM**


**Sri Brammasakthi Amman Thunai Sri Sudalaimadaswami Thunai**

**R.S.SANTHANAM**

**ரேவதி ஹார்டுவேர்ஸ்**

Dealers in: Cement, Steel Quality Bricks, Sand, Blue Metal and Building Material Suppliers.

Stockist : Coramandel, ultra Tech, Zuari / Priya Cement

38/24-A, Poonamallee Road, Ekkattuthangal,
Chennai-32. Ph:22252948, 22250015 Cell: 9840042948.





**SVS நாடார் திருமண தகவல் நிலையம்**

**(அரசு அங்கீகாரம் பெற்றது.பதிவுஎண் 1004/2013)**

No.105, நல்ல தம்பி சாலை அண்ணாநகர், பம்மல், சென்னை-75.

எங்களிடம் இந்து சி.எஸ்.ஐ, ஆர்.சி நாடார் ஆண்/பெண் வரன்கள் (டாக்டர், இன்ஜினியர், வியாபாரிகள் மற்றும் உள் நாடு, வெளிநாட்டில் பணிபுரிபவர்களின்) விவரங்கள் நிறைய உள்ளன. உங்கள் மகன், மகள் திருமணத்திற்கு

**தொடர்புகொள்ளவும்.ஆலோசகர்:D.சுந்தர்சிங் நாடார்B.A அரசு இணைச் செயலாளர் (ஓய்வு) செல்:9840093000, 9445093000 9698793000, 8248707424**

**E.mail:sundarsinghnmb@gmail.com / website: www.svsnadarmatrimony.com**




ஆர்.சித்தர்ராஜ் நாடார்
குட்வில் ரியல் எஸ்டேட்
136, ஆநீகாடு ரோடு, வளசரவாக்கம்,
சென்னை-87. செல்:9444083769



T.Bernet Johnson M.E.,MBA., Managing Director. 72009 06699 / 90032 86677 7200506699.
JEHOVAH
GROUP OF COMPANIES
•Lab Ezuipments Manufacturing •Industrial Lunricant Distributor
•Automotive Lubricant Distributor •Industrial Equipments & Spares
E-jehovahjirehengineering@gmail.com / W: www.jehovahengg.com
No:60. 4th Main Road, L&T Colony, CRR Puram, Manapakkam, Chennai-125





C.மதியழகன்
செல்:9789095625.
வாழ்க வளமுடன்
ஸ்ரீ கணேஷ் பவன்
SGB
எண்:6, முத்துலிங்க ரெட்டி தெரு, (எம்.ஆர்.தியேட்டர் பில்டிங்) மேற்கு தாம்பரம், சென்னை-45. போன்:M.சுரேஷ். செல்:9840945243.
எண்:1, வள்ளலார். தெரு, சேலையூர், கேம்ப்ரோடு, சென்னை-73.



SUGAM HOSPITALS
Symbol of Health
THIRUVOTTIYUR & CHROMPET



MULTI SPECIALITY HOSPITAL



- WORLD CLASS INTENSIVE CARE UNIT
- 24 HOURS TRAUMA AND EMERGENCY CARE
- HITECH OPERATION THEATRES

THIRUVOTTIYUR 40 50 60 70
#349, T.H.Road, Thiruvottiyur, Chennai - 19.

CHROMPET 85 85 85 85 50
#107A, G.S.T. Road, Chrompet, Chennai - 44

Dr.D.B.D.Sathiakumar M.D., Dr.Sheila Sathiakumar M.B.B.S., D.H.M

OUR GROUP DIAGNOSTIC CENTERS

HIBEAM SCANS
TOTAL IMAGING

ROYAPURAM 25 95 17 57 PONNERI 27 97 34 44





செல்: 98405 57997, 98415 49955

**V.S.குமார் ரியல் எஸ்டேட்**

வீடு, மனை, வாங்க விற்க அணுகவும், வீடு, ஆபிஸ், கடை, குடோன் கம்பெனி வாடகைக்கு அணுகவும்.
டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, வளசரவாக்கம், சென்னை-87





புத்தாண்டு பொங்கல் நல்வாழ்த்து!

**SRI DEVI**
**Enterprises**
**Textiles & Readymades**
**1-A, B, Dhandeeswaram**
**Main Road, Velachery,**
**Chennai-42. Tel:22431334.**
**Cell:9444066626.**







T.பரஞ்ஜோதி செல்வராஜ்
தலைவர், வேளச்சேரி நாடார் சங்கம்




நெல்லை தூத்துக்குடி மாவட்ட மக்களுக்கு நெல்லை தூத்துக்குடி நாடார் மகிமை பரிபாலன சங்கம் 45 டன் உணவு பொருட்கள் சுமார் 30 லட்சம் ரூபாய் பெருமானம் உள்ள அரிசி, கோதுமை, பருப்பு வகைகள், சர்க்கரை, ரவை, மளிகை பொருட்கள் வழங்கப்பட்டது. தலைவர் வி.ஆனந்தராஜ் நிர்வாகச் செயலாளர் பி.சந்திரசேகர், துணைத்தலைவர்கள் ஏ.ராஜாராம், எஸ்.ரவிச்சந்திரன், பி.கணேசன், நிர்வாக குழு உறுப்பினர்கள் ஏ.பி.பெரியசாமி, ஜே.சீனிவாசன், எம்.சந்தானந்தம், கே.அருண், வி.ஆனந்தசெல்வன், பி.சாந்தகுமார், பூலோக பாண்டியன், செந்தில் குமார் ஆகியோர் உள்ளனர்.

நம்முடைய நெல்லை தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 17, 18ஆம் தேதிகளில் பெய்த அதிக கன மழை காரணமாக வெள்ளம் கரைபுரண்டு ஓடி அனைத்து இடங்களையும் மழை வெள்ளம் சூழ்ந்தது. பெய்த வரலாறு காணாத மழை அதன் தொடர்ச்சியாக வெள்ளம் காரணமாக ஒரு வாரம் எங்கள் மொத்த மாவட்டமும் முடங்கி போய் அனைத்து மக்களும் ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு இல்லாமல் பால் இல்லாமல், உணவுப் பொருட்கள் இல்லாமல் இந்த மழை நம்மை என்ன செய்யப் போகிறது என்று தெரியாமல் மரண பீதியில் மின்சாரம் இல்லாமல் தொலைத்தொடர்பு சாதனங்கள் எதுவும் இல்லாமல் உலகில் என்ன நடப்பது நடந்து கொண்டிருக்கிறது என்று தெரியாமல் கற்காலத்தில் இருந்தது போல் ஒரு சூழ்நிலையில், ஒவ்வொரு சகோதர, சகோதரிகளும் இருந்தனர். மழை வடிந்து மக்கள் தங்களுடைய இழப்பீடுகளை கணக்கிடும்போது தொலைந்து போன ஆடுகள், மாடுகள், நண்பர்கள் என மொத்த மாவட்டமும் தம்பித்து நின்றது கனமழை வெள்ளம் காரணமாக 35 மக்களுக்கும் மேல் இறந்துள்ளனர் என்று தற்போது தெரிய வருகிறது. காலம் காலமாக மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் பாலமாக திகழும் வணிகர்கள் அரசுக்கு வரி என்ற பெயரில் கோடிக்கணக்கில் வசூலித்துக் கொடுத்த அவர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தை முழுவதுமாய் தொலைத்து விட்டார்கள் சின்ன வியாபாரி பெரிய வியாபாரி என்று இல்லாமல் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் மேற்கொண்டு அவர்களுடைய கடைகளை பொருட்களை நிரப்ப பொருளாதாரம் இன்றி தவித்து வருகிறார்கள். அரசு வணிகர்களையும் பொதுமக்களின் ஒரு பிரிவாக பார்த்து காப்பீடு என்று ஒதுங்காமல் அனைவருக்குமே இழப்பீடு வழங்க வேண்டும்.

மேற்கொண்டு வணிகத்தை சிறப்பாக செய்ய வங்கிகள் மூலம் கடன் உதவி வட்டி இல்லாத கடன் வழங்க முன்வர வேண்டும் வணிகர்கள் மீண்டும் ஒரு கஞ்சித் தொட்டி திறக்காமல் அரசாங்கம் தடுக்க வேண்டும். தாமிரபரணி ஆற்றின் வெள்ளப்பெருக்கு காரணமாக இடிந்து போன பழைய வீடுகளுக்கு பதிலாக புதிய வீடுகளை வீடு இழந்த மக்களுக்கு அரசு கட்டித்தர ஏற்பாடு செய்ய வேண்டும். மக்களுக்கு நிவாரண நிதியாக ஒரு குடும்பத்திற்கு 25 ஆயிரம் ரூபாய் கண்டிப்பாக அரசாங்கம் வழங்க வேண்டும் தாயுள்ளம் கொண்ட தமிழக அரசு இழந்த ஆடுக்கு பதிலாக ஆடு, மாடுக்கு பதிலாக மாடு, பொருட்களுக்கு பதிலாக பொருட்கள் மக்களுக்கு சேரும் படி பார்த்துக் கொள்ள வேண்டும். உடைந்து போன கிணறுகள் அனைத்தையும் சீர் செய்ய மாவட்ட நிர்வாகம் கண்காணிக்க வேண்டும். போர்க்கால அடிப்படையில் சாலைகள் அனைத்தும் சீர் செய்ய வேண்டும். விவசாய நிலங்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன அழிந்து போன வேளாண்மைக்கு தகுந்த நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.

மாநில அரசாங்கம் நெல்லை தூத்துக்குடி மாவட்டங்களுக்கு இழப்பீடு வழங்க போதுமான மத்திய அரசு தமிழகத்திற்கு வழங்க வேண்டிய அனைத்து நிதிகளையும் விரைவாக வழங்கி உதவிபுரிய வேண்டும் என நெல்லை தூத்துக்குடி நாடார் மகிமை பரிபாலன சங்கம் தமிழக அரசையும் மத்திய அரசையும் கேட்டுக்கொள்கிறது. - நன்றி-

போரூர்.வி.ஆனந்தராஜ், தலைவர் நெல்லை நாடார் மகமை பரிபாலன சங்கம். செல்:9444063899.

# தமிழக வரலாற்றில் எழுச்சியும் வீழ்ச்சியும்

**முதற் பராந்தக சோழன் (கி.பி.907 - 953)**

ஆதித்த சோழன் கி.பி.907ல் இறந்தவுடன் அவன் புதல்வனாகிய முதற் பராந்தக சோழன் தஞ்சை மாநகரில் சோழ இராச்சியத்திற்குச் சக்கரவர்த்தியாக முடி சூட்டப் பெற்றான். கி.பி.907ல் சோழ இராச்சியத்தின் ஆட்சியை ஏற்றுக் கொண்ட காலத்தில் வடக்கேயுள்ள திருக்காளத்தி வரையில் தொண்டை மண்டலம் இவன் ஆட்சிக்குட்பட்டிருந்தது. (அந்நாளில் பாண்டி நாட்டில் ஆட்சி புரிந்து வந்தவன் மூன்றாம் இராச சிம்மபாண்டியன் என்போன்)

முதல் பராந்தக சோழன், மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டுகள் இவனை மதுரை கொண்ட கோப்பர கேசரிவர்மன் என்று கூறுகின்றமையின் கி.பி.910ம் ஆண்டில் இவன் பாண்டி நாட்டின் மீது படையெடுத்துச் சென்று மதுரையை கைப்பற்றியிருத்தல் வேண்டும். அந்நாளில் பாண்டி நாட்டில் ஆட்சி புரிந்து கொண்டிருந்தவன் மூன்றாம் இராச சிம்ம பாண்டியன் என்போன். பாண்டிப்படையும் ஈழப்படையும் ஒருங்கு சேர்ந்துக் கொண்டு இராச சிம்ம பாண்டியன் பராந்தகனோடு போர் புரியப் புறப்பட்டான். வெள்ளூர் என்ற இடத்தில் இரு வேந்தவர்க்கும் பெரும் போர் நடைபெற்றது. அப்போரில் பராந்தகன் அளவற்ற வீரர்களையும் யானைகளையும் குதிரைகளையும் கொன்று குவித்து மீண்டும் மதுரை மாநகரைக் கைப்பற்றினான். வெள்ளூரில் நடைபெற்ற பெரும்போரில் இராசசிம்மன் தோல்வியுறவே பரந்த கன்வெற்றி பெற்றுப் பாண்டி மண்டலத்தைக் கைப்பற்றினான்.

இவன் இராச சிம்மனோடு வெள்ளூரில் நிகழ்த்திய இப்போர் கி.பி.919ஆம் ஆண்டில் நடைபெற்றிருத்தல் வேண்டும். இப்போர் நிகழ்ச்சியே பராந்தகன் பாண்டி நாடு முழுமையும் கைப்பற்றுவதற்குப் பெரிதும் ஏதுவாக இருந்தது எனலாம். இராஜ்ஜியத்தை இழந்த இராசசிம்மபாண்டியன் சிங்களத்திற்குச் சென்று அந்நாட்டரசனாகிய நான்காம் தப்புலன்பால் (கி.பி.923 - 934) உதவி பெறுமாறு அங்குத் தங்கியிருந்தனன். இராச சிம்மன் தன் முன்னோர்களிடமிருந்து தனக்குக் கிடைத்த சுந்தரமுடியையும், பிற அரசுச் சின்னங்களையும் அவ்வேந்தன்பால் அடைக்கலப் பொருளாக வைத்துவிட்டு, தன் தாய் வானவன் மாதேவியின் பிறந்தகமாகிய சேர நாட்டிற்குச் சென்று அங்கு வசித்து வந்தான்.

பராந்தக சோழன், பாண்டி நாடு முழுமையும் தன் ஆட்சிக்குட்படுத்திய பின்னர் அந்நாட்டின் தலைநகராகிய

**தொகுப்பு:கீழக்கடை ந.ஆ.அ.மா.ஜெயபாஸ்கரன். து.அருணாசலபுரம்.**

மதுரையில் முடிசூட்டுவிழா நடத்துவதற்கு முயன்றபோது பாண்டியர்க்குரிய முடியும், பிற அரசச் சின்னங்களும் அங்கு காணப்படவில்லை. பராந்தகன் ஈழ நாட்டுப் போரில் வெற்றி எய்தியும் தன் விருப்பத்தை நிறைவேற்ற இயலவில்லை. இவனது ஆட்சியின் 37ஆம் ஆண்டுக் கல்வெட்டுகள் இவனை "மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பர கேசரிவர்மன்" என்று குறிப்பிடுவதால் இவனது ஈழப்படையெழுச்சி கி.பி.944 ஆண்டிற்கு முன்னர் நிகழ்ந்திருத்தல் வேண்டும். பராந்தகனது ஆட்சியின் 15ஆம் ஆண்டில் வரையப் பெற்ற உதயேந்திரச் செப்பேடுகள் இவன் இரண்டு வாணர் குல அரசர்களை வென்று அன்னோரது வாணகப்பாடி நாட்டைக் கங்க மன்னனாகிய இரண்டாம் பிருதிவிபதிக்கு வழங்கியதோடு அவனுக்குச் செம்பியன் மாவலிவாணராயன் என்ற பட்டமும் அளித்தனன் என்று கூறுகின்றன.

இனி வாணர் என்பார் பாலாற்றுக்கு வடக்கே சித்தூர் ஜில்லா வரையில் அமைந்திருந்த நிலப்பரப்பாகிய வாணகப்பாடி நாட்டைப் பண்டைக் காலத்தில் ஆட்சி புரிந்த ஓர் அரசர் மரபினர் ஆவர். அன்னோர் வல்லம், வாணபுரம் என்ற நகரங்களனைத்தும் தலை நகரங்களாக கொண்டு இரண்டு நூற்றாண்டுகள் அப்பகுதியில் ஆட்சி புரிந்தனர். அவர்கள் மாபலியின் வழியில் வந்தவர்கள். தொண்டை மண்டலம் பல்லவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்தில் வாணர்குல வேந்தர், அவர்கட்குத் திறை செலுத்திக் கொண்டு குறுநில மன்னராக இருந்து வந்தனர். முதல் ஆதித்தசோழன் அபராஜித வர்மனை வென்று தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிய நாட்களில் வாணர் சுயேச்சையெய்தி, பிறகு தனியரசு புரிந்து வந்தனர். பராந்தகன் வெதும்ப மன்னனையும் போரில் வென்றான். வைதும்பர் என்பவர் கி.பி.9ம் நூற்றாண்டில் ரேநாண்டு நாட்டை ஆண்ட தெலுங்கர் என்றும் அன்னோர் கங்கர்க்குப் பகைஞராகவும், வாணர்க்கு நண்பராகவும் இருந்தவர். இனி பராந்தகனது ஆட்சியின் 34ஆம் ஆண்டாகிய கி.பி.941ல் இவன் படைத்தலைவன் சிறுகுளத்தூர் மாறன், பரமேசுவரனான செம்பியன் சோழியவரையன் என்பவன் சீட்புலியை வென்று நெல்லூரையும் அழித்துத் திரும்புங்கால் தொண்டை நாட்டிலுள்ள திருவொற்றியூரில் தங்கி அவ்வூர்க்கோயிலில் நாள்தோறும் நுந்தாவிளக்கு எரிப்பதற்குச் சாவர மூவாப் பேரோடுகள் தொண்ணூறு வைத்து வந்தான். (தொடரும்)




S.K.இராகவன் **இராஜா ஏஜென்சி**

asianpaints

Dealers in: Hardwares, Paints, Cements, Steel, Sanitarywares & All Building Materials

பிளாட் எண்:1, ஆண்டவர்நகர், பாரதிசாலை மெயின் ரோடு, இராமாபுரம், சென்னை-89

**Ph:044-22491790, 22492340 ,Cell: 9841169098, 70100 00824**



# ஸ்ரீ கெஸ்ட் ஹவுஸ்

# SHREE GUEST HOUSE

A/c & Non A/c Rooms Available. 9444683121. 9444180067.

57, East Raja Street, Mamallapuram, - 603104, Kanchipuram District.

New Happy Rewinty, 37, ஒத்தவாடை, நியர் பீச் ரோடு, 9443778291, 7338898291.

# நாடார் திருமணச் சடங்குகள்

--எஸ்.ஏ.இராம சந்திரடோகோ....

**மாதொரு பாகனார் பூஜையும் நவக்கிரக வழிபாடும்:-**

மணமுடி புனைந்த மணமகன் மீண்டும் மணமேடையை அடைகிறான். இங்கு சக்தியாகி சிவமாகித் தனிபெரும் மூர்த்தியாகி தையலிடம் கொண்ட தனிப்பரம் பொருளுக்கு வழிபாடு நடக்கிறது. இதன் மூலம் திருமண வாழ்வில் இறங்கும் புத்தம் புது மணமக்கள் ஈருடலும் ஒருயிருமாய் வாழ வேண்டும் என்பதே இதன் கருத்து விளக்கமாகும்.

இச்சந்தர்ப்பத்தில் மணமகன் மணமேடையின் இடப்புறத்தில் அமருகிறான். மணமகளோ அவனுக்கு வலப்புறத்தில் அமருகிறாள். அவ்வாறு அமரும் போது அவளை அந்நிய மாதாகவே அங்க அமரச் செய்கிறார்கள். திருமணத்திற்குப் பின்னரே மாதொருத்தி தனது கணவனின் இடப்பாகத்திற்கு உரியவள் ஆகிறாள். தையலிடம் கொண்ட தம்பிரானின் தத்துவத்தை இது காட்டா நிற்கும். எனவே ஆடவனின் வலப்புறத்தில் ஏறி உட்காரும் எந்தப் பெண்ணும் அந்நியவளாகவே கொள்ளுதல் முறை. இடப்பாகம் என்பது, கொண்ட மனைவிக்கே உரியது. அந்நிய நல்லாள் ஒருத்தியை திருமணத்திற்கு முன் வலப்பாகத்தில் அமரச் செய்து அவளுக்கு திருமாங்கல்யம் சூட்டிய உடனேயே அவள் அவனுடைய இடப்பாகமாகிறாள்

இவ்வாறு அமரச் செய்வதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. மணப்பெண் வரனின் வலது பக்கத்தில் அமர்ந்தால்தான். அவளுக்கு வசதியாக திருமாங்கல்யத்தைச் சூட்ட முடியும். இதற்காகவே வலப்புறத்தில் வைக்கப்டுவதாகவும் கொள்வர். நாடார் தவிர்த்த மற்றும் சமூகத்தவர்கள் மணமகளுக்கு தாலி கட்டும் போது அவர்களுக்கு முன்னால் எழுந்து நின்று அவளது கழத்தில் மாங்கல்யத்தை புனைவது உண்டு. ஆனால் நாடார் குலத்தவர் உட்கார்ந்த நிலையிலேயே பெண்ணுக்கு மாங்கல்யம் சூட்டுவர். நாடார் குலத்தவர் பண்பாடுகளில் இதுவும் ஒன்று

மாதொரு பாகனார் வழிபாடு முடிந்ததும் மணமகள் நவக்கிரகங்களுக்கு பூஜையும், சாந்தி வழிபாடும் நிகழ்த்துகிறாள். நவகிரகங்கள் பூமியில் வாழும் எல்லா உயிரினங்கள் மீதும் தாவரங்கள் மீதும் ஆதிக்கம் செலுத்துகின்றன. அவைகளின் ஆதிக்க சக்திக்குத் தகுந்தவாறே அந்தந்த ஜீவன்களின் தோற்றம், வளர்ச்சி, மறைவு என்பன யாவும் அமைகின்றன

மணமகன் தனது இல்லற வாழ்க்கையைத் தொடங்கு முன் அவ்வாழ்க்கையில் தனது உற்ற துணையாக முன்வந்த மடந்தை நல்லாளுடன் தான் நடத்தப்புகும் இல்லற வாழ்க்கை நன்மையாகவும் உத்தமமாகவும் நடைபெறுவதற்கு நவக்கிரகங்களின் சேர்க்கை "ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியா ரவர்கரும் மிகவே" என்ற முறையில் பிரார்த்தனை செய்து கொள்கிறான்

**முற்பிதாக்கள் வழிபாடு:-**

மணமகனும் மணமகளும் தமது இல்லற வாழ்க்கையைத் தொடங்கும் முன் தமது முற்பிதாக்களையும் சிந்தித்து அவர்களின் வழித்தோன்றல்களாக வந்து, தாம் தமது பிற்சந்ததியாரின் தோற்றத்திற்காகவும் விருத்திக்காகவும் இல்லற வாழ்கையை இனிது தொடங்குவதை நினைவுறுத்தி முற்பிதாக்களுக்கும் பிதுர்களுக்கும் ஞாபக வந்தனை வழிபாடு செய்து கொள்வது அவசியம். இதற்காகவே நவக்கிரகப் பூஜையைத் தொடர்ந்து, பிதுர் பிரார்த்தனை செய்கிறார்கள். இதனை வடமொழியில் சோபநாநீதீஸ் ரார்த்தம் எனக் குறிப்பிடுவர்.

இந்த வழிபாடு நாடார்கள் சம்மந்தப்பட்டமட்டில், விவாகத்திற்கு முந்திய நாளிரவில் தத்தம் குல வழிபாட்டிற்குப் பின்னர் நடத்தி' கொள்வதுண்டு. அவ்வாறு செய்ய வசதிப்படாத சந்தர்ப்பத்தில் மட்டும் முற்பிதாக்களின் வழிபாடு நவக்கிரக பூஜை முடிந்ததும் நடத்திக்கொள்ளுகிறார்கள். திருமணத்தை நடத்தி வைக்கும் புரோகிதர் அல்லது குருக்கள் முந்திய தினத்தில் முற்பிதாக்கள் வழிபாடு இருதரப்பிலும் நிறைவேறியதா என்று விசாரித்துக் கொள்வார். இல்லையேல் இதனை நடத்தி வைப்பார்.

**வாக்குத்தத்தம் என்னும் கன்னிகாதானம்:-**

மேற்கூறிய சடங்குகள் நிறைவேறியதும் மணப்பெண் கூறைப்புடவை உடுத்தியவளாய் மணமேடைக்கு அழைத்து வரப்படுகிறாள்: அவளை இப்போது அழைத்து வருபவள் வரனது சகோதரியாகும். இச்சகோதரியையே பொய்மூட்டி என்பார்கள். திருமாங்கல்யத்திற்கு உண்மையான முடிச்சு போடுகிறவன் மணமகனாகும். இக்கைங்கரியத்தை சிறப்பாக நடத்துவதற்கு அவனது சகோதரி உற்றத் துணையாக ஈடுபடுகிறாள். திருமாங்கல்யத்தை நியாயமான முறையில் மஞ்சள் நூலிழையில் இணைத்து கட்டப்பட வேண்டுமென்பதை முன்னர் தெரிவித்தோம். இந்த நூல் பருத்தி நூலாக இருந்த போதிலும் கருத்தளவில் வேதம், ஆகமம் முன்னையோர் நூல் முதலிய வழிமுறைகளின் கட்டமைப்பாகக் கொண்டு சுருதிப் பிரகாரம் அம்மங்கை நூல்முறை வழுவாது நடப்பதாகத் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்கிறாள் என்பதாகும்

மேடையில் மணமகளை வலப்புறத்தில் கிழக்குப் புறமாக அமரச் செய்கிறார்கள். உடன் மணமகளின் தந்தை மணமகனின் குடும்பப் பூர்வோத்திரத்தை முறையே அவரிடமே கேட்டுக் கேட்டு தெரிவிக்கிறார். தனது சொந்த பூர்வீகமான ஊரையும் அந்த ஊரில் அவரின் குடும்பத்திற்குரிய குடும்பப் பெயரையும் தெரிவித்து அக்குடும்பத்தின் வழித் தோன்றலாகிய அவரது பாட்டனின் பெயரைக்கூறி அவரது புத்திரனாகிய இன்னார் என வரனின் தந்தையின் பெயரையும் கூறி சிரஞ்சீவியாகவும் சகல நற்குணம் சம்பன்னராகவும், மகா விஷ்ணுவை நிகர்த்தவராகவும் உள்ள (வரனின் பெயரையும் கூறி) இன்னாருக்கு என விளக்கி, பின்னர் முறையே மணமகளின் தந்தை தனது ஊர், தனது குடும்பப் பெயர், தனது பாட்டனின் பெயரைக் கூறி அவரது குமாரனாகிய இன்னாரென தனது பெயரையும் கூறி தமக்கு புண்ணிய புத்திரியாகவும் சகல நற்குண சம்பன்னையாகவும் உள்ள மகாலஷ்மியை நிகர்த்தவளுமான சௌபாக்கியவதி இன்னாரை சகதர்மிணியாக கன்னிக்காதானமாய் கொடுக்கிறேன் என்று கூறுவார்.

(இதில் வரனின் தந்தை, பாட்டன் ஆகிய மூன்று தலை முறையினர் பெயரையும் கூறி, அதே போல் வதுவின் தந்தை, அவர் தந்தை, பாட்டன் ஆகிய மூன்று தலைமுறையினர் பெயரையும் கூறுவது குறைந்த பட்சம் அவசியமாகும். பரம்பரையாகவும், தலைமுறை தத்துவமாகவும் உள்ள பெரிய குடும்பங்களில் ஏழு தலைமுறை வரையுள்ள முற்பிதாக்களின் பெயர்களை கூறும் வழக்கமும் உண்டு. ஏழு தலைமுறை முதல்வர்களின் பெயர்களை குறிப்பிடுவது சாதாரணமானது. ஆனால் மூன்று தலைமுறைக்கு குறைந்த பட்சம் இங்கு வம்சாவழி குறிப்பிட வேண்டும்)

இவ்வாறே ஏற்பதாக வரனும் வாக்களிக்கிறார். இவ்வாக்குத்தத்தம் நிறைவேறியதும் மணமகளின் தந்தை மணமகளின் வலக்கரத்தைப் பற்றிப்பிடித்து பாணிக்கிரகணம் எனும் கையளித்தல் செய்விக்கிறார். இதனைக் கைப்பிடித்துக் கொடுத்தல் என்பர்.

இதனைத் தொடர்ந்து வரனின் தந்தை பெண்ணின் கையிலும் வழிந்தோடும் படியாகப் பாலைவார்க்கிறார். இதற்குத் தாரை வார்த்தல் என்பது பெயர். இந்தத்தாரை வார்த்தலினால் அப்பெண்ணங்கு அவ்வேளை முதல் மணமகனுடன் இணைபிரியாது பாலும் நீரும்போல் மனமிணைந்து வாழ்பவளாகவும் மணமகன் குடும்பத்துடன் இணைந்தவளாகவும் ஆகிறாள் என்பர். இத்தகுதிக்குப் பின்னரே அவளுக்கு திருமாங்கல்யம் சூட்டுவது முறை விளக்கம்.

சில நாடார் திருமணங்களில், திருமாங்கல்யம் சூட்டிய பின்னர் கன்னியாதானமாகிய தாரை வார்த்தலை நடத்துகிறார்கள். வசதியாக இருக்குமென்று இவ்வாறு செய்வதாகவும் சொல்லிக்கொள்கிறார்கள். இது சரியன்று. முறைப்படி மணமகன் -மணமகள் ஆகிய இரு குடும்பத்தினரும் மனமொத்து மணமகளை வரனுடைய குடும்பத்தவள் ஆக்கிய பின்னரே அவளுக்கு திருமாங்கல்யம் சூட்டப்படுவது முறை. திருமாங்கல்யம் சூட்டியதும் அவள் வரனுடைய இடப்பாகத்திற்குரியவளாகிறாள். தாரை வார்த்தலுக்குப் பின் மணமகன் மீண்டும் எல்லா ஏற்பாடுகளையும் அனுசரித்து மனப் பூர்வமாக மணமகளுக்கு திருமாங்கல்யம் சூட்டுவதாய் சங்கற்பம் செய்வதிலிருந்து இம்முறையே தகுதி எனக் கொள்ள வேண்டும்.



அரிசி மொத்த வியாபாரம்.

செல்:9840994451, 26380752 / 73.



# சிவசக்தி ரைஸ் டிரேடர்ஸ்

286, சி.டி.எச்.ரோடு, செல்வராஜ் காம்ப்ளக்ஸ், ஆவடி, சென்னை-54.

# செல்வராஜ் சூப்பர் மார்கெட்

286/1, சி.டி.எச்.ரோடு, ஆவடி, சென்னை-600 054.selvarajsupermarket@gmail.com





மரந்தலை மாடசாமி துணை

செல்:9840685266, 9380879313.



# MARS

## மார்ஸ் திருமண தகவல் மையம்

சென்னையில் 30 வருடமாக பெரும் தொழில் அதிபர்கள், டாக்டர்கள், இஞ்சினியர்கள், அனைவருக்கும் நிறைய திருமணங்கள் நடத்தி கொடுத்தவர் இந்து நாடார், கிறிஸ்துவ நாடார் சமுதாயத்தின் கைராசியான திருமண தகவல் மையம் அனைத்து மாவட்ட நாடார்கள் தொடர்புகொள்ளவும்.

**வேம்பார் கனகராஜ் நாடார்.**

**வீடு, மனை, தோட்டம் வாங்க விற்க அணுகவும்.**

நெ.25, நேதாஜி தெரு, அன்னை இந்திரா நகர், மூலச்சத்திரம், சென்னை-51,





AB

**Dr.M.Sundaralingam** B.SC.,B.VSC.,

PH:24895266 CELL: 9444015277

# ஆர்த்தி பிராய்லர்ஸ்

77, Nedunchezhian Street, (opp. M.G.R. Nagar Market) M.G.R.Nagar, Chennai-78.



SSS

Cell:9884687675, 9488491671.

அய்யா துணை



# திருமண தகவல் மையம்

**அமைப்பாளர்: P.சக்திவேல் நாடார்.**

பூர்வீகம் நாடார் உவரி எண்:42, அன்னை கமலா நகர், வீராபுரம் மெயின் ரோடு, நியூ காலனி பஸ் ஸ்டாப், ஆவடி, சென்னை-600 055.



**நாடார் திருமணச் சேவையில் 19 ஆம் ஆண்டில் கைராசியான**

# நாடார் விவாகம் திருமணத் தகவலகம்



36, காந்தித்தெரு, பூவரசூர், ஆறுமுகனேரி-628 202

செல்:9176051116, 9360539833. 04639-282222. 04639 296108.

nadar vivahammatrimony / www.nadarvivaham.in / GET IT ON Google Play

புரோக்கர் கமிசன் இல்லை. காலை:9:30 -12.30 மாலை 5.00 -6.00 ஞாயிறு விடுமுறை.

இணையதளத்தில் பதிவுக்கட்டணம் இலவசம்.

## தென்றல் திருமணத் தகவலகம்

பதிவுக் கட்டணம்:ரூ.3000 /சேவை கட்டணம் உண்டு.

முனைவர் த.த.தவசிமுத்து M.A., Phd.,

# அந்தமான் தீவுகள் சுற்றுலா

**கப்பல்| விமானம்| படகு| சுற்றுலா**

➤பாஸ்போர்ட் தேவையில்லை

➤பள்ளிக்கூடத்தில் ஜாதி சான்றிதழ் தேவை இல்லை.





சி.பாபு

→ 9884607657

→ 8939888585.

→ அந்தமான் எக்ஸ்பிரஸ் டிராவல்ஸ் J.K.A.காம்ளக்ஸ், எண்:195/96, தம்புசெட்டி தெரு, காளிகாம்பாள் கோவில் அருகில், சென்னை-600 001.

→ Email:

andamanstours@gmail.com


## ஜென்ம நட்சத்திரங்களுக்குரிய பலன் தரும் கோயில்கள்

1.அசுபதி - கரும்பாயிரம் கொண்ட வினாயகர், கும்பகோணம்
2.பரணி - நடராஜர் கோயில், சிதம்பரம்
3.கார்த்திகை - கந்தசாமி கோயில், ஏரகரம், கும்பகோணம் அருகில்
4.ரோகிணி - நாகநாதசுவாமி கோயில், திருநாகேஸ்வரம்
5.மிருகசீரிடம் - வனதுர்க்கை, கதிராமங்கலம்
6.திருவாதிரை - உத்திரகோசமங்கை கோயில், இராமநாதபுரம்
7.புனர்பூசம் - ராமசாமி கோயில், பட்டாபிசேக கோலம், கும்பகோணம்
8.பூசம் - மகாலிங்கசுவாமி கோயில், திருவிடமருதூர்
9.ஆயில்யம் - சங்கரநாராயணசுவாமி, சங்கரன் கோயில்
10.மகம் - தில்லைகாளியம்மன், சிதம்பரம்
11.பூரம் - குமரி அம்மன், கன்னியாகுமரி
12.உத்திரம் - லலிதாம்பிகை, திருமியச்சூர்
13.அஸ்தம் - கமலாம்பிகை அம்மன், திருவாரூர்
14.சித்திரை - ராஜதுர்க்கை அம்மன், வேதாரண்யம்
15.சுவாதி - அகிலாண்டேஸ்வரி, திருவானைக்கோயில்
16.விசாகம் - முருகப்பெருமான் முதல் படை வீடு, திருப்பரங்குன்றம்
17.அனுசம் - நாராயணி அம்மன், ஜீபுரம், வேலூர்
18.கேட்டை - சாரங்கபாணி, கும்பகோணம்
19.மூலம் - மீனாட்சி அம்மன், மதுரை
20.பூராடம் - குருபகவான், திட்டை
21.உத்திராடம் - அபிராமி அம்மன், திருக்கடையூர்
22.திருவோணம் - வெக்காளியம்மன், திருப்பாம்புரம்
23.அவிட்டம் - நாகநாதசுவாமி, திருப்பாம்புரம்
24.சதயம் - கலியபெருமாள் கோயில், அரியலூர்
25.புரட்டாதி - ஆதிவராஹபெருமாள், கும்பகோணம்
26.உத்திரட்டாதி - சனிபகவான், திருக்கொள்ளிக்காடு
27.ரேவதி - அங்காளம்மன், மேல்மலையனூர்.

வாசக அன்பர்கள் அனைவரும் எல்லாம் வளமும் பெற்று வாழ வேண்டும் என புத்தாண்டு வாழ்த்துக்கள் உளமார வேண்டிக் கொள்கிறேன்.

-அருட்பணி செம்மல். S.V.சிவசம்பந்த நாடார், தஞ்சை மாவட்ட (வடக்கு) அவைத்தலைவர், கும்பகோணம், 9245344808.


**உங்கள் இல்லத்தில் உடனே திருமணம் நடைபெற வேண்டுமா?**

Prop.K.A.Raman Nadar

# Sri.R.M.T.திருமண தகவல் மையம்



கைராசியான ஸ்தாபனம் மற்றும் இந்து, R.C, C.S.I. நாடார் வரன்கள் அமைத்து தரப்படும். MD, MBBS, M.E, M.SC, M.C.A மற்றும் IAS, IPS, VIP வரன்களுக்கு மில் தொழில் அதிபர் வரன்களுக்கு அணுகவும்.

106, ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை-26.போன்:45588957, செல்:9380791999, 9841329471. E-mail:ramannadar2004@yahoo.co.in Web:www.srirmt.com




GP **கோபால் பிளாஸ்டிக்**

**Dealers in :** எல்லாவகையான பிளாஸ்டிக் மெட்டீரியல் கிடைக்கும்

9, அரங்கப்பன்தெரு, (ஸ்ரீனிவாஸ்தியேட்டர்அருகில்), மேற்கு மாம்பலம்,சென்னை-33



S.இராஜகோபால்

**RS பிளாஸ்டிக்**

உரிமையாளர்:S.ராஜகோபால், S.ஜெயராஜ்

நெ.16, உய்யாலிஅம்மன்கோயில்தெரு,திருநீர்மலை,சென்னை-44.

Cell:9444037465, 9840446688 Ph: 24891192. 24748148.



S.ஜெயராஜ்

நல்லதே நினைப்போம்! நல்லதே செய்வோம்! நல்லதே நடக்கும்!

நியூ **நிதில் & கோ**

தரமான கட்டில், பீரோ, மெத்தை, இதர பர்னிச்சர்கள் வாங்க சிறந்த இடம்..

போன்:044-25962323, 044-42165485



NEW **NITHIL & CO**









**Whole Sale & Retail**

**Steel & Wood Furniture Show Room**

**No:1171, T.H.Road, Old Washermanpet, Chennai-600 021**



# தமிழக நாடார் மேட்ரிமொனி

SINCE 2007

சென்னை, தமிழகமெங்கும் மற்றும் வெளிநாடு வரன்கள்

தாங்களின் வீட்டிலுள்ள வரன்களுக்கு மணமகன், மணமகள் விபரங்கள், ஜாதகத்துடன் தாங்கள் வீட்டிலிருந்து எங்களின் வெப்சைட் மூலமாக நேரில் பார்க்கலாம். **வரன் பதிவு இலவசம்.**

Visit Our Website

**www.tamilaganadarmatrimony.com**

நம்ம தமிழகத்தின் சென்னை, நெல்லை, தூத்துக்குடி, குமரி, விருதுநகர் உட்பட அனைத்து மாவட்டம். இந்தியாவின் சென்னை, மும்பை, கர்நாடகா, ஆந்திரா மற்றும் அனைத்து மாநில நாடார்கள்.
USA, UK, Canada, Singapore, Malaysia, Australia, Germany, Dubai போன்ற வெளிநாடுகளிலுள்ள இந்து நாடார், கிறிஸ்தவ நாடார் (RC, CSI, Pentecost) BE, ME, M.Tech, MCA, MBA, IT, CA, Govt, VIP தொழில் அதிபர்கள் சிறிய, பெரிய வியாபாரிகள் முதல் மணம் / மறுமணம், 17 வருட அனுபவமுள்ள நாங்கள், எங்களிடம் ஏராளமான திருமணங்கள் நடைபெற்று வருகிறது.

## தமிழக டாக்டர்ஸ் மேட்ரிமொனி

**MBBS, MD, MS, DGO, MDS, ORTHO, ANESTHESIA, SIDDHA, HOMEO, NURSE**

**Open our Website : www.tamilagadoctorsmatrimony.com**

எங்களுக்கென்று தனி வெப்சைட் இருப்பதால் எங்களிடம் மிக சுலபமாக திருமணம் முடிகிறது. திருமணத்திற்காக காத்திருக்காதீர்கள். உங்கள் வரன்களுக்காக பேசும்

# நெல்லை T. ராஜன் நாடார்

கேம்ப்ரோடு ஜங்சன், கிழக்கு தாம்பரம், சென்னை - 600 073

**Cell : 73388 12126, 73977 76595**

E-mail : tamilagamatrimony2005@gmail.com

# என் தந்தையின் அறிவுச் சிந்தனைகள்!

## 3.ஆள்பாதி ஆடைபாதி

## விஜிபி ராஜாதாஸ்

என் தந்தை அடிக்கடி சொல்வார்கள், வசதி குறைவாக இருந்தாலும் சரி, அல்லது வசதியாக இருந்தாலும் சரி, வசதியே இல்லாத வறுமைகோட்டிற்குக் கீழே இருந்தாலும் நாம் எப்போதும், எந்த ஒரு நிகழ்ச்சிக்கு செல்வதென்றாலும், தான் உடுத்தியிருக்கும் ஆடையை எவ்வளவுக் கெவ்வளவு நேர்த்தியாக உடுத்துவது மிகவும் நல்லது. ஔவையார் ஆத்திச்சூடியில் கூறியுள்ளதைப் போல் "கந்தையானாலும் கசக்கிக்கட்டு" - என்று ஔவையாரின் பொன்மொழிக்கேற்ப, ஒருவர் தான் உடுத்தும், ஆடையைப் பொருத்துத்தான் அவர் எப்படிப்பட்டவர் என்பது தெளிவாகத் தெரிந்துவிடும்.



உதாரணத்துக்கு:-

ஒரு மருத்துவமனையில் அங்குள்ள மருத்துவர் மற்றும் செவிலியர்களுக்கு உரிய வெள்ளாடையை அணிந்து கொண்டு, மருத்துவம் பார்க்கும்போது, அவர்களைக் காணும் நோயாளிகள் டாக்டர்கள், நர்ஸ்சுகள் மீது மதிப்பும் நம்பிக்கையும் வைத்து, அவர்கள் சொல்வதைக் கேட்பார்கள். அப்படி அல்லாமல் அவர்கள் ஒரு சாதாரணமான உடையில் வந்து பணிசெய்வார்களானால், அவர்களுக்குள்ள மதிப்பும், மரியாதையும் குறைவாகவே நோயாளிகளின் மனதில் தோன்றும். அதைப்போல், அந்த மருத்துவர்களுக்கும், அவரவர் பதவிகளுக்குரிய உடை, உடுத்தி வரும் போது, அவர்களுக்குள்ளே ஒரு புத்துணர்ச்சியும், தன் தொழில் மீது நம்பிக்கையும் கொண்டு உற்சாகத்தோடு செயல்படுவார்கள்.

அவ்வண்ணமே,

ஒரு நீதிபதி இருக்கிறார் என்றால், அவருக்குண்டான நீதிபதி உடையில் வரும்போது, ஒரு கம்பீரமும், தான் விசாரிக்கப் போகும் வழக்கின் மீது மிகுந்த கவனமும் ஏற்படும். நீதிமன்றத்தில் வழக்காடும் வழக்கறிஞர்களுக்கு

கும் நீதிபதியின் மீது ஒரு பக்தியும், மரியாதையும் ஏற்படும். அதைப்போலவே, காவல்துறையில் பணியாற்றும் போலீஸ் அதிகாரி அவருக்குரிய மிடுக்கான காக்கிச்சட்டை சீருடையில் வரும்போது, பொதுமக்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படும். மேலும், சட்டதிட்டங்களின்படி நடக்கவேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வும் பொதுமக்களுக்கு ஏற்படும்.

ஆள்பாதி ஆடைபாதி என்ற நடைமுறை "எடுத்துக்காட்டுகளை" இவ்வாறெல்லாம் என் தந்தையார் அவர்கள் சொல்வார்கள், ஒரு வியாபாரி அல்லது தொழில் செய்யும் நபரோ, எந்த ஒரு நிகழ்ச்சிக்கோ அல்லது விசேஷங்களுக்கோ, விழாக்களுக்கோ செல்லும்போது அவர்களது பாணியில், மேனாட்டு உடையான கோட்டு சூட்டும் அணிந்து சென்றால்தான், அதற்குரிய மதிப்பும் மரியாதையும் கிடைப்பதோடு அவர் ஒரு தொழில் நிறுவனத்தின் அதிபர் என்பதை அவ்விழாவுக்கு வந்திருப்பவர்கள் தெரிந்துகொள்வார்கள்.

என் தந்தையார் அவர்கள் ஆரம்ப காலகட்டத்தில், ஒரே ஒரு கோட்டு, சூட் வைத்துக் கொண்டு, அந்த உடையிலேயே சென்றுவருவார்கள். ஆம்! என் தந்தையார் வி.ஜி.பன்னீர்தாஸ் அவர்களுடன்அருமைச்சித்தப்பா வி.ஜி.சந்தோசம் அவர்களும் சென்று வருவார்கள், பார்பவர்கள் அவர்களை "இரட்டையர்" என்று வர்ணிப்பார்கள்.

நாளடைவில் "கோட்சூட்" என்றாலே விஜிபி வந்துவிட்டார்கள் என்று சொல்வார்கள். அவர்கள் சிறிய நிகழ்ச்சியாக இருந்தாலும், பெரிய நிகழ்ச்சியாக இருந்தாலும், "கோட்சூட்" டை "ஷீ" சகிதமாகப் போய் நிற்பார்கள். இருவரது "கோட்சூட்" சென்னையில் மிகவும் பிரபலம் ஆனது. அதனால், ஒரு திரைப்படத்தில் இருவர் பேசும்போது, "கோட் சூட்டு" போட்டவங்க எல்லாம் விஜிபி ஆகிட முடியுமா" என்று வசனம் பேசும் அளவுக்கு என் தகப்பனாரும் சித்தப்பா வி.ஜி.சந்தோசமும் அவர்களும் புகழ்பெற்று விளங்கினார்கள்.

இன்றைய நாளிலும், எங்கள் அருமைச் சித்தப்பா அவர்கள் எந்த ஒரு சுபநிகழ்ச்சிக்கோ, தொழில் ரீதியான நிகழ்விடங்களுக்கோ, பிறந்த நாள் விழாக்களுக்கோ, வரவேற்பு நிகழ்ச்சிகளுக்கோ, இலக்கியக் கூட்டங்களுக்கோ செல்லும்போது, இந்த வயதிலும் "கோட்டுசூட்" "டை" அணிந்து சென்று வரும் வழக்கம் தொடர்ந்து இருந்துவருகிறது. அவருடன் நானும் நிகழ்ச்சிகளுக்குச் செல்லும் போது, "கோட்டு சூட்" "டை" ஷீ சகிதமாக அணிந்து கெம்பீரமாகச் சென்று வருகின்றேன். அதுமட்டும் அல்லாமல் மற்ற நிகழ்ச்சிகளுக்கும் அவ்வண்ணம் சென்று வருகின்றேன். ஆனால், சிலநேரங்களில், நான் "கோட்சூட்" அணியாமல் செல்லும்போது என்னையறியாமல், எனக்குள்ளே ஏதோ ஒரு குறை இருப்பது போல் தோன்றும்.

தினந்தோறும் அன்றாட தொழில் நிமித்தம் அலுவலகம் செல்லும்போது, எனக்கென்று ஒரு உடையை அணிந்துச்செல்வேன். அதாவது, வெள்ளைநிற முழுக்கை சட்டை, நீல நிறகாற்சட்டை மற்றும் கால்களுக்கு "ஷீ" அணிந்துச் செல்வது என்று எனக்குள்ளே, ஒரு ஒழுங்கு ஏற்படுத்தி, அதையே கடந்த 20 ஆண்டுகளாகப் பின்பற்றி வருகின்றேன். அவ்வாறு நான் அந்த உடையில் இருக்கும் போது எனக்குள் ஓர் நம்பிக்கையும், உத்வேகமும் தோன்றும்.

அந்த உடைக்கு ஒரு தனிமரியாதை கிடைக்கிறது. மேலும் என்னைப் பார்க்கவரும் வாடிக்கையாளரோ, தொழில் தொடர்பாகச் சந்திக்க வருபவர்களோ என் மீது ஒரு நம்பிக்கையும், நன்மதிப்பும், மரியாதையும் வைப்பதோடு, அவர்களுக்குள் ஒரு திருப்தி, நம்பிக்கை ஏற்படுகிறது. அந்த அளவில் ஒருவருக்கு உடை என்பது மதிப்பும், மரியாதையும் தருகிறது என்பதை எல்லோரும் உணரவேண்டும். இந்த அறிவுரையை என் தந்தையார் எனக்கு அடிக்கடி என்னிடம் கூறுவார்கள். இன்றும் அவர் சொன்னதை நான் பின்பற்றி வருகின்றேன்.




Prop.S.Vijayan, Cell: 98403 53031. (0)044/ 26623031.

**SRI LAKSHMI ENTERPRISES**

Scaffollding & Shed contractor / School, College, Church & Construction Company / All Type Shed Works

28/54, Cooks Road, P.B. Chennai, Chennai-12.

சேர்ந்து பயனடைவீர் ! வாய்ப்பை பயன்படுத்துவீர் !!

**இக்கல்வி ஆண்டிலேயே மருத்துவ படிப்பு பயில மிக குறைந்த இடங்களே உள்ளன.**

Counselling Apply செய்யாத மாணவர்களுக்கும் அரிய வாய்ப்பு

**அத்தி இயற்கை மருத்துவ கல்லூரி** குடியாத்தம் (வேலூர் மாவட்டம்)

(இயற்கை மருத்துவம் & யோகா)

அரசு அங்கீகாரம் பெற்றது. நீட் தேர்வு விலக்கு பெற்றது.

**BNYS (NATUROPATHY & YOGA) (5½ வருடம்)**

**COUNSELLING CODE: 852**

**04171-229108, 8754959066**




வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகரின் அருகில் 4கிலோமீட்டர் தொலைவில் காக்கா தோப்பு கிராமத்தில் எங்களுடைய அத்தி இயற்கை மற்றும் யோகா மருத்துவ கல்லூரி அமைந்துள்ளது.

எங்களுடைய கல்லூரியானது இயற்கை சூழலில் தேசிய நெடுஞ்சாலை, இரயில் நிலையம் மற்றும் நகர பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது.

கிராமப்புற மாணவர்களையும் மருத்துவராக்க வேண்டும் என்ற நோக்கில் பேராசிரியர் சிறுநீரகவியல் நிபுணர் டாக்டர் பி.சௌந்தரராஜன் அவர்களால் துவங்கப்பட்ட கல்லூரி.

எங்களுடைய கல்லூரியில் இயற்கை சூழலுடன் கூடிய காற்றோட்டமான வகுப்பறைகளும், மாணவ, மாணவிகளுக்கு தங்கும் விடுதிகளும் மற்றும் அனைத்து நோய்களுக்கும் சிறந்த முறையில் அத்தி இயற்கை மற்றும் யோகா மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம், அத்தி அலோபதி மருத்துவமனை மற்றும் ஆயூஷ் மருத்துவமனையில் நோயின் தன்மை அறிந்து கூட்டு மருத்துவமனையில் நோயின் தன்மை அறிந்து கூட்டு மருத்துவ சிகிச்சை முறையை பயன்படுத்தி நோயாளிகளுக்கு எந்தவித பக்க விளைவுகளும் ஏற்படா வண்ணம் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

எங்களுடைய மாணவர்களுக்கு இயற்கை மருத்துவம் மட்டும் இல்லாமல் அலோபதி ஆயுஷ் போன்ற மருத்துவத்தை பற்றியும் அறிய முடிகிறது.. எனவே நோயின் தன்மை அறிந்து அதற்கேற்ப கூட்டு சிகிச்சை முறை பயன்படுத்தி சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க கூடிய வகையில் எங்களுடைய கல்லூரி வளாகத்திலேயே பயில வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தேசிய இயற்கை மருத்துவ தினத்தை முன்னிட்டு "உணவே மருந்து" என்ற தலைப்பில் கொண்டாடப்பட்ட நிகழ்ச்சிக்கு VIT வேந்தர் திரு.ஜி.விஸ்வநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகை புரிந்தபோது மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும் முறையும் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கும் முறையையும் பார்த்து பாராட்டினார் மேலும் இயற்கை மருத்துவத்தை பற்றி படிக்க வெகு தொலைவிற்கு போக வேண்டிய நிலையை மாற்றி வேலூர் மாவட்டத்திலேயே கிராமபுற மாணவர்களையும் மருத்துவராக்கும் வகையில்அமைந்துள்ள கல்லூரியை மென்மேலும் வளர்ச்சி அடைய வாழ்த்தினார். மேலும் எங்கள் கல்வி நிறுவனத்தில் மருத்துவ கல்லூரியுடன் மருத்துவம் சார்ந்த அத்தி செவிலியர் கல்லூரி (B.Sc (N).,ANM) மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த குடியாத்தம் பாலிடெக்னிக் கல்லூரியும் அமைந்துள்ளதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.


கீழ ஈரால் அருள்மிகு காமாட்சி அம்மன் துணை



எம்.எஸ்.முத்துவேல் நாடார்,

**போன்:9443742889. 7708701159.**

**சரவணன் ரியல் ஏஜென்சிஸ்**

காமாட்சி ஸ்டோர்ஸ்

**தலைவர் மாமல்லபுரம் வட்டார நாடார் சங்கம்**



**நிலம் வாங்க விற்க லேஅவுட் புரோமோட்டர் எண்:118/1, டி.கே.எம்.ரோடு, மாமல்லபுரம், பின்கோடு-603104.**



N.R.N.Group போன்:044-26790587

**பிரியா டிப்போ**

**கீத்து, மூங்கில், சவுக்கு, கட்டை, கரி, கல்போஸ்ட், தார்சீட், செங்கல், மணல், ஜல்லி, சிமெண்ட் கிடைக்கும்.**

2/166, மவுண்ட் பூந்தமல்லி டிரங்க் ரோடு, எம்.எஸ்.எஸ்.நகர், காட்டுப்பாக்கம், சென்னை-56.



# கிட்னி -- துப்புரவு தொழிற்சாலை

**இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் சிறுநீரகங்களின் பணி, வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் சிறுநீரக நோய்கள் பற்றி பிரமிப்பான கட்டுரை**

## 29.காக்க காக்க நெஃப்ரான் காக்க!!!

**-டாக்டர் பி.சௌந்தரராஜன்.**

சி.ஆர்.எஃப். இருக்கிறதா என்று பார்க்கிற ரத்தப் பரிசோதனையில் முக்கியமாகப் பார்க்க வேண்டியது ரத்தத்தில் யூரியா மற்றும் க்ரையாட்டினின் அளவு. ரத்தத்தில் நிமிடத்துக்கு நிமிடம் எவ்வளவு க்ரையாட்டினின் வெளியேற்றப்படுகிறது என்றும் பார்க்க வேண்டும். இதற்கு இருபத்துநான்கு மணி நேரத்தில் வெளியேறின சிறுநீரை எடுத்து ஒரு குறிப்பிட்ட முறையில் அளப்பார்கள். சில மருத்துவர்கள் வெறுமனே யூரியா மட்டும் பார்க்கச் சொல்வார்கள். அது மிகவும் தவறு. ஏனெனில், யூரியா ஏறினாலே அது சி.ஆர்.எஃப். என்று அர்த்தம் அல்ல.



ரத்தத்தில் யூரியாவின் அளவு வேறு சில காரணங்களாலும் அதிகரிக்கும். வயிற்றோட்டம், வாந்தி, ஏதேனும் காயம் பட்டதால் அதிக ரத்தப்போக்கு போன்றவற்றால் உடம்பில் தண்ணீரின் அளவு குறைந்தாலோ யூரியா அதிகம் வெளியேறும்.

அதோடு, பொதுவாக யூரியாவின் அளவு 20முதல் 40 மில்லி கிராமுக்குள் இருந்தால், அது நார்மல். இது மனிதருக்கு மனிதர் வேறுபடும். சிலருக்கு நார்மல் அளவே இருபது மில்லியாக இருக்கும். அவர்களுக்குப் பரிசோதனையின்போது யூரியா நாற்பது காட்டினால் நார்மலுக்குள் தானே வருகிறது என்று நினைத்துக் கொள்வார்கள்.

ஆனால், சம்பந்தப்பட்டவரைப் பொறுத்தவரையில், அவருக்கு யூரியாவின் அளவு நூறு சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. இது மிகவும் அபாயகரமான நிலை. அதனால்தான் பரிசோதனையின்போது க்ரையாட்டினின் அளவையும் சேர்த்துப் பார்க்க வேண்டும்.

அதேபோல், நோயாளிகளுடன் மருத்துவர்களையும் போட்டுக் குழப்பிவிடுகிற சில பரிசோதனைக் கூடங்கள் உண்டு. ஒவ்வொரு முறை பரிசோதிக்கும்போதும் வெவ்வேறு அளவுகளைக் காட்டும். அதனால்தான் வெளி இடங்களில் அதே பரிசோதனையைச் செய்திருந்தாலும் மீண்டும் ஒருமுறை நாங்களும் பரிசோதிக்கச் சொல்வதுண்டு.

அப்படியும் அளவுகள் தவறாகவும் நோயாளிகள் சொல்கிற அறிகுறிகள் சி.ஆர்.எஃப்-புக்கானவையாகவும் இருந்தால், அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் பண்ணச் சொல்வோம்.

இந்த யூரியா க்ரையாட்டினின் பரிசோதனையிலும் ஒரு குறை உண்டு. அறுபது சதவிகித நெஃப்ரான்கள் அழிந்த பிறகுதான், ரத்தத்தில் யூரியா மற்றும் க்ரையாட்டினின் அளவு ஏறவே ஆரம்பிக்கும். அதற்கு முன் எப்படித் தெரிந்துகொள்வது?

ரத்தத்தில் சர்க்கரையின் அளவு மிக அதிகமாக இருக்கிற நோயாளிகள், சிறுவயதில் நெஃப்ரிடிக், நெஃப்ரோடிக்கால் பாதிக்கப்பட்டவர்கள், உயர் ரத்த அழுத்தக்காரர்கள், கொழுப்பு வியாதிக்காரர்கள், வருடக்கணக்கில் வலிநிவாரண மாத்திரைகள் சாப்பிடுகிறவர்கள், அடிக்கடி யூரினரி இன்ஃபெக்ஷன் வந்தவர்கள் என்று மளிகைக்கடை லிஸ்ட்டை விடவும் நீளமாக ஏற்கெனவே ஒரு பட்டியல் தந்தேனே... இவர்களையெல்லாம் “ஹை ரிஸ்க் ஆட்கள்” என்று நாங்கள் குறிப்பிடுவதுண்டு.

இவர்கள் மிக மிகக் கண்டிப்பாக, வருடத்துக்கொரு முறை முழு உடல் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். கூடவே, பிரச்னை இருந்தாலும் இல்லாவிட்டாலும் ரெகுலர் செக்-அப்புக்காக மருத்துவரைப் பார்க்க வேண்டும்.

நம் ஊரில் மாஸ்டர் ஹெல்த் செக்கப் செய்துகொள்கிற பழக்கம் பரவாததால், சிறுநீரகத்துக்கு வருகிற சீரழிவு கொஞ்ச நஞ்சமல்ல... தனக்குச் சர்க்கரை வியாதி இருந்ததே தெரியாமல் நேராக சிறுநீரகம் செயலிழந்து போய் வருகிற நோயாளிகள் இங்கே அதிகம்!

சி.ஆர்.எஃப். என்றாலே அடுத்து சிகிச்சையே டயாலிசிஸ்தான் என்றோ அறுவைசிகிச்சை தான் என்றோ அர்த்தம் இல்லை. ஆரம்ப கால, இரண்டாம் கட்ட, மூன்றாம் கட்ட, நான்காம் கட்ட மற்றும் இறுதிக் கட்டச் சிறுநீரகச் செயல் இழப்புகள் என்று சி.ஆர்.எஃப் பில் ஐந்து நிலைகள் உண்டு.

இவற்றில் முதல் மூன்று நிலைகளை மருத்துவ சிகிச்சையிலேயே ஐந்து முதல் எட்டு வருடங்களுக்குக் கூட வைத்திருக்க முடியும். ஆனால், பழைய நிலைக்குக் குணமாக்க முடியாது. கறந்த பால் மடி புகாது என்பது மாதிரி இழந்த நெஃப்ரான்களை மீண்டும் உருவாக்க முடியாது. சிலர் விளம்பரப்படுத்துவது போல் சுருங்கின சிறுநீரகத்தை விரியச் செய்வது இன்று வரை உலகின் எந்த மருத்துவ முறையிலும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், மீதம் இருக்கிற நெஃப்ரான்களை அழித்துவிடாமல் காத்துக்கொள்ள முடியும். அத்தோடு கெட்டுப்போன நெஃப்ரான்களின் விளைவு நோயாளிகளைத் தாக்காமல் பாதுகாக்கவும் முடியும். அதற்குத்தான் மருத்துவ சிகிச்சை.

நான்காவது நிலையில் சிலருக்கு டயாலிசிஸ் அவசியப்படும். வேறு சிலருக்கு மருத்துவ சிகிச்சையே போதுமானதாக இருக்கும்.

ஐந்தாவது கட்டத்தில் தான் டயாலிசிஸ் மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்வோம். சி.ஆர்.எஃப். நோயாளிகளில் இந்த ஐந்தாவது கட்டத்துக்கு வருகிறவர்கள் ஐந்து முதல் பத்து சதவிகிதத்தினர்தான் என்பதால் எல்லாரும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை.

முதல் மூன்று நிலைகளில் இருக்கிறவர்கள் வேளாவேளைக்கு மருந்துகளைக் கண்டிப்பாகச் சாப்பிட வேண்டும். காலத்துக்கும் எடுத்துக் கொள்ள வேண்டிய மருந்தகள் அவை தவிர, உணவுக்கட்டுபாடும் மிகவும் அவசியம். அரிசி நிறைய சாப்பிடுகிற நம் தென்னிந்திய உணவுப் பழக்கம்தான் சி.ஆர்.எஃப்-புக்கு மிகச் சிறந்த உணவு. (ஆனால், சிறுநீரக சர்க்கரை நோயாளிகள் அரிசி உணவு சாப்பிடக்கூடாது).

பொட்டாசியமும் புரதமும் இவர்களுக்கு முக்கிய எதிரிகள். சாதாரணமானவர்களுக்கு சக்தி தருகிற சாத்துக்குடி, ஆரஞ்சு, திராட்சை, வாழை போன்ற பழங்கள், இளநீர், அதிகச் சத்துள்ளவை என்று வளரும் குழந்தைகளுக்கு விளம்பரங்கள் பரிந்துரைக்கிற பானங்கள் இவற்றையெல்லாம் இவர்கள் சாப்பிடக்கூடாது. காய்கறிகள், கீரை, இறைச்சி இவற்றையும் வேகவைத்துத் தண்ணீரை வடித்து தான் சாப்பிட வேண்டும். ஏனென்றால் இவை எல்லாவற்றிலுமே அதிக பொட்டாசியம் இருக்கிறது.

அதிலும் ஐந்தாவது கட்டத்தில் இருக்கிறவர்கள் இந்த பொட்டாசியம் உள்ள உணவு வகைகளைத் தொடவே கூடாது.

ஆயினும் குமரி அனந்தன் தனது முயற்சியைக் கைவிடவில்லை. 1978 நவம்பரில் குமரி அனந்தன் தமிழ் மொழியில் கேள்வி கேட்க அனுமதி கிடைத்தது. இது பாராளுமன்ற வரலாற்றில் ஒரு அதிசயம். அதுவரை அங்கே இந்தி, ஆங்கிலம் தவிர வேறு மொழிகள் ஒலித்தது இல்லை. தமிழில் கேள்வி கேட்டு அதற்குப் பதிலையும் பெற்றார். அவரது பதவிக் காலம் வரை இந்தத் தமிழ்க் குரல் பாராளுமன்றத்தில் ஒலித்தது. மற்ற தமிழக எம்.பிக்கள் ஏனோ இதனைத் தொடரவில்லை.



பாராளுமன்றத்தில் தமிழில் பேசும் முயற்சியில் குமரி அனந்தனுக்கு கிடைத்த வெற்றி குறித்து கலைஞரிடம் கேட்டபோது தனி மரம் தோப்பாகாது என்னும் பழமொழியைக் குமரி அனந்தன் மாற்றியமைத்து விட்டார் என்று பாராட்டினார்.

2019-ல் 40 ஆண்டுகளுக்குப் பிறகு பாராளுமன்றத்தில் எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் மொழியில் பதவி ஏற்றது மகிழ்ச்சி அளிக்கிறது என்றார் குமரி அனந்தன். கட்சி எல்லைகளைக் கடந்து எல்லோரும் கன்னித் தமிழ் வளர்க்க வேண்டும். பாராளுமன்றத்தில் இனிமேலும் தொடர்ந்து தமிழிலேயே கேள்விகள் கேட்டு பதிலையும் பெற வேண்டும் என வேண்டுகிறார் குமரி அனந்தன்.

ஒரு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், 4 முறை சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்த குமரி அனந்தன், பணம், சொத்து எதுவும் சேர்க்கவில்லை. இன்றும் அரசு ஒதுக்கிய சிறிய காலனி வீட்டில் வாழும் குமரி அனந்தன் ஏழையாகவே வாழுகிறார். நான் முதலில் குறிப்பிட்டது போல 16 கார்கள் இருந்த ஸ்ரீ மகள் கம்பெனி செல்வந்தர் வீட்டின் மருமகன் இன்று வரை ஏழையாக.

காந்தி -காமராஜ் தேசிய காங்கிரஸ் என்று ஒரு புதிய கட்சியைத் துவங்கியது ஒரு ஆச்சரிய அனுபவம். ஜனதா கட்சியில் இருந்த குமரி அனந்தனை தனிக்கட்சி துவங்கும்படி தூண்டியவர்கள் தொண்டர்களே. இதில் முன்னிலையில் இருந்தது திருச்சி. திருச்சி சரஸ்வதி கபே மோகன் ஆதரவுடன் என்.கிருஷ்ணன், மா.முருகேசன், எடத்தெரு கோபால கிருஷ்ணன், மலைக்கோட்டை சுப்பையா, அியிலை கருப்பையா என்று ஒரு பெரிய பட்டாளம் குமரி அனந்தனுக்கு ஆதரவாக களத்தில் இறங்கியது. தென்னூர் கிருஷ்ணன் மக்கள் தொண்டர் என்று போற்றப்பட்டவர்.

கா.கா.தே.க கட்சிக்கு சுடர் கொடியை வடிவமைத்தது திருச்சி தான். 1991ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அதிமுக கூட்டணியில் குமரி அனந்தனின் கா.கா.தே.க இடம் பெற்று 7 சட்டமன்ற உறுப்பினர்களைப் பெற்றது. ஒரு மேல் சபை உறுப்பினர் பதவியும் கிடைத்தது. -தொடரும்.....

S.பால்பாண்டியன் ஹார்டுவேர்ஸ்
S.பால்பாண்டியன் டிப்போ



சிமெண்ட், செங்கல், ஜல்லி, கம்பி, பெயிண்ட் வகைகள், பி.வி.சி.பைப் வகைகள் கடப்பாக்கல், ஸிங்க் முதலியன மொத்தமாகவும் சில்லரையாகவும், தரமாகவும் கிடைக்கும்.



உரிமையாளர்: Lion S.பால்பாண்டியன்

20, புகழேந்தி தெரு, எம்.ஜி.ஆர்.நகர், சென்னை-78. போன்:24713885, 23716122.

# அருமை அண்ணாச்சி



கலைமாமணி டாக்டர் வி.ஜி.சந்தோசம் தலைவர் வி.ஜி.பி.குழுமம்.

ஓய்வில்லா உழைப்பு:

இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யுமாறு திருவள்ளுவர் கூறியதை எங்கள் வாழ்வில் பின்பற்றி விட்டோம் என்று நான் பெருமையுடன் கூறவில்லை. அவர்களுக்கெல்லாம் உதவக்கூடிய நிலையை இறைவன் எங்களுக்குத் தந்தானே என்பதை நினைத்துப் பார்க்கிறேன்.

வாழ்க்கையின் நிலையானது வண்டிச்சக்கரம் போல் சுழலக்கூடியது. செல்வர் ஏழையாவதும் ஏழை செல்வராவதும் அவ்வப்போது நாம் இங்குக் காணக்கூடியது. அதனால் ஒருவரை ஏழை என்று இகழவும் கூடாது. செல்வர் என்று காரணம் இல்லாமல் புகழவும் கூடாது. என்ன, நான் சொல்வது சரிதானே?

எங்கள் குடும்பம் அப்போது வாடிக்கொண்டிருந்தாலும், மேலும் படிக்க வேண்டும் என்ற எனது ஆர்வம் குறையாமலேயே இருந்தது. என் ஆர்வத்தைப் புரிந்ததும், குடும்பச் சூழ்நிலை காரணமாக எதையும் கூறாமல் இருந்தார் அப்பா. வீட்டில் உள்ள அனைவரும் வேலை பார்த்தால் தான் கஷ்டமில்லாமல் வாழ முடியும் என்பது அப்பாவின் கருத்து. அவர் கருதுவது சரியென்று எனக்கும் புரிந்ததால், என் ஆசையைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அப்பாவின் விருப்பப்படி நானும் குடும்ப நலன் கருதி உழைக்கத் தொடங்கினேன்.





அப்போது தான் சைதாப்பேட்டை ஜீனிஸ் ரோட்டில் உள்ள கடைக்கு ரூ.625 முன் பணம் கொடுத்து வாங்கினோம். மாதம் 16 ரூபாய் வாடகை, வீட்டிற்கு வேண்டிய தளவாடச் சாமான்களை வாங்கி விற்கத் தொடங்கினோம். நடராஜ ஐயர் என்பவரிடமிருந்து அக்கடையை நாங்கள் வாங்கினோம். வாங்கிய மறு நாளே அங்கு "பன்னீர் டீ ஸ்டால்" உதயமாகியது வி.ஜி.பி. என்ற மூன்றெழுத்து. தாரக மந்திரமாக, இன்று தமிழகத்தில் மட்டும் இல்லாமல் இந்தியா வெங்கும், ஏன் உலகெங்கும் கூட உச்சரிக்கப்படுகிறது. இதற்கெல்லாம் முன்னோடியாக அருமை அண்ணாச்சியின் திருப்பெயரில் முதலில் தொடங்கப்பட்டது தான் பன்னீர் டீ ஸ்டால்.

அன்பு வசந்தனே, துன்பம் மிகுந்த நாட்களாக இருந்தாலும் சுகமான அனுபவங்கள் நிறைந்த நாட்கள் எங்களுக்கு அது தான். நான் டீ போடுவேன். அருமை அண்ணியும் , அக்காளும் பல காரம் தயாரிப்பார்கள். அருமை அண்ணாச்சி அப்போது இடையில் இருந்த ராஜாபாதர் என்பவரின் கடையில் வேலை பார்த்துக் கொண்டே அவர் கடையிலும் வேலை பார்த்து வந்தார். அந்தக் கடையில் ஒரு பெரிய ஜன்னல் இருந்தது. அதையொட்டி "பன்னீர் பங்க் கடையும் உருவாகியது. அதை அருமை அம்மா கவனித்துக் கொண்டார். வெற்றிலை, பாக்கு போன்ற பொருட்கள் அங்கு விற்பனை. இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் ஓய்வில்லாமல் உழைத்ததால் வாரம் முழுவதும் உழைப்புத்தான். விடுமுறையே கிடையாது.



இப்படிக் கஷ்டப்பட்டு நாங்கள் சம்பாதித்த போது மீண்டும் ஒரு ஏமாற்றத்துக்கு ஆளானோம். அதைப்பற்றி அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

காற்றினிலே வரும் கீதம்

அன்புள்ள வசந்தனே.

பட்ட காலிலேபடும் என்பது போல் ஏற்கெனவே ஒரு முறை சொந்தக்காரர் ஒருவரால் ஏமாற்றப்பட்ட நாங்கள் மீண்டும் இரண்டாம் முறையாக வேறு ஒருவரால் ஏமாற்றப்பட்டோம். இம்முறை நாங்கள் அடைந்த ஏமாற்றம் எங்களைப் பெரிதும் சங்கடத்திற்குள்ளாக்கியது. காரணம், சென்ற முறை தையல் மிஷின் வாங்கக் கொடுத்த பணத்தைத் தான் ஒருவர் ஏமாற்றினார். ஆனால் இந்தமுறை ஒரு நல்ல காரியத்திற்குப்பயன்பட வேண்டும் என்று நாளும் நினைத்து சேர்த்தோம். அந்த காரியம் என்னவென்று கேட்கிறாயா?

அருமை அக்காள் மரியம்மாளின் திருமணம் தான் அது. அக்காளுக்கு அப்போது தான் மாப்பிள்ளை பார்த்துக்கொண்டிருந்தோம், நல்ல விதமாக திருமணத்தை நடத்தவேண்டும் என்பதற்காக தினமும் 2 ரூபாய் சீட்டு கட்டிவந்தோம், அப்படிக் கட்டிய பணம் ரூ.900/- வரை சேர்ந்தது. மிகுந்த மகிழ்ச்சியுன் இருந்த எங்கள் மனங்களில் வேதனைத் தீயை வீசிவிட்டு, அந்தச் சீட்டை நடத்திய கம்பெனிக்காரர்கள் கம்பெனியை மூடிவிட்டு எங்கோ சென்றுவிட்டார்கள். அருமைச் சகோதரியின் திருமணத்திற்காகச் சேமித்த பணம் போய்விட்டதே என்று எண்ணி அண்ணாச்சி பெரிதும் வருந்தினார்கள். வீட்டிலிருந்த எல்லோருமே மிகுந்த வேதனைக்கு ஆளானோம். - தொடரும்....


**2வருடங்களுக்கு பிறகு மீண்டும் புது பொலிவுடன் நவம்பர் மாதம் முதல் ஆரம்பம். தொடர்புக்கு: 9840948727.**

**அமிர்தகனி**

**திருமண தகவல் நிலையம்**

**நாடார் சமூகத்திற்கு மட்டும்**

**இந்து நாடார், சி.எஸ்.ஐ, ஆர்.சி, மறுமணம், மாற்றுத்திறனாளி, உடல் ஊனமுற்றோர் உட்பட அனைவருக்கும்**

**18,13வது குறுக்கு தெரு, முத்தமிழ் நகர், கள்ளிக்குப்பம், அம்பத்தூர், சென்னை-53.**

# பசுமை நிறைந்த நினைவுகள்(அமெரிக்க பயணம்)

-தென்னக சான்றோர் சங்க உறுப்பினர்.
எம்.கோவிந்தராஜ். செல்:9384605133

**மாணாக்கர்களின் அறிவையும் திறமையையும் கணக்கிடுதல்**

முதல் செமஸ்டருக்கு 88 நாட்களும், இரண்டாவது செமஸ்டருக்கு 89 நாட்களும், மொத்தம்177 நாட்கள் பாடம் நடத்துகிறார்கள்.

எல்லாக் குழந்தைகளும் இந்த வகுப்புகளில் கலந்து கொள்ள வேண்டும்.

நுழைவுத் தேர்வுகளை மிகவும் கவனமாக நடத்துகிறார்கள்.

செல்போன், பேஜர் மற்றும் பல நோக்கோடு பயன்படுத்தப்படும் கைக் கடிகாரங்கள், வாக்கி டாக்கி, கேமரா, வீடியோ, குரலைப் பதித்தல் கருவி போன்ற உபகரணங்களைத் தேர்வு எழுதும்போது, கையாளக் கூடாதென்று கண்டிப்பாகச் சொல்லி விடுகிறார்கள். (The North side ISD student parents homebook section C7). இதனை மீறுபவர்களின் விடைத்தாள்களை மதிப்பிடாமல் நிறுத்தி வைக்கப்படுமென எச்சரிக்கிறார்கள். மேலே குறிப்பிட்டுள்ள பிரச்சனைகள், இந்தியா மட்டுமல்ல, எல்லா நாடுகளிலும் இருக்கிறது என அறிந்து கொண்டேன்.

ஜப்பானிய நாட்டிலும் ஆரம்பப் பாடசாலையில் இறுதி ஆண்டில் போட்டி தேர்வுகள் நடத்தித்தான் மாணவர்களைத் தரம் பிரிக்கிறார்கள். பிறகு, மாணவர்கள் விரும்பியபடி பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கிறார்கள் என்பது செய்தி.

ஆஸ்திரேலியா, நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் ஆரம்பப் பாட சாலைகளில் 'அதிபுத்திசாலி' மாணவர்களைத் தெரிந்தெடுக்க நான்காம் வகுப்பில் மாநில அளவில் போட்டித் தேர்வு நடத்தி, இந்த தேர்வில் தேர்ச்சியடையும் மாணாக்கர்களை "Opportunity Class Student" என்று சொல்கிறார்கள். இதற்கான வகுப்புகளை சிலர் ஆரம்பப் பாட சாலைகளிலேயே நடத்துகிறார்கள்.

தமிழ்நாட்டில் மாநில அளவில் 8-ஆம் வகுப்பிலேயே அறிவியல் பாடத்தில் அதிக மதிப்பெண் எடுக்கும் மாணவ மாணவிகளைத் தெரிந்தெடுக்கிறார்கள். அவர்களுடைய அறிவை, மேலும் வளப்படுத்த, அதிக மதிப்பாக, தமிழ்நாடு அரசு ரூ.5000 கொடுக்கிறது. இதைத் தெரிந்தெடுத்த மாணவன், தனக்கு இதனால் ஏற்படும் செலவைச் சரிசெய்ய முடிகிறது. வெற்றி பெற்ற எல்லா மாநில மாணவர்களுக்கும் இந்திய அளவில் தேர்வு நடத்தி மாணவர்களைத் தெரிந்தெடுத்து ஊக்கப்படுத்தி வருகிறது. இதற்கு, "National Talent Search Examination" என்று பெயர். தமிழ்நாட்டில் நடைபெறும் தேர்வுகளைத் தமிழ்நாடு அரசு தேர்வாணையம் கவனித்துக் கொள்வது எனக்கு நினைவிற்கு வந்தது.

**யோகா வகுப்புகள்**

தமிழ்நாட்டில் மாணவர்களுக்கு, 'யோகா' சொல்லித் தருவதைப் போன்று, அமெரிக்காவில் குறிப்பாக, நியூயார்க் மாநிலத்தில் படிக்கும் மாணவர்களுக்கும் யோகா சொல்லித் தருகிறார்கள்.

'யோகா செய்தால் சில நோய்கள் குணமடைகிறது' என்பதனை உலக அளவில் கண்டறிந்திருக்கிறார்கள் என்பது இங்கு நோக்கத்தகுந்தது.

இங்கும் மாணவர்களுக்கு யோகா பயிற்சி கொடுக்கப்படுகிறது. தங்களை நெருக்கடியான சூழ்நிலைகளிலிருந்து கவனத்தைச் சற்று மாற்றுவதற்கும், மாணவர்களுடைய பிடிவாதத் தன்மையை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையாக மாற்றுவதற்கும், யோகா பயிற்சி உதவுவதாகக் கருதுகிறார்கள். மேலும், தங்களது பழக்க வழக்கங்களையும், படிப்பில் முன்னேற்றத்தையும், தங்களுடைய போக்கில் மாற்றத்தையும் கொடுத்திருப்பதாகவும் லாஸ் ஏஞ்சல்ஸ் மாநிலத்திலுள்ள கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பது செய்தி.

யோகா, தன்னைத் தனிமையிலிருந்து விடுதலை செய்திருப்பதாகவும், கோபத்தை அடக்குவதாகவும் லிப்சிஸ் பல்கலைக்கழகம் குறிப்பிட்டுள்ளது.

நியூயார்க் நகரத்திலுள்ள சாபாட் பள்ளியில் யோகா



சொல்லிக் கொடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு, அங்குள்ள குழந்தைகள் 'வாவ்', 'ஓவ்' சொல்வதை விட்டுவிட்டு, 'நமஸ்தே' என்று சொல்வதாகக் குறிப்பிடுகிறார்கள்.

கோடைக்காலத்தில், விடுமுறையில், டெக்சாஸில் மாணாக்கர்களுக்கு விடுமுறை நாட்கள் பயனுள்ளதாக அமைய பாட்டு, டான்ஸ், கராத்தே, மொழிப்பயிற்சி நடத்துகிறார்கள். ஆனால், இந்தப் பயிற்சிக்கு அதிகமாக வசூலிக்கிறார்கள்.

நியூயார்க் நகரத்தைச் சுற்றிப் பார்த்தோம். அப்போது 5-வது தெருவில் இரண்டு இடங்களில் 'பார்பர் ஸ்கூல்' செயல்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தோம்.

மாணாக்கர்களை, அரசு பஸ்களில் ஏற்றிச் சென்று, பள்ளியில் விடுகிறார்கள். பிறகு பள்ளி முடிந்ததும், குறிப்பிட்ட நேரத்தில் சென்று, பள்ளியிலிருந்து வீட்டிற்கு அழைத்துச் செல்கிறார்கள். அதாவது வீட்டுப்பக்கத்திலுள்ள பஸ் ஸ்டாப்பில் விட்டு விடுகிறார்கள்.

**03-05-2011**

நாங்கள் தங்கியிருந்த அடுக்குமாடி வீட்டிற்குப் பின்புறம் ரோடு, அதனையொட்டி, மறுபக்கத்தில் ஒரு ஆரம்பப் பாடசாலை உள்ளது. இதன் பெயர் Robert F.M.C. Dermot Elementary School ஆகும். இது 111 USA BLUD என்ற விலாசத்தில் இருக்கிறது.

காலை 8 மணிக்கு மணி அடிக்கும். மாணவர்களைப் பெற்றோர்கள் கார்களில் கொண்டு விடுகிறார்கள். பிறகு மாலை 3 மணிக்கு பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைக் காரில் வந்து கூட்டிச் செல்லுகிறார்கள்.

தமிழ்நாட்டைப் போன்று, சீருடை அங்கு இல்லை. புத்தகச் சுமை இல்லை. இரண்டு அல்லது மூன்று புத்தகங்களைத்தான் கொண்டு செல்கின்றனர். சந்தோஷமாகக் குழந்தைகள் சிரித்துக் கொண்டே பள்ளிக்கூடத்திற்குள் செல்வதைப் பார்த்தேன்.

"இந்த பள்ளி எவ்வாறு செயல்படுகிறது? ஆசிரியர்கள் எவ்வாறு சொல்லித் தருகிறார்கள்? அவர்களுடைய பாடத் திட்டம் என்ன?" என்பதைப் பற்றி அறிய ஆசைப்பட்டேன்.

முதலில், பள்ளியின் பார்வையாளருக்கு ஒதுக்கப்பட்ட அலுவலகத்திற்குச் சென்றேன். பெஞ்சில் உட்கார்ந்தேன். பெற்றோர்கள் குழந்தைகளைப் பள்ளியில் விட்டுவிட்டுச் சென்றனர். எனக்கு அங்குள்ளவர்களுடன் பேசத் தயக்கமாக இருந்தது. சிலர் என்னிடம், "போலீஸ்காரர் எங்கும் வருவார்கள். சந்தேகம் ஏற்பட்டால் காவல் நிலையத்திற்குக் கூட்டிக்கொண்டு போய் விசாரிப்பார்கள். எனவே, உங்களுடைய நடவடிக்கை சந்தேகப்படும்படியாக இருக்கக் கூடாது" என்றார்கள். யாரும் என்னிடத்தில் எதுவும் கேட்கவில்லை. வீட்டிற்குத் திரும்பினேன்.

வீட்டிலிருந்து ஒரு விண்ணப்பம் எழுதினேன். அதில் நான் ஒரு இந்தியன் என்றும், முதுகலைப் பட்டதாரி. அத்துடன் கல்வியியலில் பட்டமும் பெற்றிருக்கிறேன். நான் கல்வியாளர் என்றும், நான் சுற்றுலா விசாவில் வந்துள்ளேன் என்றும் குறிப்பிட்டு, எனது விசா எண் மற்றும் தற்சமயம் குடியிருக்கும் அடுக்குமாடி விலாசம், எனது மகனின் கைப்பேசி எண் எல்லாம் குறிப்பிட்டு உங்கள் பள்ளி எவ்வாறு செயல்படுகிறது? ஆசிரியர், மாணவர்களுக்கு எவ்வாறு சொல்லித் தருகிறார்கள் என்பன பற்றி அறிய விரும்புகிறேன் என்றும், எனக்கு உங்களது பள்ளியின் செயல்பாட்டை காண்பிக்குமாறு கேட்டு அந்தப் பள்ளியின் தலைமையாசிரியருக்குக் கடிதம் எழுதி வைத்திருந்தேன்.

அடுத்த நாள், சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பள்ளி அலுவலகத்திற்குச் சென்றேன். பள்ளி அலுவலகத்தின் முன்னால் 30 வயது மதிக்கத்தகுந்த ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். அதற்கு 3 அடி தூரத்தில் ஒருவரும், கடைசியில் மற்றுமொரு பெண்ணும் உட்கார்ந்திருந்தனர்.

முதலில் உட்கார்ந்த பெண் ஆப்பிரிக்க நாட்டைச் சார்ந்தவள். மீதி இருவருள் ஒருவர் மெக்சிக்கோ நாட்டைச் சார்ந்தவர் மற்றும் ஒருவர் அமெரிக்கா. (தொடரும்)

# ஸ்ரீ பாலாஜி
# நாடார் திருமண தகவல் மையம்



**நாடார் சமுதாயத்தின் கைராசியான திருமண தகவல் மையம் எங்களிடம் குமரி மாவட்டம், நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நாடார்களுக்கும் (இந்து, கிறிஸ்தவர்) வட்டார பழக்கத்திற்கேற்ப வரன் பார்த்து தரப்படும்.**



**ஒருமுறை பதிவு கட்டணம் ரூபாய்-3000 மட்டும்.**
**நகை வராக்கத்திற்கு கமிஷன் கிடையாது.**

**முகவரி: எண்:389,** T.H.Road, (மெட்ரோ பில்லர் எண்-182),
**திருவொற்றியூர், சென்னை-19.**

**நிறுவனர்- R.சத்தியவான், இருளப்பபுரம், நாகர்கோவில்- 9444247847.**

**தொடர்பு எண்: 044-43508080, 7299989798, 8056299454, 7092890830.**


## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்: ஆனைகுடி, திசையன்விளை அருகில் நெல்லை மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-14.7.1997, நேரம்:10:43pm., உயரம்-5.5, நிறம்-சிவப்பு, ராசி-துலாம், நட்சத்திரம்-விசாகம், படிப்பு-BCA., இந்த மணமகளுக்கு, டிகரி படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9841171411, 9087669555.File No:M-306-G.

| | | | |
|---|---|---|---|
| லக்<br>சனி | | | சூரி |
| கேது | இராசி | | சுக்<br>புத |
| வியா | | | ராகு |
| | | சந் | செவ் |

| | | | |
|---|---|---|---|
| | சந் | | சூரிகே<br>செவ் |
| சுக் | அம்சம் | | லக் |
| புத | | | |
| ராகு<br>சனி | | | வியா |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்-சாத்தான்குளம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, மடிப்பாக்கம், பிறந்ததேதி-24.7.1997, உயரம்-5.2, நிறம்-மாநிறம், ராசி-மிதுனம், நட்சத்திரம்-திருவாதிரை, படிப்பு-B.Tech., I.T., வேலை-சாப்ட்வேர், மாதவருமானம்-80,000 பெறும் இந்த மணமகளுக்கு, தூத்துக்குடி திருநெல்வேலி மாவட்டத்தை சேர்ந்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9443536392, 7402462732. 9965602786. File No:M-305-G.

| | | | |
|---|---|---|---|
| சனி<br>லக் | | | சந் |
| கேது | இராசி | | |
| குரு<br>யுரேநெ | | | புராகு<br>மாந் |
| | செ<br>புளு | சுக் | சூரி |

| | | | |
|---|---|---|---|
| சூரிசந்<br>லக் | சுக்<br>ராகு | கேது | குரு |
| சனி<br>நெப் | அம்சம் | | செவ் |
| | | | மாந் |
| | ராகு | புத | புளு |




# ஸ்ரீ சரவணா ஸ்டோர்ஸ்

**சூப்பர் மார்க்கெட்**

**ஈகை வியாபாரிகள் நல சங்கம் வி.சரவணராஜ் தலைவர்**
**செல்9445171819, 044-22253484.**
2/33, அம்பாள் நகர் மெயின் ரோடு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை-32.





# நாடார் நவீன சுயம் வரம்



## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:P.ரம்யா, சொந்தஊர்:கடலாடி, இராமநாதபுரம், இருப்பிடம்-சென்னை, பம்மல், பிறந்ததேதி-5.5.1997, நேரம்:காலை:10.20, வயது-26, உயரம்-5.6, நிறம்-மாநிறம், ராசி-மீனம், நட்சத்திரம்-ரேவதி, படிப்பு:B.Tech., MBA., இந்த மணமகளுக்கு, படித்து வேலை அல்லது படித்து சொந்ததொழில் செய்யும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9444230273, 9003120114. File No:M-303-G

| | | | |
|---|---|---|---|
| சந்சனி பு கே | சூரி சுக் | | லக் |
| | இராசி | | |
| குரு | | | செவ் |
| | | | இராகு |

| | | | |
|---|---|---|---|
| சந் புத | | லக் | |
| | அம்சம் | | கேது |
| இராகு | | | குரு |
| சுக் | | சூசெ சனி | |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:மேலப்புதுக்குடி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-31.10.1997, நிறம்-புதுநிறம், உயரம்-5.6, ராசி-துலாம், நட்சத்திரம்-சித்திரை, படிப்பு-B.E., (CSE)., MBA., Senior System Engineer., Infosys., இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் அணுகவும். 9003207002, 9444013984, File No:M-103-G. e-mail:postbox33736@gmail.com

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| கேது | இராசி | | லக் |
| வியா | | | ராகு |
| செவ் | சுக் புத | சூரி சந் | |

| | | | |
|---|---|---|---|
| சுக் | கேது செவ் | | |
| | அம்சம் | | புத வியா |
| லக் சூரி | | | |
| | சந் | சனி ராகு | |

## R.C.கிறிஸ்துவ நாடார் மணமகன் தேவை

பெயர்:Alloffy Mary., சொந்தஊர்:அடைக்கலாபுரம், திருச்செந்தூர் மாவட்டம், இருப்பிடம்-கோடம்பாக்கம், சென்னை, பிறந்ததேதி:23.5.1999, உயரம்-164செ.மீ, நிறம்-சிவப்பு, படிப்பு-M.Sc., Physics., Pursuing Phd in Physics at Anna University, Guidy., இந்த மணமகளுக்கு, நன்கு படித்த நல்ல குணமுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு: 9445010437, INM -1119

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:திருச்செந்தூர் மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-19.9.1991, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-மகரம், நட்சத்திரம்-திருவோணம், படிப்பு-B.E., (ECE), Private Company, இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9600701927, 7358260567. File No:M-193-G.

| | | | |
|---|---|---|---|
| | | லக் | கே |
| | இராசி | | |
| சந் | | | சுக்பு குரு |
| சனி ராகு | | | சூரி செவ் |

| | | | |
|---|---|---|---|
| லக் | கேசந் சுக் | | குரு செவ் |
| | அம்சம் | | |
| சூரி | | | |
| சனி புத | | ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:பணிக்கநாடார் குடியிருப்பு, அம்மா:-உமரிக்காடு, இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-31.7.1998, நிறம்-மாநிறம், உயரம்-5.6, 164செ.மீ, ராசி-துலாம், நட்சத்திரம்-சித்திரை 3ம் பாதம், படிப்பு-M.A., English., இந்த மணமகளுக்கு, சென்னை மற்றும் வெளியூர் பரவாயில்லை வியாபாரம், வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9445385381, 8610614217, File No:M-283-G.

| | | | |
|---|---|---|---|
| வியா | லக் சனி | | செவ் சுக் |
| கேது | இராசி | | சூரி புத |
| | | | ராகு |
| | | சந் | |

| | | | |
|---|---|---|---|
| சுக் | சனி செவ் | | ராகு |
| | அம்சம் | | |
| | | | வியா |
| கேது | சந் | சூரி புத | லக் |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:அஜிதா. சொந்தஊர்-நாதன்கிணறு, திருச்செந்தூர் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை-42, பிறந்ததேதி-24.6.1995, உயரம்-5.6அடி, நிறம்-மாநிறம், ராசி-மேஷம், நட்சத்திரம்-கார்த்திகை 1ஆம் பாதம், படிப்பு-B.Arch., M.Arch., வேலை-M.Arch., Management, Chennai, இந்த மணமகளுக்கு, நன்கு படித்து சென்னையில் பணிபுரியும், நல்ல வருமானம் பெறும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9444452749, 9444317372.9790805050 File No:P-519-G.

| | | | |
|---|---|---|---|
| | சந் கே | புத சுக் | சூரி |
| சனி | இராசி | | |
| | | | செவ் |
| | குரு | ராகு | லக் |

| | | | |
|---|---|---|---|
| | சனி | | கே |
| | அம்சம் | | புத சுக் |
| | | | |
| சூசந் ராகு | குரு | செவ் | லக் |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்-காரிக்கோவில், குண்டல், திசையன்விளை அருகில், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-30.9.1995, வயது-27, நிறம்-மாநிறம், ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-கேட்டை, உயரம்-5.3, படிப்பு-M.E, வேலை-Assistant Professor., மாதவருமானம்-30,000 பெறும் இந்த மணமகளுக்கு நல்ல குடும்பம், நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9445307067, 9445426581.File No:M-154-G

| | | | |
|---|---|---|---|
| | கேது | லக் | |
| சனி | இராசி | | |
| | | | |
| | சந் வியா | செவ் ராகு | சூபு சுக் |

| | | | |
|---|---|---|---|
| லக் சந் | சூசெ கேது | | |
| சனி | அம்சம் | | சுக் |
| புத | | | |
| வியா | | ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:S.ராதா, சொந்தஊர்:ஏரல், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-திருநெல்வேலி, நிறம்-சிவப்பு, உயரம்-5.4, ராசி-தனுசு, நட்சத்திரம்-உத்ராடம், பிறந்ததேதி-27.1.1998, படிப்பு-B.E.,(ECE)., Infosis, monthly Income:40,000 பெறும் இந்த மணமகளுக்கு, Software Engineering படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9943870050, 9443487475, File No: M-291-G..

| | | | |
|---|---|---|---|
| லக் சனி | | | |
| செகு கே | இராசி | | |
| சூரி | | | ராகு |
| புசுக் சந் | | | |

| | | | |
|---|---|---|---|
| கேது | சூரி | | |
| | அம்சம் | | |
| லக் சனி | | | ராகு |
| செவ் சந் | புதசு குரு | | |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:சிவஞானபுரம், சேர்வைகாரன்மடம் அஞ்சல், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-1.2.1996, நிறம்-சிவப்பு, உயரம்-5.7, ராசி-மிதுனம், நட்சத்திரம்-திருவாதிரை, படிப்பு-B.Com., MBA., வேலை-பிரான்சு நாட்டு வங்கி, வருடம்:8,50,000வருமானம் இந்த மணமகளுக்கு, படித்த வேலையிலுள்ள சென்னையில் வேலை பார்க்கும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9381333339, 9444844884. File No:P-792-G.

| | | | |
|---|---|---|---|
| கே மாந் | | | சந் லக் |
| சுக் சனி | இராசி | | |
| சூரி செவ் | | | |
| புத குரு | | | குரு |

| | | | |
|---|---|---|---|
| | சனி | சுக் | சூரி |
| கே மாந் சந் | அம்சம் | | குரு |
| | | | செவ் ராகு |
| | | புத லக் | |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:பேயன்விளை, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-பார்க் டவுன், சென்னை-3, பிறந்ததேதி-10.11.1995, நிறம்-சிவப்பு, உயரம்-5.5, ராசி-ரிஷபம், நட்சத்திரம்-மிருகசீரிஷம், படிப்பு-BCA., Ntrust Infotech, மாதவருமானம்-50,000 பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலை அல்லது தொழில் செய்யும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9994419679. 9003171254. File No:M-316-G

| | | | |
|---|---|---|---|
| | கே | சந் | |
| சனி | இராசி | | |
| | | | |
| லக் | செகு சுக் | சூபு ராகு | |

| | | | |
|---|---|---|---|
| | சூரிபு கேது | | |
| குரு சனி | அம்சம் | | |
| செவ் | | | சந் |
| | லக் | சுக் ராகு | |


# ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்

மளிகை மொத்தம் , சில்லரை வியாபாரம்

**Prop.S.ராமசாமி நாடார்,** Ph:22243263, Res:22671263, 9444150666.

**நங்கநல்லூர், பழவந்தாங்கல் வட்டார வியாபாரிகள் சங்க ஸ்தாபகர் மற்றும் நங்கநல்லூர், பழவந்தாங்கல் நாடார் சங்க தலைவர்.**

36, 4வது மெயின் ரோடு, நங்கநல்லூர், சென்னை-600 061.



# இலவச திருமணத் தகவல்

தொடர்புக்கு: 30, தேரடி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15. போன்:23811087.

## மணப்பெண் பகுதி (பெண்) இந்திய நாடார் முரசு இலவச சேவை

இந்து நாடார் பகுதி

| எண் | ஊர் | வயது | கல்வித்தகுதி | தேவையான தகுதி | உயரம் | செல்நம்பர் | இராசி-நட்சத்திரம் | விவரம் | பெண் உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஆறுமுகநேரி | 27 | B.Tech | படித்துவேலை | 5.3 | 7305886020 | கன்னி-உத்திரம் | M23 | நேரில் |
| 2. | தென்காசி | 25 | BDS | பல்டாக்டர்இன்ஜினியர் | 166 | 9551023795 | சிம்மம்-மகம் | M24 | 40பவுன் |
| 3. | திருநெல்வேலி | 21 | ITI-Civil | படித்துவேலை/தொழில் | - | 9710647462 | மீனம்-ரேவதி | M25 | - |
| 4 | விருதுநகர் | 26 | B.Com | ஐ.டிகம்பெனிவேலை | 165 | 9789895019 | உத்திரட்டாதி1 | M26 | - |
| 5 | வத்திராயிருப்பு | 30 | MBBS | டாக்டர் | 5.6 | 7845696423 | சதயம் | M28 | நேரில் |
| 6 | நெல்லை | 26 | MCA | படித்துநல்லவேலை | 5.2 | 9841778738 | கடகம்-புனர்பூசம் | M29 | 50பவுன் |
| 7 | கூட்டாம்புளி | 25 | BE | படித்துவேலை | 5.3 | 9444123479 | விருச்சிகம்-அனுசம் | M30 | - |
| 8 | பால்குளம் | 26 | B.Tech | படித்துநல்லவேலை | 5 | 9840996091 | பூராடம்-அனுசம் | M32 | - |
| 9 | தூத்துக்குடி | 37 | MSW | நல்லகுணமுள்ள | - | 9788980681 | துலாம்-சித்திரை | M33 | மறுமணம் |
| 10 | திருச்சி | 26 | M.Sc | நல்லவேலை | - | 9025386064 | மகரம்-அவிட்டம் | M34 | 25பவுன் |
| 11 | மதுரை | 28 | M.Arch | வெளிநாட்டில்வேலை | 167 | 8939516356 | சிம்மம்-மகம் | M35 | நேரில் |
| 12 | நெல்லை | 27 | B.Com,MBA | படித்துவேலை | 153 | 9840104146 | சிம்மம்-உத்திரம்1 | M36 | நேரில் |
| 13 | ஆறுமுகநேரி | 29 | MCA | படித்துவேலை/வெளிநாடு | 5.6 | 9840079225 | மீனம்-உத்திரட்டாதி | M37 | 100+4 |
| 14 | சென்னை | 28 | M.Com,Ph.D | படித்துவேலை | 5.5 | 9003188589 | துலாம்-விசாகம் | M38 | - |
| 15 | சேர்வைகாரன்மடம் | 27 | BE | BE, ME வேலை | 5.3 | 9710812313 | மேஷம்-கிருத்திகை | M39 | நேரில் |
| 16 | தட்டார்மடம் | 30 | 12th | குணமுள்ள,சொந்தவீடு | 5.4 | 9094813254 | மிதுனம்-புனர்பூசம் | M40 | 50பவுன் |

## C.S.I.நாடார்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சாத்தான்குளம் | 28 | BCA-CS | படித்துவேலை/தொழில் | - | சென்னை | 9444863510 | 444G | 25பவுன் |
| 2 | திருநெல்வேலி | 30 | M.Sc,M.Ed,HDCA | படித்துவேலை | 5.2 | சென்னை | 9750143051 | 445G | நேரில் |
| 3 | சிவகாசி | 24 | M.Sc | படித்துவேலை/தொழில் | 5.3 | சென்னை | 7092429525 | 446G | நேரில் |
| 4 | திருநெல்வேலி | 34 | M.Sc,B.Ed | படித்துநல்லவேலை | 5.2 | சென்னை | 9597694700 | 447G | மறுமணம் |

R.C.நாடார்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நாகர்கோயில் | 28 | BCA,MCA | IT/Govt வேலை | 150 | சென்னை | 9444680773 | 362G | நேரில் |
| 2 | நாகர்கோயில் | 30 | BE,PGDM | சென்னையில்வேலை | 169 | சென்னை | 9487410402 | 363G | நேரில் |
| 3 | காவல்கிணறு | 25 | PostGraduate | படித்துவேலை/தொழில் | 5.5 | சென்னை | 9962117571 | 364G | 100பவுன் |
| 4 | திருநெல்வேலி | 24 | BE | படித்துநல்லவேலை | 162 | சென்னை | 9840334391 | 365G | நேரில் |


நாடார் வாழ்களுக்கான நம்பிக்கையான இடம்

இமயம் திருமண தகவல் மையம்

என்றென்றும் நமது பாரம்பரியத்தின் அடையாளம்....

இந்து / கிறிஸ்தவ நாடார்கள் தங்கள் வட்டார பழக்க வழக்கத்திற்கேற்ப வரன்கள் பார்த்து தருகிறோம்.
மறுமணமும் உண்டு.





மின்னல் H.ஸ்டீபன் உரிமையாளர்

எண்.1. ஸ்டேசன்ரோடு. சானடோரியம். சென்னை - 600 047.

தொடர்புக்கு: 7299 55 65 91 / 8939 500 381 / 955 16 16 103

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:பார்வதி, சொந்தஊர்:ஆறுமுகநேரி, (மேலவீடு), தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, நிறம்-சிவப்பு, பிறந்ததேதி-4.6.2000, நேரம்:பகல்:1.07, உயரம்-5.2, ராசி-மிதுனம், நட்சத்திரம்-திருவாதிரை, படிப்பு-M.Sc., Maths., இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள தூத்துக்குடி, நெல்லை மாவட்ட வரன்கள் தொடர்புக்கு:9841787884, File No: M-281-G.

| | | | |
|---|---|---|---|
| | சனி | சூசெ விசுக் | சந் புத |
| | இராசி | | ராகு |
| கேது | | | |
| | | | லக் |

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் |
| சந் | அம்சம் | | சூரி ராகு |
| புவியா கேலக் | | | |
| | சனி | | செவ் |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:சுரண்டை, திருநெல்வேலி மாவட்டம், இருப்பிடம்-நாமக்கல், பிறந்ததேதி-16.12.1997, வயது-26, நிறம்-புதுநிறம், உயரம்-167செ.மீ, ராசி-மிதுனம், நட்சத்திரம்-புனர்பூசம் 2ம் பாதம், படிப்பு-M.Sc., Biotechnology, Currently Prusuing Ph.D., Biotechnology with Stipend., இந்த மணமகளுக்கு, படித்த நல்ல குணமுள்ள மணமகன் தேவை.9488574646, 9443971328. File No:M-188-G

| | | | |
|---|---|---|---|
| சனி(வ) மாந் | | | சந் |
| கேது | இராசி | | |
| லக்செ குருசு | | | ராகு |
| புத(வ) சூரி | | | |

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூகே புத(வ) | சந் | லக் |
| செவ் மாந் | அம்சம் | | |
| | | | குரு |
| சனி (வ) | | ராகு | |

## மறுமணம் இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:முக்கூடல், திருநெல்வேலி, இருப்பிடம்-திருநெல்வேலி, பிறந்ததேதி-18.6.1996, நிறம்-சிவப்பு, உயரம்-5.5, ராசி-மிதுனம், நட்சத்திரம்-புனர்பூசம், படிப்பு-B.Com., IT Company, இந்த மணமகளுக்கு, படித்த நல்ல வேலை அல்லது தொழில் செய்யும் மணமகன் தேவை. 9324173627, 8220096060., File No:M-315-G

| | | | |
|---|---|---|---|
| கேலக் சனி | | செ புத | சுக்சூ சந் |
| | இராசி | | |
| மா | | | |
| குரு | | | ராகு |

| | | | |
|---|---|---|---|
| செவ் | சந் புத | | ராகு |
| மாந் | அம்சம் | | சுக் |
| லக் | | | |
| கேது | | சனிசூ குரு | |


ஸ்ரீ முருகன் துணை
ஸ்ரீ ஐந்துவீட்டு சுவாமி துணை

செல்:94980 75679, 9445227158, 9677060358.

தூத்துக்குடி மாவட்டம், செட்டியார்பத்து
வாக்கியம் பஞ்சாங்க கணிதர் ஜோதிடர்
K.M.துரைசாமி நாடார் மகன் ஜோதிடர்
C.T.சிவக்கொழுந்து வேல் மகள்

**ஸ்ரீ தேவி ஜோதிட நிலையம்**

திருவல்லிக்கேணி, சென்னை-5, ஆன்லைன்-லில்
ஜாதகம் பார்க்கப்படும், வாட்சஆப்:9498075679.

## இந்து நாடார் மணமகன்

பெயர்:ஜா.சங்கீதா, சொந்தஊர்:கன்னியாகுமரி, இருப்பிடம்-சென்னை, நீலாங்கரை, நிறம்-மாநிறம், பிறந்ததேதி-15.11.1997, வயது-26, உயரம்-5.2, ராசி-ரிஷபம், நட்சத்திரம்-கார்த்திகை 2ம் பாதம், படிப்பு-M.Sc., Data Science., VIT (2022-2024)., இந்த மணமகளுக்கு, நல்ல குணமுள்ள படித்து வேலைக்கு செல்லும் மணமகன் தேவை. 9710786420, 8778298567. இடையில் 2.5ஆண்டுகள் Natwest வங்கியில் பணிபுரிந்தவர். (சென்னை) File No: M-214-G.

| | | | |
|---|---|---|---|
| சனி | | சந் | |
| கேது | இராசி | | |
| வி | | | ராகு |
| செவ் சுக் | புத | சூரி | லக் |

| | | | |
|---|---|---|---|
| | கேது | | சூரி |
| | அம்சம் | | செ வியா |
| சந்பு லக் | | | சுக் |
| | | சனி ராகு | |

## இந்து நாடார் மணமகன்

பெயர்:P.விதயாஷாமிலி, சொந்தஊர்:நகனை அருகில், மெய்ஞ்ஞானபுரம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை-94, நிறம்-சிவப்பு, பிறந்ததேதி-14.6.1991, உயரம்-5.2, ராசி-கடகம், நட்சத்திரம்-புனர்பூசம், படிப்பு-B.E., Computer Science., MBA வேலை-I.T., மாதவருமானம்-50,000 பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்த சென்னையில் அல்லது பெங்களூரில் 80,000த்திற்கும் மேல் வருமானம் பெறும் ஐ.டி.கம்பெனியில் உள்ள மணமகன் தேவை. 9962924834, 9940074016. File No: M-67-G.

| | | | |
|---|---|---|---|
| மா | | சுக் புத | கேது |
| | இராசி | | சந்சு செவி |
| சனி லக் | | | |
| ராகு | | | |

| | | | |
|---|---|---|---|
| | சனி | | கே |
| | அம்சம் | | சந் லக் |
| | | | புத |
| சந்வி ராமா | சுக் | | சூரி |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:பால்குளம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-28.4.1997, நிறம்-சிவப்பு, உயரம்-5அடி, ராசி-தனுசு, நட்சத்திரம்-பூராடம், படிப்பு-B.Tech., (I.T)., இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு: 9840996091, File No:M-32-G.

| | | | |
|---|---|---|---|
| லக்பு கேசனி | சூரி சுக் | | |
| | இராசி | | |
| வியா | | | செவ் |
| சந் | | | ராகு |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| புத | அம்சம் | | கேது |
| ராகு | | | சூசந் வியா |
| | லக் | செ சனி | சுக் |

## இந்து நாடார் மணமகன்

(இரட்டை சகோதரிகள்) பெயர்:S.நித்யா, சொந்தஊர்:கன்னியாகுமரி மாவட்டம், கீழ்குளம்,, இருப்பிடம்-சென்னை, அயப்பாக்கம், திருவள்ளூர்-600077, நிறம்-சிவப்பு, பிறந்ததேதி-17.11.1992, நேரம்-2pm, உயரம்-5.3, ராசி-கடகம், நட்சத்திரம்-ஆயில்யம், படிப்பு-B.Sc., Maths., Barclays Porur, DLF., மாதவருமானம்-40,000 பெறும் இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9444019698, 9677113678.

| | | | |
|---|---|---|---|
| | | கேது | |
| லக் மாந்தி சனி | இராசி | | செவ் சந் |
| | | | |
| சுக் | சூரிபு ராகு | | குரு |

| | | | |
|---|---|---|---|
| சந் ராகு | | குரு | லக் சனி |
| | அம்சம் | | சுக்சூ செவ் |
| மாந்தி | | | |
| | | புத | கேது |

தசைஇருப்பு-புதன்தசை-03மாதம்,22நாள்

## இந்து நாடார் மணமகன்

(இரட்டை சகோதரிகள்) பெயர்:S.திவ்யா, சொந்தஊர்:கன்னியாகுமரி மாவட்டம், கீழ்குளம், இருப்பிடம்-சென்னை, அயப்பாக்கம், திருவள்ளூர்-600077, நிறம்-சிவப்பு, பிறந்ததேதி-17.11.1992, நேரம்-2.10pm, உயரம்-5.3, ராசி-கடகம், நட்சத்திரம்-ஆயில்யம், படிப்பு-M.Phil., Economics., படித்த இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9444019698, 9677113678.

| | | | |
|---|---|---|---|
| லக் | | கேது | |
| மாந் | இராசி | | செவ் சந் |
| சனி | | | |
| சுக் | சூரிபு ராகு | | குரு |

| | | | |
|---|---|---|---|
| சந் ராகு | | குரு | சனி |
| | அம்சம் | | லக்சுக் சூசெவ் |
| மாந்தி | | | |
| | | புத | கேது |

தசைஇருப்பு-புதன்தசை-03மாதம்,22நாள்

## தோல்வியை ருசியுங்கள்! வெற்றியை ரசியுங்கள்!!

## தொழில் மேதை.ஏ.டி.பத்மசிங் ஐசக் வெற்றிப் படிகள்

**பெண்கள் முன்னேற்றத்திற்காக உருவான புதிய தொழில் சிந்தனை!**

இந்த அரோமா குணத்தை வீணடிக்காமல் நாம் அப்படியே பெறவேண்டும் என்றால் அதற்குரிய நவீன முறையில் அதை அரைத்து, மணம் போகாத அளவுக்கு 'பேக்கிங்' செய்து, பாதுகாத்து, கடைகள் வழியாக ஒவ்வொரு சமையல் அறைக்கும் கொண்டுசெல்ல வேண்டும். இஷ்டத்துக்கு அரைத்து, ஏனோதானோவாக மசாலாக்களை பாதுகாத்தால் அவைகளில் இருக்கும் அரோமா மணம் வீணாகிவிடும். வீணான பின்பு அதை சமையலுக்கு பயன்படுத்தினால் மணம், குணம், சுவை எல்லாம் குறைந்துபோகும். அதன் மூலம் நமது உடலுக்கு கிடைக்கக்கூடிய ஆரோக்கியமும் கிடைக்காமல் போய்விடும்.

'இந்த உண்மைகள் புரியாமல் தாய்மார்கள் கஷ்டப்பட்டு உணவுப் பொருட்களை வாங்கி, முறைப்படுத்தப்படாத நிலையில் அரைத்து பணம், உழைப்பு, ஆரோக்கியம் ஆகியவைகளை கேள்விக்குறி ஆக்குகிறார்களே!' -என்ற கவலை கலந்த சிந்தனை எனக்கு ஏற்பட்டது.

இவர்களுக்காக நாம் நல்லது செய்தே ஆகவேண்டும் என்று முடிவெடுத்தேன். அவர்களது கஷ்டத்தை குறைத்தால்தான், அவர்கள் சமையல் அறை கைதிகளாக ஆவதை தடுக்க முடியும் என்பதையும் உணர்ந்தேன்.

சமையல் அறையில் பெண்களுக்கு வேலை குறைந்தால்தான் அவர்களிடம் இருக்கும் அற்புதமான ஆற்றலையும், திறமையையும் காட்ட அவர்களுக்கு நேரம் கிடைக்கும். நேரம் கிடைத்தால்தான் வாய்ப்புகளை பயன்படுத்தி பெண்கள் முன்னேறுவார்கள். பெண்கள் முன்னேறினால்தான் குடும்பம் முன்னேறும். குடும்பம் முன்னேறினால்தான் நாடு முன்னேறும். சமையல் அறைக்குள் பெண்களை முழுநேரமும் முடக்கிப் போட்டுக்கொண்டு சும்மா பேச்சுக்கு பெண்விடுதலையை பற்றி பேசிக்கொண்டிருப்பதில் எந்த பலனும் இல்லை என்ற முடிவுக்கு வந்தேன்.



அதேநேரத்தில் சமையல் அறையின் முக்கியத்துவமும் எனக்கு தெரியும். சமையலின் முக்கியத்துவமும் எனக்கு தெரியும். ஆரோக்கியமான, ருசியான உணவை ஒவ்வொருவரும் வீட்டில் சமைத்தே ஆகவேண்டும். ஆனால் ஐந்து பேருக்கு பொங்கல் தயாரிக்க ஒரு மணிநேரத்தை செலவிட வேண்டியதில்லை. ஐந்து நிமிடத்திலே அதை செய்ய வேண்டும். அரைத்து, பொடித்து, ஐந்தாறு மசாலாக்களை சேர்த்து ஒரு குழம்பு தயாரிக்க முக்கால் மணி நேரத்தை செலவிட வேண்டியதில்லை. 3 நிமிடத்திற்குள் அதை தயார் செய்ய வேண்டும்! அதற்கு என்ன வழி? என்ற கோணத்தில் என் சிந்தனை சென்றது...." என்று தனது சிந்தனை 1990-ம் ஆண்டுகளில் பரந்து விரிந்ததை பத்மசிங் ஐசக் பதமாய் எடுத்துச் சொல்கிறார்.

சிந்தித்ததோடு நிற்கவில்லை. உடனே களத்தில் இறங்கிவிட்டார். இதற்காக ஒரு சர்வே தயாரித்திருக்கிறார்.

ஒரு சமையல் அறையில் மரபுரீதியாக காலை உணவு தயாரிக்க ஒரு குடும்பத்தலைவி எவ்வளவு நேரத்தை எடுத்துக்கொள்கிறார் என்று கணக்கிட்டுள்ளார். அந்த நேரத்தை ஐந்தில் ஒரு பாகமாக சுருக்கவும் அந்த குறுகிய நேரத்திற்குள் அதைவிட ஆரோக்கியமான, ருசியான உணவை தயாரிக்க முடியும் என்பதை நிரூபிக்கவும் திட்டமிட்டார்.

அதாவது நான்குபேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு காலை உணவை மரபுரீதியாக சமைக்க ஒரு குடும்பத்தலைவி 75 நிமிடம் எடுத்துக்கொள்வதாக வைத்துக்கொண்டால், அதே சமையலை அதைவிட சிறப்பாக 15 நிமிடத்திற்குள் முடிக்க வேண்டும் என்பது பத்மசிங் ஐசக்கின் இலக்காக இருந்தது. இந்த இலக்கை அவர் அடைந்துவிட்டால், அந்த சமூகத்திற்கு என்னென்ன பலன் கிடைக்கும் என்பதை 1990ம் ஆண்டுகளிலே அவர் தயாரித்த சர்வே வெளிப்படுத்துகிறது. (தொடரும்)




S.ராஜையா நாடார்

**சக்தி டிப்போ & சக்தி ஹார்டுவேர்ஸ்**

எங்களிடம் சிமெண்ட், மணல், ஜல்லி,செங்கல்,கட்டுமானத்திற்கு தேவையான அனைத்து பொருட்களும் கிடைக்கும்

168,புதியஎண்,123,எம்.எம்.காலனி, அண்ணாநகர், 3வது அவென்யு, (அமைந்தகரை காவல்நிலையம் அருகில்), அமைந்தகரை, சென்னை-29

போன்:9840036745, 9841085745, Ph:26214852, 26267101.

உ

Cell : 98402 87570

**மங்கள ஈஸ்வரி**

**திருமண தகவல் கூடம்**

(அனைத்து சமூகத்தினருக்கும்)

(நேரம் : காலை 10.00 - பிற்பகல் 2.00 மாலை 4.00 - 7.00)





என். தெற்கு மாடவீதி, திருமுல்லைவாயல், சென்னை-62.

# கேள்வி? பதிலில்?...... முதியோர் நல மருத்துவம்

பத்மஸ்ரீ டாக்டர்.வி.எஸ்.நடராஜன், மூத்த முதியோர் நல மருத்துவம்.044-26412030.

**மூளை, நரம்புகளின் நலம்:**

**கேள்வி:** என் வயது 77. ஞாபக மறதி என்று டாக்டரிடம் போனேன். அவர், இது வயதானதினால் வருவது என்று மாத்திரையை எழுதிக் கொடுத்தார். எனக்கு அதில் எந்த பலனும் கிடைக்கவில்லை. இதற்கு சத்துணவு மூலம் ஏதாவது பயன் கிடைக்குமா? அப்படி என்றால் ஞாபக சக்தி அதிகரிக்க எந்த வகையான உணவுகளை நான் சாப்பிடவேண்டும். எனக்கு இயற்கை வைத்தியத்தில் நம்பிக்கை உண்டு.

**பதில்:** நம்பிக்கையுடன் எந்த சிகிச்சை முறையை கடைப்பிடித்தாலும் அதற்கு நிச்சயம் தக்க பலன் கிடைக்கும். இதோ உங்களுக்காக மூளைக்கேற்ற சத்துணவைப் பற்றி ஒரு பட்டியலே கொடுத்துள்ளேன். நம்பிக்கையுடன் முயற்சித்துப் பாருங்களேன்.!

❖பசலைக்கீரையில் ஃபொலிக் ஆசிட் நிறைய உள்ளது. இதற்கு ஞாபக சக்தியை அதிகரிக்கும் தன்மை உள்ளது. இதை தொடர்ந்து சாப்பிடுபவருக்கு டிமென்சியா வருவதை 70சதவீதம் குறைக்கிறது.

தினமும் அரை கப் அளவு கீரை போதுமானது.

❖ஸ்ட்ராபெர்ரி மற்றும் ப்ளுபெர்ரி பழவகைளில் அன்டி ஆக்ஸிடன்ட் சத்து அதிகம் உள்ளது.

❖ஆப்பிளில் க்வார்சிடின் என்னும் சத்து அதிகம் உள்ளது. ஆகவே, இது மறதியைத் தடுக்கும் சக்தியுடையது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

வெங்காயத்தில் க்வார்சிடின் மற்றும் அன்தோசையானின் அதிகம் உள்ளதால், அது மூளைக்கு உகந்த உணவுப் பொருளாகும்.

மீன்களில் முக்கியமாக டுனா மீன் வகைகளில் ஒமேகா 3 என்னும் சத்து உள்ளது. இத்துடன் வைட்டமின் பி அதிகம் உள்ளதால் அல்ஸைமர் நோயை வராமல் பாதுகாக்கும் தன்மை அதிகம் உள்ளது.

மீன் எண்ணெய், ஆலிவ் எண்ணெய் மற்றும் லவங்கப்பட்டை எண்ணெய் ஆகியவை நல்ல பசியைத் தூண்டுவதுடன், நினைவாற்றலையும் அதிகரிக்கும் தன்மை கொண்டவை.

முட்டையின் மஞ்சள் கரு மூளைக்கு மிகவும் உகந்தது.

சர்க்கரை வள்ளி கிழங்கில் வைட்டமின் பி6, வைட்டமின் சி மற்றும் பீட்டாகரோடின் அதிகம் உள்ளதால் மூளைக்கு சிறந்தது.

ராஜ்மாவில் தையமின் வைட்டமின் அதிகம் உள்ளதால் மூளைக்கு சிறந்த டானிக்காகும்.

உலர்ந்த திராட்சையில் இரும்புச்சத்து, பி காம்ப்லக்ஸ், ஃபொலிக் ஆசிட் கால்சியம் மற்றும் மக்னீஷியம் அதிகம் உள்ளதால் மூளைக்கு ஒரு டானிக்காக இருக்கும்.

பொட்டாசியம் அதிகம் உள்ள வாழைப் பழத்துக்கு நினைவாற்றலை அதிகரிக்கும் சக்தி உள்ளது.

கிரீன் டீ வயதான பின் வரும் ஞாபக மறதி மற்றும் நரம்பு சார்ந்த (அல்ஸைமர் மற்றும் பார்க்கின்ஸன்ஸ்) நோய்களைத் தடுக்கிறது.

முளைகட்டின கோதுமை இதில் வைட்டமின் ஈ, செலினியம் நிறைய உள்ளது. மறதியைத் தவிர்க்க உதவும்.

காபிக்கு நினைவாற்றலை அதிகரிக்கும் தன்மை உண்டு என்பது அல்லோனா மாகாணத்தில் செய்த ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், ஒரு நாளைக்கு 2-3கப் மிகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

ஞாபக சக்திக்கு பட்டை உணவில் வாசனை மற்றும் ருசிக்காக பட்டை லவங்கம், ஏலம் உள்ளிட்ட பொருட்கள் சேர்க்கப்படுகின்றன. பட்டையில் உள்ள மூலப் பொருள் மறதி நோய்க்கு மருந்தாக இருக்கிறது என்பது சமீபத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது. மறதி நோய் உள்ளவர்கள் மட்டுமின்றி மற்றவர்களும் கூட பட்டையைத் தேவையான அளவு உட்கொள்ளலாம். அதே நேரத்தில் நாள் ஒன்றுக்கு 10கிராம் என்ற அளவுக்கு மிகாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

வல்லாரைக் கீரையின் மூன்று இலைகளை எடுத்து அதன் பின்புறம் தேன் தடவி தினமும் சாப்பிட்டால் ஞாபக சக்தி அதிகரிக்கும் என்று சித்த மருத்துவம் கூறுகிறது.

**தொகுப்பு: - எல்மாமதி..**

ஸ்ரீ அருஞ்சுனை காத்த அய்யனார் துணை.

G.முத்துகனி நாடார், முத்துகனி பிரதர்ஸ் G.பால்ராஜ் நாடார் G.தங்கராஜ் நாடார்

**ஜோதி ஸ்வீட்ஸ் பேக்கரி** 9789427171 7397152711

**வளர்மதி பேன்சிஸ் ஸ்டோர்ஸ்**

கோல்டு கவரிங், பொம்மை, குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள் இங்கு கிடைக்கும்.

**ஸ்ரீ பவானி அம்மன் பாத்திரக்கடை**

எங்களிடம்: பித்தளை, அலுமினியம் பாத்திரங்கள் கிடைக்கும்.

நெ.132, பஜார் வீதி, பெரியபாளையம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர்மாவட்டம்-601102.

**விருதுநகர் இந்து நாடார் வியாபாரிகள் சங்கம் திருமண தகவல் மையம்**

**இந்து நாடார்களுக்கு மட்டும்.**(மணமகன்/மணமகள்) செயல்படும் திருமண தகவல் மையம் பதிவு கட்டணம் 200 மட்டும். வேறு எந்தவித கட்டணமும் கிடையாது. மணமகன்/மணமகள் தேவைப்படுவோர் பதிவு செய்து பயன்பெறும்படி கேட்டுக்கொள்கிறேன். (வசதி குறைவானவர்களுக்கு பதிவுகட்டணம் கிடையாது).

**மா.பட்டாணி நாடார் நினைவு டிரஸ்ட்,** 156,மெயின்பஜார், விருதுநகர், செல்:9486555373, 8610212126.

# உறவுகள்!

**உலகை பிடித்த நோய் - பசியும் பட்டினியும் தான்**

தனிமனிதனுக்கு உணவில்லையெனில் என்று பாரதி எழுப்பிய கூக்குரலை மனதில் கொண்டு, இன்று உலக மக்களின் யதார்த்த நிலை என்ன என்பதை இப்போது சில உண்மைப் புள்ளிவிவரங்கள் மூலம் இப்போது பார்ப்போம். ஒரு மனிதனின் உடலில் என்ன நோய் என்று துல்லியமாகக் கண்டுபிடித்த பிறகுதானே அதற்கு என்ன மருந்து, என்ன சிகிச்சை என்பதை மருத்துவரால் முடிவுசெய்ய இயலும். உலகின் மொத்த மக்கள்தொகை 700 கோடிக்கும் மேல் இவர்களில் 80 கோடியே 50 லட்சத்துக்கும் அதிகமானோர் தினமும் 3 வேளை உண்ண உணவில்லாதவர்கள். அதாவது 9 பேரில் ஒருவருக்கு போதிய உணவில்லை. போதிய உணவில்லாதவர்களில் 98 சதவீதம் பேர் வளரும் நாடுகளில் வாழ்கின்றனர். உலகில் பசியால் வாடுபவர்களில் 60 சதவீதம் பேர் பெண்கள்.

உலகின் மிக, மிக ஏழ்மையான மக்களில் 75 சதவீதம் பேர் கிராமங்களில் விவசாயத்தை நம்பியே வாழ்கின்றனர். வறுமையில் வாடும் மக்களில் 50 சதவீதம் பேர் விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். ஆயுதப் போரை விட கூடுதல் கொடுமையானது உலக மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள இந்த ஏற்றத் தாழ்வு என வருணிக்கப்படுகிறது. இந்த ஏற்றதாழ்வு தான் உலக மக்களைப் பிடித்துள்ள மிகப் பெரிய நோயாகும். இதைத்தான் தனியொருவனுக்கு உணவில்லையேல் ஜெகத்தினை அழித்திடுவோம் என்று தனது மொழியில் சொன்னான் பாரதி. உலகின் நோய் என்ன என்று கண்டுபிடித்துவிட்டோம் இனி சிகிச்சை என்ன என்று பார்க்க வேண்டும்.

வாழ்க்கையில் எதிர்நீச்சல் போடுவது ஒரு சவால்தான். எதிரிகள் ஊழல் ரூபத்தில் வந்தாலும், மாறுவேடத்தில் வந்தாலும் அவர்களைச் சுக்குநூறாக்குவதில்தானே வெற்றி இருக்க முடியும்! உறவுகள் இருந்தால். உறவுகள் ஒன்று சேர்ந்தால் மலையும் மடுவாகுமே! கடலும் கடுகாகுமே! ஏழைகள் - பணக்காரர்கள், இருப்பவர்கள் - இல்லாதவர்கள் எல்லோரையும் இணைத்துக் கொண்டுதான் இதை நாம் சாதித்துக் காட்ட முடியும்!

நோயையும் தீர்க்க வேண்டும். ஊழல் என்னும் பக்க விளைவுகளையும் ஒழிக்க வேண்டும். எப்போதுமே ஒரு காரியத்தில் இறங்கும்போதுதான் பிரச்சனைகள் தோன்றும். சும்மா இருக்கும்போது பிரச்சனைகள் தோன்றாது. பிரச்சனைகளை வென்றெடுப்பதில் தான் வெற்றி இருக்கிறது. பிரச்சனையற்ற வாழ்க்கை ஒரு வாழ்க்கையா என்று கேட்டவர் பண்டித ஜவகர்லால் நேரு. என்னைப் பொறுத்தவரை எதிர்நீச்சல் போடத் திறந்த கடலை நான் தேர்ந்தெடுப்பேன். கடலின் மொத்தப் புயல்கள், கொந்தளிப்புகளோடு அதனைச் சந்திக்கத் தயார் என்றவர் நேரு. உலக மக்கள் ஒன்று சேர்ந்தால் வானமே நம் கையில்! உழைக்கும் மக்களே ஒன்றுசேருங்கள் நாம் இழப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால் வென்றெடுக்கப்போவதோ இந்த உலகை என்று காரல் மார்க்ஸ் அழைத்ததைப் போல நாம் ஜெயிப்பதற்கு இந்த உலகம் இருக்கிறது. எல்லோரும் இவ்வுலகின் மன்னர்கள். இம்மண்ணின் மைந்தர்கள் என முழங்குவோம். பேருவகைக் களிப்போடு மண்ணுலக மாந்தர்கள் பாடித் திரியும் நாள் வெகு தொலைவில் இல்லை! இதன் வழிமுறை அதிக வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதாகும். புதிய வேலைகளை உருவாக்கி அநேகம் பேருக்கு வேலை தரலாம்.

கல்வி, உயர் கல்வி வாய்ப்புகளை அனைவருக்கும் கிடைக்கச் செய்வது முக்கியச் சேவையாகும். ஆண்-பெண் வேறுபாடுகளை வேலைவாய்ப்பிலும், கல்வி வழங்குவதிலும் நீக்க வேண்டும். விஞ்ஞான அறிவு வளர்ச்சி, தொழில்நுட்ப அறிவு வளர்ச்சி உலகெங்கும் பரவலாகப் பெருகப் பெருக அதற்கேற்ப சமூக வளர்ச்சி மேம்படும். உலகப் பணக்காரர்கள் தாங்கள் குவித்து வைத்துள்ள செல்வங்களை உலகெங்கும் உள்ள ஏழை மக்களின் கல்வி வளர்ச்சி, ஆரோக்கிய வளர்ச்சிக்குத் தாராளமாக உதவும் வகையில் அறக்கட்டளைகள், நல உலவித் திட்டங்கள், சமுதாயப் பணிகள், நன்கொடைகள் மூலம் வாரி வழங்க வேண்டும். தாங்கள் நடத்தும் தொழில் நிறுவனங்களில் ஊழியர்களின் வாழ்வாதாரங்களுக்கு முன்னுரிமை வழங்கி அவர்களின் வாழ்வு வளம்பெற அனைத்துப் புதிய திட்டங்களை வகுப்பதில் இணை நிறுவனங்களோடு போட்டியிடும் மனப்பாங்கினை மேற்கொள்ள வேண்டும். (தொடரும்)




அனைவருக்கும் இனிய புத்தாண்டு தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!!

**தமிழ் திருமண மாலை**

**நாடார் வரன்கள் தகவல் நிலையம்**

போரூர், சென்னை-600 116.

**திருமண ஆலோசகர்கள்:** T.செந்தூர்பாண்டியன் (ஜோதிட சிந்து) 9884040906

**திருமுருகன் செல்:9382189766.**

விலைகுறைவு! **R.Suresh Ph: 2226 6961, 22266962** மனநிறைவு!

**AMUTHA & CO**





**Sony, L.G, TCL, SamSung, Onida, Sun sui, Akai, Philips, Panasonic, IFB, WhirlPool, Godrej, Kenstar, Kelvinator, Hitachi, Carrier, Voltas, Videocon, Electrolux, Tatasky, Big Tv, Aritel, Sun Direct, ULTRA, Sowbaghya, Amirtha, Akshaya, Lakshmi, Preethi, ButterFly, Usha, Khaitan, Crompton, Orient, Almonard, Havells**

**1, Venkatesan Street, Shanmugam Road, Tambaram West, Chennai-45.**

# பாஞ்சாலி

எஸ்.விஜயராஜ்

**அரச கட்டளை...**

அஸ்தினாபுரத்தை இரண்டாக பிரிக்க வேண்டுமாம்.. அதில் ஒரு பாதியை பாண்டவர்களுக்கு கொடுக்க வேண்டுமாம்..

இனிமேலும் அவர்களால் நாடற்றவர்களாக இருக்க முடியாதாம்.. ஏறக்குறைய ஒரு மிரட்டலைப் போலவே இருந்தது அந்த செய்தி..



இப்படி அடுத்தடுத்து வந்த செய்திகளால்.. பைத்தியம் பிடித்தவனைப் போல் ஆகி விட்டான் திருதராஷ்டிரன்..

அடுத்து என்ன செய்யலாம்.. குழப்பம்..

துரியோதனனுக்கும் அதே குழப்பம்தான்..

இந்த சமயத்தில்.. துரியோதனனை தெளிவு படுத்தினான் சகுனி.. ஒரு தத்துவத்தை சொன்னான்..

அருமை மருமகனே துரியா.. நீ நினைத்தால் நம் எதிரிகளின் பலத்தை குறைத்து விடலாம்.. அதற்கு மூன்று வழிகள் இருக்கின்றன..

முதல் வழி.. அவனுக்கு பலம் எங்கிருந்து வருகிறது என்பதை கண்டறிய வேண்டும்.. அறிந்ததும் அதை நிறுத்தி விட வேண்டும்..

அப்படி செய்தால்.. அவன் பலம் இழப்பான்.. நாம் பலம் பெறுவோம்..

இரண்டாவது வழி.. சில்லறை தொந்தரவுகளை நாம் அவர்களுக்கு கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும்.. இடைவிடாது கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும்..

விளைவு.. அவன் நிம்மதியை இழப்பான்.. நாம் நிம்மதியை பெறுவோம்..

மூன்றாவது வழியோ.. மிகவும் கடுமையானது.. இரக்கம் இல்லாதது..

ஆம்.. தயவு தாட்சணியமே பார்க்கக்கூடாது.. எதிரிகளை அழித்து விட வேண்டும்..

அழித்து விட்டால்.. அவனுக்கு அழிவு நிரந்தரமாகும்.. நமக்கு நிம்மதி நிரந்தரமாகும் என்றான் சகுனி..

உடனே கர்ணன் குறுக்கிட்டான்.. அருமை மாமா அவர்களே.. நீங்கள் சொன்ன யோசனைகள் அத்தனையுமே அருமையானவை தான்..

என்றாலும் ஒரு விசயத்தை நாம் இப்போது ஒப்புக்கொள்வது நல்லது..

பாண்டவர்கள் இப்போது முன்போல் இல்லை.. பலம் பெற்று விட்டார்கள்..

இன்று அவர்களுக்கு துருபதனின் ஒத்தாசை இருக்கிறது.. யாதவர்களின் ஆதரவும் இருக்கிறது..



எல்லாவற்றுக்கும் மேலாக.. பல நட்பு நாடுகளின் உதவியும் கூட அவர்களுக்கு இன்று கிடைக்க வாய்ப்பு இருக்கிறது..

ஆகவே.. துரியோதனன் பாண்டவர்களை அழிக்க விரும்பினால்.. நீங்கள் மூன்றாவதாக கூறிய அந்த அழிக்கும் வழியே சிறந்த வழி..

யுத்தம்.. அதை உடனடியாக நாம் செய்ய வேண்டும்.. அதிலும் கூட நாம் முந்திக் கொள்ள வேண்டும்..

அவர்கள் எதிர்பார்க்காத ஒரு நேரத்தை தேர்வு செய்ய வேண்டும்.. யுத்தத்தை ஆரம்பித்து விட வேண்டும் என்றான்..

சகுனியும்.. துரியோதனனும் கர்ணனின் இந்த யோசனையை உடனே ஒப்புக் கொண்டார்கள்..

ஆனால்.. திருதராஷ்டிரனோ.. யுத்தத்தை முற்றிலுமாக நிராகரித்தான்..

பாண்டவர்கள் சிறகு முளைக்காத பறவைகளாக இருந்த காலத்திலேயே.. நீங்கள் செய்த தந்திரங்களில் இருந்து அவர்கள் தப்பினார்கள்..

இனிமேலும்.. நீங்கள் முயன்றாலும்.. அது அப்படித் தான் நடக்கும்.. ஆகவே.. அவர்களை நாம் இனி எதிர்க்க வேண்டாம்..

பகையை விலக்கி விட்டு.. அவர்களுக்கு உரியதை வழங்கி விடுவோம்.. அப்படி செய்தால் நாடும் நம்மை வாழ்த்தும்.. நம் புகழும் ஓங்கும்.. ஆகவே..

எதையும் அன்பினாலேயே சாதியுங்கள்.. ஆயுதங்கள் நமக்கு வேண்டாம் என்றான்..

அப்படி சொன்னதோடு அவன் நிற்கவில்லை.. பீஷ்மரை அழைத்தான்.. அவரிடமும் தனது எண்ணத்தை சொன்னான்..

பீஷ்மரும் அதுவே சரி என்றார்.. பாண்டவர்களுக்கும் இது தந்தை நாடு.. தந்தை ஆண்ட நாடு..

அதனால்தான் ஆட்சி உரிமை வேண்டும் என்று அவர்களும் கேட்கிறார்கள்..

அது தவறில்லை.. அவர்களது பங்கை அவர்களுக்கு வழங்கி அவர்களை வாழ வைப்பதும்.. ஆள வைப்பதும்.. மன்னனாகிய உனது கடமையே என்றார் அவர்..

அடுத்த நிமிடமே இருவரும் விதுரனை அழைத்தார்கள்.. அவனுக்கு உத்தரவிட்டான் திருதராஷ்டிரன்..

உடனே பாஞ்சாலத்துக்கு போ.. பாண்டவர்களை சகல மரியாதையோடு இங்கே அழைத்து வா..

அவர்களுக்கு ஒரு புதுவாழ்வை நாம் ஏற்படுத்தி தரலாம் என்றான்.. (தொடரும்)




2.1.2024 அன்று பிறந்த நாள் காணும் பெருந்தலைவர் மக்கள் கட்சி தலைவர் என்.ஆர்.தனபாலன் அவர்களுக்கு பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்



28.12.2023 அன்று பிறந்த நாள் காணும் சித்ரா.அ.கிருஷ்ணன் அவர்களை வாழ்த்துகிறோம்.

கலைமாமணி விருது பெற்ற திரு.தாமரை செந்தூர்பாண்டி எழுதும் சமூக தொடர்கதை.

# நிலவுக்குத் தென்றல் பகையானால்!

கலைமாமணி தாமரைசெந்தூர்பாண்டி, செல்:8838477377.



23. நீங்கள் கேட்டீர்களே உன் கணவன் என்று...? எவனாவது கணவனாயிருந்திருந்தால் இப்படி என்னை விற்பானா? அவன் என் எதிரி பரம எதிரி என்றவள் நடந்து போன விசயங்களைச் சொல்லி முடித்தாள்.

போலீஸ் துணை ஆய்வர் மனித நேயம் சுரக்க எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தார்.

"இந்தப் பணம் உங்களுக்கு எப்படிம்மா வந்தது?"

சொன்னாள்.

"குட்! படித்தவர் என்பதால் புத்திசாலித்தனமாய் நடந்து கொண்டீர்கள். உங்கள் பெயர்...? சொன்னாள்.

ஊர் சொன்னாள்.

வேலை பார்க்கும் கம்பெனியைக் கேட்டார். அவள் சொன்னதும் வியப்பால் அவர் கண்கள் விரிந்தன.

"அங்கேயா நீங்கள் வேலை செய்கீறீர்கள்...?"

"ஏன் சார் அப்படிக் கேட்கிறீர்கள்..."

"அவர்தான் என்னைக்கூட இந்த அளவுக்கு உத்தமர். திருமணமே செய்து கொள்ளாத அந்த நல்ல மனிதரால் வாழ்ந்தவர்கள் எத்தனை பேர் தெரியுமா...? மேடம்... நீங்கள் அங்கே வேலை பார்ப்பதே உங்களின் அதிர்ஷ்டம்! நான் ஐயாவுக்கு போன் பண்ணட்டுமா?"

"ப்ளீஸ், வேண்டாம்! தயவு செய்து இந்த விசயம் இப்போதைக்கு அவருக்குத் தெரிய வேண்டாம்." கெஞ்சினாள்.

"ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?"

"காரணம் ஏதுமில்லை. நம்மால் அவருக்குச் சிரமம் இருக்கக் கூடாதல்லவா?"

"ம்ம்....ம்ம்...அதுவும் சரிதான். அவருக்குப் பதிலாய் நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன்" என்றவர் எழுத்தரை அழைத்தார். ஒரு புகார் எழுதி வாங்கச் சொன்னார்.

"ப்ளீஸ்... ஒரு கம்ப்ளெய்ண்ட் எழுதிக் கொடுங்கள் மேடம்"

எழுதிக் கொடுத்தாள்.

வாங்கிப் படித்தார் அதிகாரி.

"பணத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லையே...?"

"உண்மையில் அவன் என்னைத் தூக்கிப் போகவே வந்தான்! எனக்கு, என்னை விலைக்கு வாங்கினேன் என்ற அடிமை வியாபாரிக்குத் தண்டனை வாங்கித் தருவது மட்டும்தான் எண்ணம்.."

"ரைட்! அதுவும் சரிதான். நாங்கள் அழைக்கும்போது தவறாமல் வந்து போவீர்களா...?"

"சரி"

"பணத்தைச் சரி பார்த்து வாங்கிக் கொள்ளுங்கள்." அவரே பணத்தை எண்ணிக் கொடுத்தார்.

"பணத்தை வழக்கில் கொண்டு வராததால்தான் உங்கள் கையில் இதைத் தர முடிகிறது. இல்லையென்றால் கோர்ட்டில்தான் ஒப்படைத்தாக வேண்டும்."

"ரொம்ப நன்றி சார்." நன்றியுடன் பணத்தைப் பெற்றுக் கொண்டாள்.

"கவனமாயிருங்கள். இந்த வேந்தன் மோசமானவன். இவனை உள்ளே போட்ட கோபத்தில் இவன் கையாட்களை கூட உங்களுக்கு தொல்லை தரலாம். எதாவது சின்ன சந்தேகம் வந்தாலும் எங்களுக்கு போன் செய்யுங்கள்..."

"சரி சார்!" போன் நம்பரை குறித்துக் கொண்டாள். விடைபெற்றுப் புறப்பட்டாள்.

எழுத்தர்... சப்-இன்ஸ்பெக்டரிடம் ஓடிவந்தார்.

"அந்தம்மாவைக்கூப்பிட்டு கொஞ்சம் உட்கார வைத்தாக வேண்டும் சார்..."

"ஏன்?"

நம்மிடம் எஸ்.பி. ஐயா போனவாரம் ஒரு பெண்ணைத் தேடச் சொல்லி செய்தி அனுப்பினார்களே... அந்தப் பெண் இந்த அம்மாவேதான்...!"

"காட்! இதை ஏனய்யா இவ்வளவு நேரமாய்ச் சொல்லவில்லை.?

நினைவிற்கு வரவில்லை..."

நல்ல வேளை! இப்பொழுதாவது வந்ததே... அந்தப் பெண்ணைக் கூப்பிடுங்கள்..." எழுத்தரே ஓடிப்போய் சாவித்திரியை அழைத்து வந்தார்.

குழப்பத்துடன் திரும்பி வந்தாள் சாவித்திரி.

வயர்லெஸில் தொடர்பு கொண்டு எஸ்.பி.அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

"ஏன் சார் என்னை உட்கார வைக்கிறீர்கள்?"

"இல்லை..." தெரிந்தவர்கள்...?"

இல்லை...

பேங்க் ஆபீஸர்கள்...?

இல்லை.... சார்...

"உங்கள் வீட்டு முகவரியை சொல்லுங்கள்..."

புகாரில் கொடுத்திருக்கிறேனே..."

"சரி. ஆபீசுக்கு எத்தனை மணிக்கு புறப்படுவீர்கள்?"

"காலையில் ஒன்பது மனிக்கு"

சரி போய் வாருங்கள்...

எதற்காகத் தன்னை இப்படியெல்லாம் விசாரிக்கிறார் என்பது புரியாமலேயே நடந்தாள் சாவித்திரி.

வீட்டிற்கு போனாள்.

மளிகைக் கடைப் பையன் ஓடிவந்தான்.

"என்னக்கா... பணம் திரும்ப கிடைத்ததா.?"

"ஆமாம்...

"பரவாயில்லை ! உடனே வீட்டை வேறு இடத்திற்கு மாற்றிவிடுங்கள்.."

ஏன்?

"அப்படித்தான்! நீங்கள் போலீசில் ஒப்படைத்தவனின் அடியாட்கள் நாலைந்து தடவை இங்கே வந்து சுற்றிவிட்டு போனார்கள்!"

"கடவுளே...! வீடு எங்கு பார்ப்பது...?

நான் பார்க்கட்டுமா?

ம்ம்...சரி... போனான் அவன். நெஞ்சு படபடக்க வீட்டைத் திறந்தாள் சாவித்திரி.

24. இரவு பத்து மணி சுமாருக்குத்தான் மளிகை கடைப் பையன் வந்தான்.

"என்ன ஆனது தம்பி...? வீடெதும் கிடைத்ததா?" பரபரப்புடன் கேட்டாள் சாவித்திரி.

"கிடைத்தது அக்கா. ஆனால் வாடகை கொஞ்சம் ஜாஸ்தியாகச் சொல்கிறார்கள்."

"எவ்வளவு வாடகை?"

"நாலாயிரம் ரூபாய்?"

....."ஆனால் வீடு வசதியாயிருக்கிறது."

"பரவாயில்லை அட்வான்ஸ் எவ்வளவு?" "மூன்று மாத வாடகை.."சரி கொடுத்துவிடுவோம். வீடு பாதுகாப்பான இடத்தில்தானா?" "ஆமாம். கிண்டியில். எப்பொழுதும் ஆள்நடமாட்டமுள்ள இடத்தில், அனாவசியமாய் யாரும் வரமாட்டார்கள்."

"இந்த சத்திய வேந்தன்... அவன் ஆட்கள்?"

"தைரியமாய் அங்கு வரமாட்டார்கள். காவல்நிலையம் அங்கிருந்து கூப்பிடும் தூரத்தில் தானிருக்கிறது."

"சரி தம்பி. ஏற்பாடு செய்துவிடு இன்றைக்கு இரவே வீட்டைச் சுத்தப்படுத்தி... நாளைக்குக் குடிபோய் விடலாமா?"

"இன்றைக்கு ஒண்ணும் முடியாது. நாளைக்கு நீங்கள் அலுவலகம் போய் வரும்பொழுது நான் எல்லா ஏற்பாடுகளும் செய்து வைத்துவிடுகிறேன். சாயங்காலமே ஒரு வேன் ஏற்பாடு செய்து ஜாமான்களுடன் அங்கு குடியேறிவிடலாம்."

"நாளைக்குள் முடியுமா?""முடியும். அது என் பொறுப்பு".

"தம்பீ...!"

"நீங்கள் நம்மூர்க்காரர்கள். துணையில்லாமல் நீங்கள் கஷ்டப்படும்போது நான் உதவாமலிருந்தால் என்னக்கா அர்த்தம்? நீங்களே என் கூடப் பிறக்காத தம்பி தான்! எனக்கு இனி என்றென்றும் நீதான் தம்பி!

ரொம்ப சந்தோச மக்கா! நீங்கள் நிம்மதியாய் வீட்டில் தூங்குங்கள். இன்றைக்கு நான் சிலரிடம் சொல்லி வைத்திருக்கிறேன். வருவார்கள். அவர்களோடு என் கடைத் திண்டிலேயே நாங்கள் படுத்துக் கொள்வோம். எவனும் இங்கே வந்தால் அடித்து விரட்டி விடுவோம். "வெளியே கொசு கடிக்கும்... குளிரடிக்குமே எப்படியப்பா படுப்பீர்கள்?"

"அட... அதுபற்றியெல்லாம் நீங்கள் கவலைப்பட வேண்டாம். நாங்கள் பார்த்துக் கொள்வோம்."

விடைபெற்றுப் போய்விட்டான்.

அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!!

M.S.சேகர் நாடார் & சன்ஸ்

ஸ்ரீ குற்றால மாடசாமி துணை

ஸ்ரீ வெங்கடாஜலபதி துணை

செல்:98944 83509

97896 86474

94435 74102.

# ஸ்ரீ ராஜ்குமார்

## பாத்திர மாளிகை & பர்னிச்சர்ஸ்

## GST No:33AAZFR4404Q1ZG

மயிலாடுதுறை ரோடு, வைத்தீஸ்வரன்கோயில் - 609 117.

---

அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள்!



R. ARUMUGAM, 9840233872. S.PRABAKARAN, 9962665162.

# AMUDHAA HOTEL

No:68-D, Valmiki Street, Thiruvamiyur, Chennai-41.

NO:22, Kannagi Street, Anbalagan Nagar, Taramani, Chennai-113

---



ஸ்ரீ பொன் படைப்போர் ஐய்யனார் துணை

அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள்!

# ஸ்ரீ ஈஸ்வரி ஸ்டோர்



அரிசி வகைகள் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

இங்கு மாட்டுத் தீவனம் கிடைக்கும்.

உரிமை:ஆர்.கருப்புசாமி

5/19, அனுமந்தபுரம் ரோடு, சிங்கபெருமாள் கோயில், செல்:9944926488, 9941946422, 8012694685, 9003271615.

---

அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள்!

# விஜய் ஆப்டிகல்ஸ்





- Eye Testing
- Spectactes
- Contact Lens
- Sun Glasses

114, பஜார் ரோடு, சைதாப்பேட்டை,
சென்னை-15. போன்:24340895.



---

அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!!

# VIJAY TRADERS

## Jaggery Merchant



207, Kamarajapuram, I main Road, Nungambakkam, Chennai-34. ph:28170441, 28174947, 28170054, 9444012267, 9884190012. 8939381333.

# வெற்றிப்படிக்கட்டு

வசந்த் & கோ H.வசந்தகுமார்M.A., Ex.MP (Member of Parliament)

**இரைக்கான ஓட்டம், உயிருக்கான ஓட்டம்!**



காட்டில் தன் உயிருக்கு அஞ்சி ஓடும் மானின் வேகத்துடன் தன் இரைக்காக ஓடும் புலியின் வேகத்தை ஒப்பிட்டால் மானின் ஓட்ட வேகம் அதிகம். அதற்குக் காரணம் அதன் உயிர் உச்சக்கட்டப் போராட்டம் புலிக்கோ வயிற்றுப் பசிக்கு இரை. பசியின் வேகம், உயிரின் வேகத்தோடு போட்டி போட முடியுமா? சில சமயங்களில் சூழ்நிலை காரணமாகத்தான் மான் புலியிடம் சிக்கும். இதுபோல உயிருக்கு இணையான ஒரு விஷயத்திற்குப் போராடும் பொழுது அதனுடைய வேகம், விவேகம், தைரியம் உச்சக்கட்டமாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் வெற்றி பெற முடியும்.

சிலப்பதிகாரத்தில் கோவலன் மாதவியைப் பிரிந்து கண்ணகியிடம் திருந்தி வந்த பொழுது அவனிடம் செல்வம் இல்லை. செல்வம் தேடி மதுரை புறப்பட்டு வந்தனர் தம்பதியர். கண்ணகி அரண்மனை போன்ற மாளிகையில் கூடத் தரையில் கால்பதியாமல் ராஜபோக வாழ்க்கை வாழ்ந்தவள். முதன் முறையாகக் கணவனுக்காகக் கல்லும், முள்ளும் நிறைந்த கானகப்பாதையில் கால் தரையில் பதிய கணவன் கோவலனுடன் நடந்து போனாள். மதுரைக்குச் சென்று வியாபாரம் செய்து பிழைக்கலாம் என்று கண்ணகி காலில் அணிந்திருந்த ஒரு சிலம்பை, மாணிக்கக் கற்கள் பதித்ததை விற்கச் சென்ற இடத்தில் நகை வியாபாரியின் மோசடியால் பாண்டிய மன்னனின் அவசரத் தீர்ப்புக்கு ஆளாகி. திருடன் என்ற அவப்பெயருடன் வெட்டுண்டு இறங்கிறான். வெளியுலகம் தெரியாமல் வாழ்ந்த அப்பாவிப் பெண் கண்ணகி கணவன் இறந்தச் செய்தியைக் கேட்டு மயங்கி விழுகிறாள். இருந்தாலும் நிரபராதியான தன் கணவன் மீது கள்வன் எனக் குற்றம் சாட்டிக் கொன்று விட்ட தகவல் அறிந்து அவளது தன்மான உணர்வுகள் வீறு கொண்டு எழ. தன் பெண்மைக்கே உரிய அச்சம், நாணம், மடம் ஆகிய குணங்களை விட்டுத் தைரியமாகப் பாண்டிய மன்னனிடம் நீதி கேட்டு மறுகாலில் இருந்த ஒற்றைக்கால் சிலம்புடன் பாண்டிய மன்னன் அரண்மனைக்குக் கோபமாக வருகிறாள்.

“தேரா மன்னா” என்று ஆரம்பமே மன்னனின் குற்றத்தை விளக்கும் வகையில் நீதிதவறிய மன்னனே என்ற அர்த்தத்தில் அழைத்தபடி மன்னன் முன் சென்று தன் கணவன் குற்றமற்றவன். ‘பிழைப்புத் தேடி வந்த என் கணவனைக் கள்வன் எனக் குற்றம் சாட்டிக் கொன்ற நீ மன்னனா?’ என்று கோபாவேசமாக தன் பக்க நியாயத்தை எடுத்துக் கூறி கோவலனிடம் இருந்து கைப்பற்றிய சிலம்பை அரண்மனைத் தரையில் பலம் கொண்டமட்டும் வீசியெறிந்து உடைந்த சிலம்பிலிருந்து தெறித்த மாணிக்கக் கற்களை மன்னனிடம் காட்டித் தன் கணவன் குற்றமற்றவன் என்று நிரூபித்துக் காட்டுகிறாள். ராணியின் காற்சிலம்பாக இருந்தால் அதில் முத்துக்கள்தான் இருந்திருக்கும். உண்மையை உணர்ந்த மன்னன் இறக்கிறான். கோபம் கொண்ட கண்ணகி மதுரையை எரிக்கிறாள்.

இந்தச் சம்பவத்தில் கண்ணகி தான் வாழ்ந்த வாழ்க்கைக்கு ஏற்ற குணாதிசயங்களுடன் அஞ்சி நடுங்கி இருந்திருந்தால் கணவன் கள்வன் என்ற வீண்பழி நிலைத்திருக்கும் உண்மை தெரியாமல் மறைக்கப்பட்டிருக்கும். கண்ணகி உண்மையை உலகுக்கு உணர்த்த வேண்டும் என்ற உத்வேகத்துடன் செயல்பட்டதால் தான், தன் பக்க நியாயத்தை எடுத்துக்கூறி கணவன் குற்றமற்றவன். நிரபராதி என்று நிரூபிக்க முடிந்தது. அதுதான் கண்ணகியை வெற்றி பெறச் செய்தது. எனவே நமது முயற்சிகள் போராடும் அளவில் கடினமாக இருந்தால் தளர்ந்து விடாதீர்கள். உத்வேகத்துடன், விடாமுயற்சியுடன் போராடி வெற்றி பெறுங்கள். (தொடரும்)


அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்!



V.L.Vellaya Nadar

V.L.வெள்ளையா நாடார்

ரியல் எஸ்டேட்



V.Shankarlingam

V. SHANKARLINGAM MOBILES

Available All Cell Phone & Accessories etc...
No:6, Vijayaragavapuram, P.V.Rajamannar Salai, Chennai-93

Cell:9384728151. 9841511234, 9786111234, 044-43540234



V. Mohanraj

திருமணப்பட்டு
ஜவுளிகளுக்கு.........
ராஜ்மஹால்
வெங்கலக்கடைத் தெரு,
மதுரை-1. போன்: 2622647, 2666666.
தொட்டுத் தொடரும் ஒரு
பட்டுப் பாரம்பாரியம்.

# உன் சிந்தனை உனது வெற்றி

**கடமையின் பசி**

- முனைவர் சா.தா.நோவா **செல்:9443303456,**



ஏனைய மனிதர்களால் கவனிக்காமல் விட்டுவிடப்படும் நிகழ்ச்சிகள், ஆர்வமுடையவர்கள் கவனத்தை ஈர்த்து அவற்றைப் பற்றிச் சிந்திக்கச் செய்யும்.

"உதாரணமாக இயற்பியல் விஞ்ஞானி நியூட்டன் வாழ்க்கையில் நிகழ்ந்ததாக கூறப்படும் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம். அவர் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்த போது ஓர் ஆப்பிள் பழம் மரத்திலிருந்து அவர் அருகில் விழுந்தது" மரக்கிளையிலிருந்து விழுந்த பழம் மேலே செல்லாமல் ஏன் தரையை நோக்கி வந்தது? என நியூட்டன் ஆராயத் தொடங்கினார்.

அதன் விளைவே 'புவி ஈர்க்கும் சக்தி' என்னும் தத்துவம் உலகிற்கு கிடைத்தது. இதன்மூலம் இன்றைய அறிவியல் பூத்துக் குலுங்குகிறது.

"ஒரு விஞ்ஞானி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த போது, திடீரென மயங்கி விழுந்துவிட்டார். மறுபடியும் அவருக்கு நினைவு திரும்பியபோது தடைபட்ட ஆராய்ச்சியை தொடராமல், தான் மயங்கி விழுந்ததற்கானக் காரணம் என்ன? என்று சிந்திக்கத் தொடங்கினார். அதனால் குளோரோஃபார்ம் என்ற மயக்க மருந்து உலகிற்கு கிடைத்தது"

ஏதோ ஒரு புதுமையை தேர்ந்தெடுத்து, அதையே வாழ்க்கையின் இலட்சியமாக்கிக் கொள்ளும் மனப்பாங்கினால் அவர்கள் தங்கள் வாழ்வில் வெற்றி பெற்றார்கள்.

நீச்சல் வீராங்கனை ஒருத்தி ஒரு தீவிலிருந்து, முப்பது கிலோமீட்டர் நீந்திக்கடந்து மற்றொரு தீவின் கரையை அடைய முயற்சி செய்தாள்.

கடலில் இறங்கி, நீந்த ஆரம்பித்த சில மணி நேரத்தில் குளிரால் நடுங்கினாள். பத்துமணி நேரத்திற்குப் பின்பு கை கால் எல்லாம் மரத்துப் போயின. "இனி நீந்தி முடியாது; என்னைக் கரையேற்றி விடுங்கள்?" என்றாள்.

"கரை ஏற்றப்பட்டாள். கரை ஏறிய பின்தான் தெரிந்தது. இன்னும் சில அடிகள் தாக்குப்பிடித்து நீந்தியிருந்தால், அடுத்த கரையை அடைந்து இருக்கலாம் என்று! பிறகு அவள் நினைத்தாள். கரை மட்டும் கண்ணுக்குத் தெரிந்திருந்தால் இந்தக் கடும் குளிரையும், பனிப்படலத்தையும் கடந்து கரையை எட்டிப் பிடித்திருப்பேன் என்று!"

இந்த எண்ணத்துடன் மறுபடியும் துணிவுடன் கடலில் இறங்கினாள். இம்முறை சோர்வை பொருட்படுத்தவில்லை. கடுங்குளிரையும் பனிப்படலத்தையும் கடந்து கரையை அடைந்தாள்.

அது மட்டுமல்ல இதற்கு முன் இவ்வளவு நீண்ட தூரத்தை நீந்திக் கடந்தவர்களை விட குறைந்த நேரத்தில் நீந்திச் சாதனை புரிந்தாள்.

எனவே நம்பிக்கையுடன் முயன்றால் வாழ்வில் முடியாதது எதுவுமே இல்லை.

பிரம்மாண்டமான ஆகாய விமானம் பறந்து செல்வதைப் பார்ப்பதற்கு வியப்பாக இருக்கிறது.

"ஒருமுறை அடிக்கடி விமானத்தில் செல்லும் ஒருவருக்கு அருகில் புதிதாக பயணம் செய்யும் ஒருவர் அமர்ந்திருந்தார். விமானம் பூமியை விட்டுக் கிளம்பி விரைந்து மேலே செல்லும் போது, காலநிலைக் கோளாறு காரணமாக, விமானத்தின் இறக்கைகள் படபடவென அடித்துக் கொண்டு தாழ்ந்தும் உயர்ந்தும் தோன்றின. புதியவர் பதறிப் போனார்."

விமானம் விரைவில் நொறுங்கி விழப்போகிறது எனப் பயந்து கூக்குரலிட்டார்.

"அது கண்ட முன் அனுபவம் உள்ளவர் 'பயப்படாதீர்! விமானத்தின் அமைப்பே அப்படிப்பட்டதுதான்.

பெருங்காற்று வீசும்போது, இறக்கைகள் இறுக்கமாக இருக்கக்கூடாது. காற்றின் போக்குக்கு ஏற்றவாறு அசைந்து கொடுக்க வேண்டும். இல்லையென்றால் பேராபத்து நேரும். அதற்காகத்தான் அப்படி நெகிழ்ந்து கொடுக்குமாறு இறக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன என்றார்."

மனித வாழ்க்கையும் இப்படிப்பட்டது தான். சில நேரங்களில் விட்டுக்கொடுத்தும், சகிப்புத் தன்மையோடும், நடந்து கொண்டால் எடுத்துக்கொண்ட செயலில் முழுமையான வெற்றியைப் பெற்று இலக்கை நீ அடையலாம்.

உதவி செய்பவருக்கு உடனே நன்றி கூற வேண்டும். அத்தகைய வாய்ப்பை ஒவ்வொருவரும் பரிமாறிக் கொள்ள வேண்டும்.

நெஞ்சார்ந்த நன்றி என்று கூற ஒரு மணித்துளிக்கூட ஆகாது. (தொடரும்)

# காமராஜர் ஒரு சகாப்தம்

**விடுதலை வேள்வியில் காமராஜ்**

டாக்டர் வரதராஜுலு நாயுடு மீது ஆங்கில அரசு தொடுத்த வழக்கு தமிழகத்தை உலுக்கியது; கலெக்டர் ஆஷ் துரை கொலை வழக்கு, வ.உ.சி. வழக்குகளைப் போல் தமிழகத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. மதுரை வழக்கு மன்றத்தில் திரண்ட மக்களைக் கட்டுப்படுத்துவதாகக் கூறிப் போலிஸ் துப்பாக்கிச் சூடு நடத்தி இருவரைக் கொன்றது. இது குறித்துத் திரு.வி.கலியாணசுந்தர முதலியார், டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் ஆகியோர் ஆற்றிய உரை மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது. டாக்டர் வரதராஜுலு நாயுடுவுக்காகச் சேலத்தில் பிரபல வழக்கறிஞராகப் பணியாற்றி வந்த சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் (ராஜாஜி) மதுரைக்கு வந்து வாதாடி மேலும் புகழ் பெற்றார்.

ஞானம்பிள்ளை, பம்பாய் அண்ணாச்சி முதலானோர் இந்த வழக்கின் விசாரணையை நேரில் பார்க்க விருதுபட்டியிலிருந்து மதுரைக்குச் சென்று வருவதுண்டு. அவர்கள் திரும்பி வந்ததும் வழக்கின் நிலை குறித்தும், ராஜாஜியின் வாதத்திறமை குறித்தும் பேசிக் கொள்வார்கள். செய்தித்தாளின் மூலம் வழக்கின் நிகழ்வைப் படித்தறிந்த காமராஜ், இவர்களின் பேச்சையும் கேட்டபிறகு நண்பர்களுடன் விவாதிப்பான். நாயுடுவுக்குக் கீழ்க் கோர்ட்டில் பதினைந்து மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் ஹைகோர்ட்டு அப்பீலில் விடுதலை செய்யப்பட்டார்.

காமராஜ் எவரையும் ஒருமுறை பார்த்துப் பேசினால் அவர்களை மறக்காமல் நினைவில் வைத்துக் கொள்வார். பிற சமூகத்தவர்களுடன் நல்ல பழக்கம் வைத்துக் கொண்டதால், காமராஜுக்குப் பிற சமூகத்தவரும் நல்ல நண்பர்களாக இருந்து பல காரியங்களில் துணை நின்றார்கள். தெப்பக் குளத்தின் மேற்குக் கரை கைப்பிடிச்சுவர் அருகில் நண்பர்களுடன் இருந்து பேசும் காமராஜ், வடக்குக் கைப்பிடிச் சுவர் அருகில் இருந்து பேசும் ஜஸ்டிஸ் கட்சியினரின் பேச்சையும் கூர்ந்து கவனிப்பது உண்டு. காலையில் உடல்பயிற்சி, கடைவேலை, மதிய உணவுக்குப் பின் ஓய்வு, மாலை உலாவல், வாசகசாலை சென்று படித்தல், இரவு தெப்பக் குளம் கைப்பிடிச்சுவர் அருகில் நண்பர்களுடன் விவாதம் எனக் காமராஜ் செயல்பட்டுக் கொண்டிருந்தான். ஞானம்பிள்ளை கடைப்பக்கம் செல்லத் தவறுவதில்லை.

அப்படி ஒரு நாள் சென்றபோது ஞானம்பிள்ளை "இந்த முறை பம்பாய் அண்ணாச்சி கதர் உடை உடுத்தி வருவார்" என்று கூறிக் கொண்டிருந்தார். காமராஜ் அதைக் கேட்டுக் கொண்டே ஆர்வமாகத் திண்ணையின் ஒரு பக்கமாக அமர்ந்தான். அந்தக் காலத்தில் பெரியவர்கள் மட்டுமே அங்குத் திரண்டு, பேசப்படுவதை ஆர்வமுடன் கேட்பார்கள். இளைஞன் காமராஜைக் கண்டதும், அவன் ஆர்வத்தை எண்ணி மகிழ்ந்து, "தம்பி! நல்லா உட்காரேன்" என்றார் ஞானம்பிள்ளை. அங்கே காந்தியடிகளின் செயல்பாடுகள் குறித்தும் கதர் இயக்கம், மதுவிலக்கு, தீண்டாமை ஆகியன பற்றி நாடு முழுவதும் காந்தியடிகள் பரப்பி வரும் கொள்கை விளக்கங்கள் பற்றியும் விவாதித்தார்கள். காமராஜ் கடைக்குச் செல்ல வேண்டும் என்பதை மறந்தான். வீடு திரும்பும்போது, தன் மாமாவின் மனம் வருந்தாதிருக்கக் கடைப்பக்கம் தலையைக் காட்ட எண்ணினான். ஞானம்பிள்ளையும் வீட்டிற்குப் புறப்பட்டார். அவரோடு பேசிக்கொண்டே புறப்பட்டவன், அவர் வீடுவரை சென்று விட்டான். ஞானம்பிள்ளை அதிகமாக வற்புறுத்தவே, அவர் வீட்டிலேயே இரவு சாப்பாட்டை முடித்துவிட்டு, இரவு பதினோரு மணிக்கு, சற்று மனநடுக்கத்தோடு வீடு திரும்பினான். குடும்பத்தவருடன் காத்திருந்த தாய்மாமன், 'இவனை விட்டுத்தான் பிடிக்க வேண்டும்' என எண்ணி, "என்ன தம்பி? இன்றைய கூட்டத்தில் யார் பேசியது?" என்று கேட்டார். அவர் குரலில் கடுமையோ கண்டிப்போ இல்லை!

காமராஜ் அரசியலில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினான். அதனால் அவன் தோழர்களும் கூட்டமாகக் காங்கிரஸ் இயக்க நடைமுறைகளில் அக்கறை கொள்ளத் தொடங்கினார்கள். காமராஜின் மிக நெருங்கிய நண்பர்களுள் ஒருவனான தங்கசாமியின் மிளகாய் மண்டிக்கு அருகில் இருந்த சங்கிலி கருப்பன் கோயில் அருகில், காமராஜும் தோழர்களும் கூடி அரசியல் விவாதம் நடத்துவது வழக்கமாயிற்று. காங்கிரஸ் செயல்பாடுகளில் அதிக ஈடுபாடு கொண்டபின் ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கைகளை எதிர்த்து வெளியிடும் நோட்டீஸ்களில் 'இப்படிக்கு சங்கிலி கருப்பசாமி' என்று போடுவதையும் வழக்கமாகக் கொண்டார்கள். (தொடரும்)






# நாடார் மஹாஜன சங்கம்
# 72-வது சர்வதேச கர்மவீரர் மாநாடு
## தேனி.

பேரன்புடையீர்!

வணக்கம். நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் தை மாதம் 13–ம் நாள் **27.1.2024** சனிக்கிழமை, தை மாதம் 14–ம் நாள் **28.1.2024** ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரண்டு நாட்கள் தேனியில், நமது நாடார் மஹாஜன சங்கத்தின் **72-வது சர்வதேச கர்மவீரர் மாநாடு** நம் தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி காமராஜர் நகர், முத்துத்தேவன்பட்டி காமராஜர் விளையாட்டு திடலில் சீரும் சிறப்புமாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்மாநாட்டில் மத்திய மாநில அமைச்சர் பெருமக்களும், பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும், அனைத்துக்கட்சி பிரமுகர்களும், தொழிலதிபர்களும், நம் நாடார் சமுதாய பெருமக்களும் கலந்துகொண்டு சிறப்பிக்க இருக்கின்றார்கள். பெருமைமிகு மாநாட்டை நம் **தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை நாடார் சரசுவதி கல்வி நிறுவனங்கள்** பொறுப்பேற்று நடத்திக்கொடுக்க உள்ளது.

இம்மாநாட்டில் **பனைத்தொழிலாளர் கருத்தரங்கம், தொழில் கருத்தரங்கம், விவசாய கருத்தரங்கம் மற்றும் வேலை வாய்ப்பு கருத்தரங்கம்** நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மாநாட்டை **வெளிநாடு** மற்றும் **இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் இருக்கின்ற அனைத்து நாடார் பெருமக்களையும்** இணைக்கும் மாநாடாக சிறப்பாக நடத்த உள்ளோம். நமது நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ளும் அளவிற்கு இம்மாநாடு சிறப்பாக நடைபெற இப்போதிலிருந்தே தாங்கள் பணி செய்ய துவங்குமாறும், இம்மாநாட்டில் கலந்து கொள்ள தங்கள் பகுதிகளிலுள்ள நமது சமுதாய மக்கள் தங்கள் குடும்பத்துடன் அலைகடலென திரண்டு வந்து சரித்திர சாதனைமிக்க மாநாடாக திகழ ஒத்துழைப்பும், ஊக்கமும், பங்களிப்பும் கொடுத்து விழாவினை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

**T. ராஜமோகன்,B.Sc.,**
தலைவர்,
மாநாடு வரவேற்புக்குழு தேனி மேலப்பேட்டை
இந்து நாடார்கள் உறவின்முறை,
பு/எண். 1100, பெரியகுளம் ரோடு, தேனி.

**G.கரிக்கோல்ராஜ்**
பொதுச்செயலாளர்,
நாடார் மஹாஜன சங்கம்,
2, தெற்குச்சித்திரை வீதி,
மதுரை – 625 001.

# உலகம் சுற்றினோம் சந்திரிகா ராஜமோகன்.

### 7.அமெரிக்கா:ஓர் இனிய அனுபவம்

**சந்திர கல்** விமானம் மற்றும் கம்ப்யூட்டர் மியூசியத்தையும் கண்டோம். அந்த மியூசியத்தில் சந்திரனில் இருந்து எடுத்து வந்த கல்லை எல்லோரும் தொட்டுப் பார்க்கும்படி ஏற்பாடு செய்து இருந்தார்கள். நாங்களும் தொட்டுப் பார்த்தோம் இன்ப அதிர்ச்சியாக இருந்தது. இரவு 9 மணிக்குத்தான் இருள் சூழ்ந்தது. அதிகாலை 4.30 மணிக்கு விடிந்தது. மறுநாள் நியூயார்க் மன்ஹாட்டன் பகுதிக்கு பஸ்ஸில் சென்று பிறகு சுரங்க ரயில் மூலம் பென் ஸ்டேஷன் வந்து பிறகு ஆல்பர்ட்டன் பகுதிக்கு வந்து காத்திருந்தோம். டாக்டரின் மகன் முரளி எங்களை அழைத்துச் சென்றார். பிறகு பக்கத்தில் இருந்த பிள்ளையார் கோயில் சென்றோம். டாக்டரும் அவர் மனைவி சூர்யாவும் அவரது மகள் கல்பனாவும் எங்களை நன்கு கவனித்துக் கொண்டார்கள். நியூயார்க் விமான நிலையத்தில் டாக்டர் மூர்த்தி எங்களை காரில் அழைத்து வந்து இறக்கி விட்டார். அங்கிருந்து ஆர்லாண்டோ வந்தடைந்தோம். ஹோட்டலை விட குறைந்த கட்டணத்தில் உள்ள மோட்டலில் ஒட்டலைப் போலவே இந்த மோட்டலும் மிகவும் சுத்தமாக இருந்தது. தங்கினோம்.

டிஸ்னிலேண்ட்:

அடுத்து நாங்கள் பார்க்கச் சென்றது டிஸ்னி லேண்ட். அங்கே திரைப்படங்களின் மூலம் பல நாடுகளின் படங்களையும் அவற்றின் பண்பாடுகளையும் தெரிந்து கொள்ள முடிந்தது. ஜெர்மனி கடிகாரம், ஜப்பான் முத்து, பீங்கான், துணி பொம்மைகளையும் காட்சி பொருள்களாக வைத்திருந்தனர். இத்தாலி சாக்லேட், ஒயின் ஆகியவை கடைகளில் விற்பனை செய்யப்பட்டது. நாங்கள் சென்ற போது டிஸ்னி லேண்ட் ஆரம்பித்து 25 வருடங்கள் ஆகி இருந்தபடியால் திரைப்படக் காட்சி முடிந்து பல இடங்களையும் சுற்றிப் பார்த்து விட்டு வந்த போது வாண வேடிக்கை வெகு அமர்க்களமாக இருந்தது.

மறுநாள் மீண்டும் டிஸ்னிலேண்ட் பார்க்கச் சென்றோம். அதற்கு முன் மோட்டலுக்கு எதிரே உள்ள சூப்பர் மார்கெட்டில் சில பொருள்களை வாங்க சாலையை கடந்து சென்றோம். சூப்பர் மார்கெட்டின் அருகே நின்றவர்கள் எங்களை ஆச்சரியமாக பார்த்தார்கள். ஏனென்றால் அமெரிக்கர்கள் யாரும் சாலையை கடந்து வருவது இல்லை. காரணம் வழிப்பறி தொல்லைதான். எங்களுக்கும் அவர்கள் இப்படி நடந்து வராதீர்கள் என்று அறிவுரை சொன்னார்கள். மேஜிக் கிங்டம் பார்க்க வேண்டியிருந்தது. அங்கே பல விளையாட்டுகள் அவை குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் பிடிக்கும். அங்கே நாம் பிரம்மிக்கத் தக்க பல அதிசயங்களைக் காண முடிந்தது. சிறுவர்களுக்கான கம்ப்யூட்டர்கள் வைக்கப்பட்டிருந்தன. தவழும் குழந்தைகள் கூட அதை தொட்டு சிறுவர் விளையாடி மகிழ்வதை காண முடிந்தது. அங்கே குண்டு மல்லிகை செடிகள் வைக்கப்பட்டு பூக்கள் மலர்ந்து இருந்தன. அதை யாரும் தொட்டு கூட பார்க்கவில்லை. நாங்கள் ஒரு பூவை பறித்து வெள்ளைகாரரிடம் முகர்ந்து பார்க்க சொன்னோம். அவர்கள் முக மலர்ச்சியோடு ரசித்தார்கள். இந்தியாவில் இருந்து வந்த பூக்கள் என்று குறிப்பிட்டோம்.

யுனிவர்சல் ஸ்டூடியோ: அடுத்து மறுநாள் யுனிவர்சல் ஸ்டூடியோ புளோரிடாவுக்குச் சென்றோம். இங்கே சினிமாவில் தந்திரக் காட்சிகள் எப்படி எடுக்கிறார்கள் என்பதை விளக்கினார்கள். பிறகு 3D கண்ணாடி அணிந்து திரைப்படம் பார்த்தோம் கத்தியால் குத்துவது, விளக்கை வீசி எறியும் போது நம்மை நோக்கி விளக்கு வருவது. புறாக்கள் நம் தலையில் அமர்வது, அதன் இறக்கைகள் நம் தலையில் அமர்வது போலவும் தோன்றியது. படம் பார்க்கும் போது வீட்டு விலங்குகளை எப்படி பழக்குகிறார்கள் என்பதையும் வேடிக்கைப் பார்க்க வந்த ஒரு பையனையும் பெண்ணை வைத்து செய்து காட்டினார்கள். மிக நன்றாக இருந்தது. நட்சத்திரக் கூட்டங்களையும் பேய்களையும் இருட்டில் பார்க்க வைத்தார்கள். மேலும் பரபரப்பான பல காட்சிகளையும் பார்க்க முடிந்தது. நில நடுக்கம் எப்படி ஏற்படுகிறது என்பதையும் திரைப்படத்தில் காண்பித்தார்கள்.

எங்களை ரயிலில் அமர வைத்து நிலநடுக்கம் ஏற்பட்டால் எப்படி இருக்கும் என்பதைக் காண்பித்தார்கள். பஸ் கவிழ்ந்து எங்கள் ரயிலை நோக்கி வருகிறது. இருபுறம் தீ எரிகிறது கடல் நீர் வெள்ளம் போல் பெருகி ரயிலில் இருப்பவர்கள் மீது தெறிக்கிறது. வண்டி சற்று திடீரென்று பள்ளத்துக்குள் விழுவது போல் செய்தார்கள். திகிலாக இருந்தாலும் திரில்லாக இருந்தது.




மறுநாள் அட்லாண்டா சென்றோம். முரளியின் மாமனார் சேகர் மூர்த்தியின் குடும்பத்தினர் எங்களை தங்கள் இல்லத்திற்கு அழைத்துச் சென்று விருந்தளித்தனர்.

அட்லாண்டா தூய்மையான நகரம். வீதிகளில் மேடு பள்ளம் இல்லை. வீடுகள் தோறும் நிறைய பூச்செடிகள் காணப்பட்டன. கறுப்பின மக்களும் வெள்ளையர்களும் இங்கே கலந்து வாழ்கிறார்கள். "ஒரு மலையில் நடந்த லேசர் ஷோ (ஒலி-ஒளி நிகழ்ச்சி) பார்த்துவிட்டு 11மணி முதல் வீட்டை அடையும் வழி தெரியாது. சுற்றித் திரிந்து விட்டு அவர்கள் வீட்டை அடையும் போது இரவு 1மணி ஆகிவிட்டது.



சித்ரா வாட்ச் கம்பெனி
CHITHRA WATCH COMPANY
SALES & SERVICE TITAN. SONATA, AJANTA
Expert repairers of world Famous Rolex, Rado, Omega Seiko, Citizen and other Indian Watches, Til
Shanthi Complex, No:63/26, Ranganathan Street, (Very Near Mambalam Railway Station (opp.to Rameswaram Road), T.Nagar, Chennai-17. Ph:24348524.

# 29-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி!



# வீரமாணிக்கம் L.சந்திரசேகரன்

உரிமையாளர்

S.லெட்சுமண நாடார் & சன்ஸ் பூந்தமல்லி,

மறைவு:30.1.1994

**எங்களின் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் அன்பு தெய்வத்தின் நினைவால் வாழும்.**

ச.மல்லிகா, பொன்மகிதாகார்திக்ராஜா,
பொன்மகேஷ்சங்கரஸ்ரீதா, பொன்கவிதாஆனந்தசேகர்,
குட்டீஸ்:பொ.ஷீவிதன், டஷ்வின் கார்த்திக், பொ.சமிதா,
ஆ.தனுஷ்ஆதித் மற்றும் உறவினர்கள்.

**சந்திரசேகரன் ஹார்டுவேர்ஸ் நகிதா கூல் பார்**

62, டிரங்க் ரோடு, பூந்தமல்லி, சென்னை-56. செல்:9551130755,
whatsapp:9940282421.

## கண்ணீர் அஞ்சலி..




## இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**திருமதி.லிசிபாய். (29.12.2023)**

ஏ.எல்.எஸ் என்ற நாஞ்சில் நேசைய்யா அவர்களின் துணைவியார். திரு.அன்னைவேளாங்கண்ணி தேவராஜ் அவர்களின் சகோதரி.

இவரது நினைவால் வாடும் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."
எம் தந்தை
அமைதியானவர் அதிகம் பேசாதவர்
ஆயகலைகளில் நாட்டம் மிகுந்தவர்
இசைப்பிரியர் மிருதங்கம் வாசிக்க தெரிந்தவர்
ஈசி சேரில் எப்பவும் நிறைந்து இருப்பவர்
உறவுகளுடன் இனிமையாக பழகுபவர்
ஊரை எல்லாம் 60களில் ஜாவா பைக்கில் சுற்றியவர்
எமக்காக பல அலுவலகங்களுக்கு ஓடி அலைந்தவர்
ஏற்றம் இறக்கம் எங்களிடம் ஒருபோதும் கண்டதில்லை
ஐயம் இருப்பின் பேரப்பிள்ளைகளிடம் கூட கேட்டுத் தெரிந்து கொள்பவர்..
ஒருபோதும் நோயில் படுத்தவர் அல்லர்
ஓயாது கைவினைப் பொருட்கள் செய்து அசத்துபவர்
ஔவியம் பேசாதவர், சுய ஔடதம் செய்து உண்பவர்.

மரியன்னை பள்ளியிலும் மஜ்ரா கல்லூரியிலும் படிப்பை முடித்து, அந்தமானிலும், துபாயிலும் வேலைகள் செய்து, திருமணம் செய்து மும் மக்களைப் பெற்று, நன்முறையில் பயிற்றுவித்து மணமுடித்துக் கொடுத்து, பல மாநிலங்கள் நாடுகள் பயணித்து, பொதிகைமலை, சீனாய் மலை உச்சிகள் கண்டு, பயணக் கட்டுரைகள் விளக்கங்கள் எழுதி வைத்து, எமக்கும் பெற்ற அறிவை அவ்வப்போது பகிர்ந்து தந்து,.... இம்மை வாழ்வை வாழ்வாங்கு வாழ்ந்து, மறுமை வாழ்வில் வாதையின்றி சேர்ந்து, எம்மை காக்கும் அரணாய் இன்று... இறைவனிடம்...

வாழ்ந்த கதை எழுதி வைத்தீர்கள் அப்பா...
வரும் கதையை எழுதி வைக்கலையே...
ஊனாய் எம்மோடு இன்று இல்லை என்றாலும்....
உயிராய் உம் எழுத்துக்கள் எங்களோடு...
ஆகையால் எம் கவலையின்றி நிம்மதியாய்
இறைவன் மடியில் இளைப்பாருங்கள் அப்பா...
வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்...

## M.ஜோசப் விக்டர்

பிறப்பு:9.2.1942
இறப்பு:10.11.2023
என்றும் உங்கள் நினைவுடன்...
குடும்பத்தினர் உறவினர்கள்.

# மானாடும் மானாட்டாரும்: கி.பி.1600 விடியலிலிருந்து-9

**டாக்டர் ஆ.தசரதன் 9444169603.**



மானாடு என்ற மானவீர வளநாட்டின் வடபற்றுப் பகுதிகளை 1639ஆம் ஆண்டு தேரியில் நாட்டிய கல்வெட்டின் ஆவணத்திலிருந்து பத்து நாடன்கள் ஆட்சி செய்ததாக இந்தியன் நாடார் முரசின் 2023 ஆம் ஆண்டின் நவம்பர், டிசம்பர் இதழ்களில் எழுதியிருந்தேன்.

ஆனால் தொட்டடுத்த 1642ஆம் ஆண்டின் கொற்கைப் பகுதி நிலவரம் வலங்கை உய்யக் கொண்ட நாடன்களுக்கு அப்பகுதியில் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இவர்கள் கொற்கையார் என்றும் அழைக்கப்பட்டனர் சங்க காலத்தில் நற்கொற்கையார் என்று அழைக்கப்பட்ட நாடன்கள் கால ஓட்டத்தில் நல் என்ற அடைமொழியை இழந்துவிட்டனர். அது வேளாளர் என்ற பிள்ளைமார்களுக்குப் போய்விட்டது. அவர்கள் கி.பி.17ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்திலிருந்து நற்குடி வேளாளர் என அழக்கப்பட்டனர்.

திருவிதாங்கூர் அரசின் கட்டுப்பாட்டில் கொற்கைப் பகுதி வந்திருந்தபொழுது இவ்வேளாளர் அப்பகுதியில் காணியாட்சி பெற்றும் தம்பிரான் பட்டம் பெற்றும் அமைந்துவிட்டிருந்தனர்.

மதுரை நாயக்கர்களின் ஆட்சியிலும் குறிப்பாகத் திருமலை நாயக்கன் ஆட்சியிலும் இவ்வேளாளர்கள் தங்கள் தகுதிகளைத் தக்க வைத்துக் கொண்டிருந்தனர்.

ஆயினும் கொற்கைப் பகுதி வலங்கை உய்யக் கொண்டார்கள் இராசதகுதிகளிலிருந்தனர் என அறிந்து கொள்வதற்கான ஆதாரங்கள் உள்ளன.

வலங்கை உய்யக் கொண்டார் என்றாலே அரசகுலப் படைத் தலைமையும் பெரும் பற்று நிலங்களுக்குச் சொந்தக்காரர் எனும் நிலவுடைமைத் தகுதியும் பெற்றவர் என்பது யாவரும் அறிந்ததே.

அடுத்ததாகக் கொற்கைப் பகுதி இந்நாடன்கள் வெள்ளைக் கோவில் நாடாக்கள் என வரலாற்றில் அறியப்பட்டுள்ளனர். வெள்ளைக் கோவில் என்றாரும் சான்றோர் குல அரச அரண்மனை ஆகும். இது வரலாற்றுக் காலத்தில் குடநாட்டுப் பகுதியில் இடம்பெற்றிருந்தது.

வலங்கை உய்யக் கொண்ட இந் நாடன்கள் கொற்கைப் பகுதியில் காணியாட்சி பெற்று நிலவுடைமையாளர்களாக அரண்மனையில் இருந்தனர். புதிதாகக் காணியாட்சி பெற்ற வேளாளர் என்ற பிள்ளைமார்கள் திருமலை நாயக்கனின் தென் பாண்டி நாட்டுச் சார்பாளனான வடமலையப்ப பிள்ளையின் ஆதரவுடன் வெள்ளைக் கோவில் வலங்கை உய்யக் கொண்ட நாடன்களின் காணியாட்சி நிலங்களைக் குடிலை முறிக்குப் பெற்றுள்ளனர்.

வெள்ளைக்கோவில் வலங்கை உய்யக்கொண்ட நாடன்கள் தம் காணி ஆட்சி நிலங்களைப் பிள்ளைமார்களுக்கு விற்கும் அளவிற்கு நெருக்கடிகளை வடமலையப்பபிள்ளை ஏற்படுத்தியிருக்கவேண்டும். பெரும் பற்று நிலங்களுக்குரிய இந் நாடன்களுக்கு வரி செலுத்துவதில் நெருக்கடிகளைக் கொடுத்திருக்கவேண்டும்.

வெள்ளைக் கோவில் நாடன்கள் வேளாளர்க்கு விற்பனை செய்ததற்கான செப்பேடு கி.பி.1642ஆம் ஆண்டைச் சார்ந்தது. இந்நாடன்கள் தொடர்பான கி.பி.1617ஆம் ஆண்டினதாக அவ்வாண்டும் உள்ளதாக அறிய முடிகின்றது.

கி.பி.1642ஆம் ஆண்டைச் சார்ந்த செப்பேடு வருமாறு: சாலிவாகன சகாப்தம் (1564) மேல் செல்லா நின்ற கொல்லம் 817ஆம் வருஷம் ஐப்பசி மாதம் 11ஆம் தேதி வைகுண்டம் சுவாமி கள்ளபிரான் கோயில் சீ பண்டாரப் காரியஞ் செய்வாரில் சீவளநாட்டில் வீரவினோத நல்லூரில் கொற்கைக் காணியாளரில் தம்புரான் குட்டியாபிள்ளை முதலியவர்க்குக் குடநாட்டின் வெள்ளக்கோவிலில் இருக்கும். வலங்கை உய்யக் கொண்டாரால்... 40

பொன்னுக்குக் குடிவிலை முறி.......

கொற்கைப் பகுதி வலங்கை உய்யக் கொண்ட நாடன்களின் நிலங்களையும் அவர்களிடமிருந்த அடிமைகளையும் வேளாளர்கள் விலைக்குப் பெற்றுள்ளனர். நற்குடி வேளாளர் செழிகைப் பிள்ளைமார் என்று வழங்கும் வகையறாவினர். இவர்கள் மருமர்கள் தாய வழக்கத்தினர்.

செழிகைப் பிள்ளைமார் இக் காலத்தில் செவளைப் பிள்ளைமார் என்றும் அழைக்கப்படுகின்றனர். வெள்ளைக் கோவில் வலங்கை உய்யக் கொண்ட நாடன்கள் அதன் பிற்காலத்தில் ஓட்டப்பிடாரப் பகுதியில் குடியிருந்துவிட்டுப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தென்பாண்டி நாட்டு மானவீர வளநாட்டுப் பிரகாசபுரம் என்ற மூக்குப் பேரேரி (மூக்குப்பீறி)யில் குடியேறினர் என்று தெரியவருகின்றது. இவ்வாறானவர்கள் நிலைமைக்காரர் என அடையாளப் படுகின்றதாகவும் அறியமுடிகின்றது.

தென்பாண்டி நாட்டுத் தென்காசியைத் தலைநகராக வைத்து ஆண்ட பிற்காலப் பாண்டியர்களில் சீல மாறன் என்ற பாண்டிய மன்னன் தன் காலத்தில் கொற்கைப் பகுதியில் வெள்ளைக் கோவில் என்பதன் மாற்றுப் பெயரான இராஜாவின் கோவில் என்ற ஊரை ஏற்படுத்தி அதில் சிலபல ஆண்டுகள் வாழ்ந்தபின்னர் நாசரேத் நகரமும் அதன் அருகே சில ஊர்களும் ஏற்பட்டபின்னர் பிரகாசபுரம் மூக்குப் பேரேரியில் குடியேறியதாக அண்ணாச்சி அ.கணேச நாடாரும் தொல்லியல் அறிஞர் எஸ்.இராமச்சந்திரனும் இணைந்து எழுதிய தோள்சீலைக் கலகம் தெரிந்த பொய்களும் தெரியாத உண்மைகளும் என்ற நூலின் 134-137ஆம் பக்கங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு குடியேறியவர்களில் ஒருவர்தான் அருமை நாயர் என்ற சட்டாம்பிள்ளை ஐயா ஆவார் என மேற்குறிப்பிட்ட நூலிலிருந்து தெரிந்து கொள்ளலாம். கால்டுசெல் பாதிரியாரின் கருத்துகள் சான்றோர்குல நாடன்களுக்கு முரண்படுவதாக எழுந்த முதல் எதிர்ப்புக்குரல் இச் சட்டாம்பிள்ளை ஐயாவையே சாரும்.

அதன் காரணமாகவே சான்றோர்குல நாடார்களின் வரலாறு சட்டாம்பிள்ளை ஐயாவின் மகன்களான ரபி பாண்டியன், பி.ஜே.எம்.குலசேகரராஜ் பின்பு எஸ்.வின்பிரட், எச்.வின்பிரட், சாமுவேல், சற்குணர், கார்னிலியஸ் நாடார், அரசகுமார நாடாரும் கண்ணாயிர நாடாரும் இணைந்து கொண்டவர் தான் நெல்லை நெடுமாறன் அவர்களும் ஆவார்.

சான்றோர் குல நாடார்களின் வரலாற்று ஆய்வுக்கு வித்திட்ட வலங்கை உய்யக் கொண்ட நாடன்களின் வம்சாவளியில் வந்த சட்டாம்பிள்ளை ஐயாவின் அரும்பெரும் முயற்சியால் இன்று நூற்றுக்கணக்கான இப்படியான வரலாற்று நூல்கள் தோன்றிய வண்ணம் உள்ளன. அதன் காரணமாக நாடார்களின் சமூகப் பண்பாட்டு வரலாறும் பண்டைக் காலத்திலிருந்து ஆண்டு வந்தபரம்பரை வரலாறும் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

கி.பி.1642இல் தம் காணிகளை விற்கக் கூடிய நெருக்கடிகளுக்கு உட்பட்டவலங்கை உய்யக் கொண்ட நாடன்களைப் போல் கி.பி.1645ல் மடத்து அச்சம்பாடு என்ற ஊரையே ஸ்ரீவைகுண்டம் ஆலயத்துக்கு மாற்றிய வரலாறும் கி.பி.1662இல் முள்ளிநாட்டுச் சிவந்திபுரம் பெரும்பற்று வலங்கை உய்யக் கொண்ட சிவந்தி நாடனின் வரலாறும் தொடர்ந்து இத்தொடரில் எழுதப்பெறும்.

மானவீரவளநாடு என்ற மானாட்டின் தொடர்புடையவர்களும் இவ் வலங்கை உய்யக்கொண்டார்கள் என்பது யாவரும் அறிந்ததே.-

# இஸ்ரேல் - பாலஸ்தீன போர்

D.M.ஜேம்ஸ் மார்ட்டின், தலைமை எழுத்தர் (ஓய்வு), மாவட்ட நீதிமன்றம், 9488129050.

அக்டோபர் 7 இஸ்ரேல் மக்களுக்கு ஓர் கறுப்பு நாள். பாலஸ்தீன காசா பகுதியில் இஸ்ரேல் மக்களுக்கு எதிராக செயல்பட்டு வந்த ஹமாஸ் தீவிரவாதியினர், திடீரென இஸ்ரேல் பகுதிக்குள் புகுந்து ராக்கட் குண்டுகளை வீசி கொடூரத்தாக்குதல் நடத்தினர். இந்த திடீர் தாக்குதலில் 1800 சிறார்கள் உள்பட அப்பாவி மக்கள் சுமார் 5000 பேர் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர், படுகாயமடைந்தனர். பெண்கள், சிறுவர்கள் உட்பட 200க்கும் மேற்பட்டோரை பிணைக் கைதிகளாக பிடித்து சென்றனர், ஹமாஸ் தீவிரவாதிகள். இந்த திடீர் தாக்குதலால் நிலை குலைந்து போன இஸ்ரேல், இதற்கு பதிலடியாக காசா மீது வான் வழி தாக்குதல் நடத்தியது. குண்டு மழை பொழிந்தது. அந்த தாக்குதலால் 10000க்கும் அதிகமான பாலஸ்தீன மக்கள் மடிந்தனர். காசா மக்கள் உணவின்றி, தண்ணீரின்றி தவித்தனர். மின்சாரம் துண்டிக்கப்பட்டு நகரமே இருளில் மூழ்கியது. பல மாடி கட்டிடங்கள், குடியிருப்புகள் தரை மட்டமாகின. இந்த இரண்டு சம்பவங்களுமே காட்டு மிராண்டித்தனமான, ஈவு இரக்கமற்ற, மனித நேயமில்லா கொடூர செயல்கள் என்று அகில உலகமே வன்மையாக கண்டித்தது. கடந்த 15 ஆண்டுகளில் இது 5-வது முறையாக இருவருக்கும் நடக்கும் மோதல்கள்.

யார் இந்த இஸ்ரயேலர்கள் - பாலஸ்தீனர்கள்? ஏன் இவர்கள் இப்படி மோதிக் கொள்கிறார்கள்?

விவிலிய சான்றுகள் படி இருபாலருமே விசுவாசத்தின் தந்தை என்று போற்றப்படுகின்ற ஆப்ரகாமின் வழி வந்தவர்கள். இஸ்ரயேலர்கள் என்றழைக்கப்படும் யூதர்கள், ஆப்ரகாமின் மைந்தன் ஈசாக்கின் வழி வந்தவர்கள். மன்னர் தாவீதின் குலத்தினர். இவர்கள் வம்சத்தில் உதித்தவர் தான் இறைமகன் ஏசு. ஆப்ரகாமுக்கும் எகிப்திய பணிப்பொண்ணான ஆகாருக்கும் பிறந்த இஸ்மவேல் வழிவந்தவர்கள் தான் இன்றைய பாலஸ்தீனர்களும் இஸ்லாமியர்களும். இரு பாலருமே ஆப்ரகாமின் வழி வந்தவர்கள் தான்.

பல நூற்றாண்டுகளாக, எகிப்து நாட்டில் அடிமைகளாக வாழ்ந்த யூதர்களை, இறைவன் வழிகாட்டுதலில், மோசே இறைவாக்கினர் மீட்டு வந்து யூத மக்களை மறுபடியும் இஸ்ரயேலில் குடியிருக்கச் செய்தார். பின்னர் ரோமானியர்களுக்கு அடிமைகளானார்கள். மெசியா என்னும் இறைமகன் வந்து தங்களை மீட்பார் என்று ஆயிரக்கணக்கான வருடங்களாக எதிர்நோக்கி காத்திருந்தனர். அவர்கள் எதிர்பார்த்திருந்த மொசியா வந்தார். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தபடி மன்னரின் மகனாக, மாட மாளிகையில் வரவில்லை.

மன்னர் தாவீது வழிவந்த ஓர் ஏழை தச்சரின் மனைவி மரியாளின் உதிரத்தில் தூய ஆவியால் கருவுற்று மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். அவர்தான் அவர்கள் எதிர்பார்த்து காத்திருந்த மொசியா என்னும் இறைமகன் ஏசு. ஞானத்தில் வளர்ந்து தூய ஆவியின் வல்லமைபெற்று அனைத்து மக்களுக்கும் நற்செய்தியை அறிவித்தார். பல வல்ல செயல்கள் செய்து, நோயுற்றோரை குணமாக்கினார், பசித்தோருக்கு உணவழித்தார். இறந்தோரை உயிர்த்தெழச்செய்தார். பழைய யூத சட்டங்களையும், சம்பிரதாயங்களையும் அடியோடு மாற்றினார். யூத மதத்தலைவர்கள், சட்ட வல்லுநர்களின் வெளிவேடத்தை வன்மையாக கண்டித்தார். இதனால் கொதித்தொழுந்த யூத மதத் தலைவர்களும், சட்ட வல்லுநர்களும், மக்களை ஏசுவுக்கு எதிராக தூண்டிவிட்டு அவரை சிலுவை மரணத்துக்குள்ளாக்கினர். ஆளுநர் பிலாத்து ஏசுவுக்கு மரண தீர்ப்பிடும் போது, ஏசுவின் ரத்தத்தின் மட்டில் நான் குற்றமற்றவன் என்று கூறி கை கழுவினான். அப்போது இந்த யூத மக்கள், "இவன் ரத்தம் எங்கள் மேலும், எங்கள் பிள்ளைகள் மேலும் இருக்கட்டும்," என்று கூவினர். குற்றமற்ற ஏசுவின் ரத்தப் பழி யூதபரம்பரை மீது விழுந்து யூதர்களின் விரோதிகளால் எருசலோம் நகரம் தரைமட்டமாக்கப்பட்டது. "உன்னையும் உன் மக்களையும் நொறுக்கி தடைமட்டமாக்கி, கல்லின் மேல் கல் இல்லாத படி செய்வார்கள்," என்று கண்ணீரோடு அன்று ஏசு சொன்ன வார்த்தைகள் இவ்வாறு நிறைவேறியது.

நாடிழந்த யூதர்கள், உலகமெங்கும் சென்று அகதிகளாக வாழ்ந்தனர். யூத மக்கள் அறிவாளிகள், அழகானவர்கள், ஆனால் வணங்கா கழுத்து கொண்டவர்கள். எனவே அனைவராலும் வெறுக்கப்பட்டனர். ஜெர்மானியின் சர்வாதிகாரி ஹிட்லர் மட்டும் சுமார் 60 லட்சத்துக்கும் மேலான யூதர்களை கொன்று குவித்தான். இரண்டாவது உலக மகா யுத்தத்திற்கு பின், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா போன்ற வல்லரசுகளின் உதவியால் இன்றைய இஸ்ரேல் நாடு 14-5-1948ல் உருவாக்கப்பட்டது. பெரும்பாலான யூத மக்கள் இங்கு வந்து குடியேறினர். அனைத்து இஸ்லாமிய நாடுகளும் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். கூர்மையான பற்கள் மத்தியில் நாவிருப்பது போல் தான் இந்த யூதர்களின் வாழ்க்கை இருந்து வருகிறது. பாலஸ்தீனர்களும் இஸ்ரேயலுக்கு சொந்தம் கொண்டாடுவதால் என்றுமே இருவருக்கிடையில் சண்டைகள் தான். அமைதியின் தூதுவனாக வந்து, அமைதியையே விட்டுச்சென்ற ஏசு பிறந்த இடத்தில், வாழ்ந்த இடத்தில், அமைதியை அறிவுறுத்திய இடத்தில் என்றுமே அமைதியில்லை.

வன்முறைக்கு வன்முறை என்றுமே தீர்வாகாது. தீவிரவாத அமைப்புகள் உலகிலிருந்து முழுமையாக அகற்றப்பட வேண்டும் அல்லது அவர்களாகவே அழிந்து போவார்கள். யாழ்பாணத்தில் இயங்கி வந்த தீவிரவாதிகள் குற்ற மற்ற ராஜீவ் கொலையினால் அழிந்து போனார்கள். ஹிட்லர், முசோலினி போன்ற கொடுங்கோலர்கள் நீண்ட நாள் வாழ்ந்ததில்லை. யுத்தத்தினால் வரும் 10 வெற்றிகளை விட ஒரு சமாதானம் மேலானது என்கிறார், நமது திருத்தந்தை பிரான்சிஸ். முதல் உலக மகா யுத்தத்திற்கு பிறகு உருவான உலக நாடுகள் சபை வேறு வந்ததால் தான், இரண்டாவது உலகப் போர் மூண்டது. அதன் பிறகு 4.10.1945ல் உருவாக்கப்பட்டது தான் இன்றைய ஐக்கிய நாடுகள் சபை. இதில் 193 நாடுகளுக்கு மேல் இருந்தும் உலக அமைதியை உருவாக்க முடியவில்லை.

Speaches boiled bridges between mations என்பது போல் பேச்சு வார்த்தைகள் மூலமே எந்த பிரச்சனைகளுக்கும் தீர்வு காண வேண்டும். வாள் எடுப்பவன் வாளாலே வீழ்வான் என்று ஏசு சொன்னது போல், வன்முறைக்கு வன்முறை தீர்வாகாது. மாவீரன் அலெக்சாண்டர், பிரஞ்சு சக்ரவர்த்தி நெப்போலியன் போன்றவர்களின் முடிவை பார்த்து மக்கள் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். அன்று மாடி மாளிகையில் வாழ்ந்த இளவரசன் சித்தார்த்தன் எட்டிப்பார்த்தான் மண் குடிசையை. புத்தரானான். கலிங்கத்து போரை கண்ட அசோகன் புத்த துறவியானான். சர்வாதிகாரமும், மதவாதமும் என்றுமே வெற்றி கண்டதில்லை. இதை நாகரீகத்தில் மூழ்கியிருக்கும் இன்றைய மக்கள் உணர வேண்டும். ஒரு வெண்கொற்ற குடையின் கீழ், ஒரே மத்தையாக, அமைதியின் தூதுவர்களாக வாழ்வோம். மாற்றுவோம் இவ்வுலகை அமைதி பூங்காவாக.

# கண்ணீர் அஞ்சலி
# விஜயகாந்த்
# 1952 -2023



கறுத்த நிலா... மறைந்து போனது...

தமிழகம் பல தலைவர்களை பார்த்துவிட்டது..... ஆனால் அதில் விஜயகாந்த் தனிரகம். வாழ்க்கையில் பல இடர்ப்பாடுகளை சந்தித்தே சாதித்த மனிதர்களிலும் இவருக்கு தனி இடம் உண்டு. இவர் திரையில் ஜெயித்தது அத்தகையதொரு சாதனை தான். அதனை அடுத்த கட்டத்திற்கு... அடுத்த தளத்திற்கு கொண்டு செல்ல முயன்று தோற்றுப்போனார்... அல்லது தோற்கடிக்கப்பட்டார்... ஆனால் நிஜம் என்னவெனில் இதில் தோற்றது அவர் அல்ல என்பது தான் இதில் உள்ள நுட்பமான நகை முரன். ஆம்... தமிழ் சினிமாவில் அவர் ஜெயித்து வசப்படுத்தி உச்ச நிலையை தொட்டபோது அவர் மற்ற மொழி படங்களிலோ அல்லது அடுத்த கட்ட நகர்வு எனச் சொல்லி வேறெங்கோ நகர்ந்து விடவில்லை... மாறாக தன் துறையின் தலைவராக முன் நின்று யாரும் செய்யாத... அல்லது யாருமே செய்ய முன்வராத நடிகர் சங்க கடனை அடைக்க பாடுபட்டார்... பல வித்தியாசமான நகர்வுகளை முன்னெடுத்து வெற்றிகரமாக அதனை சாதித்தும் காட்டியிருக்கிறார்.

பல பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி அவரால் தான் வைக்கமுடியும் என பலரும் நம்பினார்கள். அவர் அவர்களை நம்ப வைக்கவில்லை... செயலில் நடத்திக் காட்டினார் என்பது தான் இதில் உள்ள விஷேசம். திரையில் நடித்து விடலாம்... ஆனால் நிஜத்தில்... அத்தனை சுலபமான காரியமல்ல... இவர் இயல்பிலேயே அப்படி தான் இருந்திருக்கிறார்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்பது நம் பக்கம் வழங்கும் சொல்லாடல்... இவர் கொடுத்தார், கட்சி ஆட்சி என ஏதும் இல்லாத ஆரம்ப காலத்திலேயே இப்படி கொடுத்தார்... இதனை வழக்கமாக கொண்டிருந்தார். அதுவும் எப்படி .. தன் சம்பளத்தில் தன்னை போலவே.. தான் சாப்பிடுவது போலவே தன்னை காணவரும் அத்தனை பேருக்கும் உணவு பரிமாறி உபசரித்தார் நிச்சயம் இது கொடை. இதோ அதற்கான அத்தாட்சி தான் இந்த சொர்க்க வாசல் திறப்பு சமயத்தில் இந்த மண்ணுலகம் விட்டு சென்றிருக்கிறார்.

ஐந்து விரல்கள் ஒன்று போல் வாராது... அது போலவே மனித வாழ்வில் இவரும் முன் பின்னாக வாழ்ந்திருக்கலாம்... ஆனால் தன்னை போலவே தன் சக மனிதனை பாவிப்பது... அவர் நலன்களுக்காக யோசிப்பது நிச்சயமாக ஒரு கொடுப்பினை வேண்டும்... - செய்தி. என்டிஆர்.பவுண்டேஷன் திருப்பூர்.செந்தில்குமார்.




ஜெயம் ரியல் எஸ்டேட்&
ஜெயம் ஸ்வீட் ஸ்டால்

வீடு மனை வாங்க விற்க அணுகவும்.

கே.கே.நகர் அனைத்து வியாபாரிகள் முன்னேற்ற சங்கம் பதிவு எண்:473

கே.கே.நகர். எஸ்.தேவதாஸ் செயல் தலைவர்.

நெ.20/1, திரு.ராமசாமி ரோடு, கே.கே.நகர், சென்னை-78. செல்:9840369569. 9600005458

அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள்!!

M.அருணாசலகனிB.A., BL.,

16ஏ/14, திருவள்ளுவர் தெரு,
ஈக்காட்டுத்தாங்கல், சென்னை-32.
9840267157.



# வா....வியாபாரி ஆகலாம்

## 10.நமக்கென்ன...!

அமுதா B.பாலகிருஷ்ணன்

சிலர் எது நடந்தாலும் நமக்கென்ன என்று இருப்பார்கள்.



சிலர் ஏது எப்படி கிடந்தாலும் நமக்கென்ன என்று தாண்டிப் போவார்கள்.

அதை எடுத்து அந்தந்த இடத்துல வைக்கவேண்டும், "இதை யார் இப்படி கீழே போட்டது?"-ன்னு கேட்க வேண்டும் என்ற எண்ணமேயில்லாமல், நம்ம வீட்டுப் பொருளா - நமக்கென்ன என்று ஒரு ஒட்டுதல் இல்லாமலே கடைக்குள் நடப்பார்கள்.

"ஐயோ, நம்ம கடையே, நம்ம பொருளே, நம்ம முதலாளியே" - என்ற எண்ணம் துளி கூட இவர்கள் உள்ளத்தில் இருக்காது.

இந்த மாதிரி ஆட்களை நாம என்ன செய்ய? எடுத்த உடனே முதலாளிகிட்ட கம்ப்ளெயின்ட் பண்ணலாமா...?

கூடாது!

நாம பொறுப்பா இருந்து, பிரச்சினையை நாம சுமக்கணும்.

"இதப்பாரு... நீ இப்படி பொருட்களை காலுக்குள் போட்டு மிதிக்கிறது நல்லதுல்ல, சம்பாதிக்கிறதவிட சேதாரம் அதிகமாயிருந்தா கடைக்கு நஷ்டம், முதலாளிக்கு நஷ்டம் -இப்படி பொறுப்பில்லாம நடக்காத இனிமே இப்படி சிந்தாம சிதறாம பாத்துக்க, கீழே எதும் கிடந்தா, எடுத்து, அந்தந்த ஷெல்புல அழகா அடுக்கிவை. அதுவும் எந்தப் பொருள் எந்த இடத்துல இருக்கணுமோ அந்த இடத்துல வை. இடத்தை மாத்தி வைக்கிறதும், கீழே போட்டு மிதிக்கிறதும் ஒண்ணுதான்" என்று நாமதான் இதமா பதமா எடுத்துச் சொல்லி அவர்களைத் திருத்தணும்.

எடுத்த பொருளை எடுத்த இடத்தில் வைப்பது மிகச் சிறந்த பழக்கம்.

இடத்தை மாற்றிவைத்தால், கஸ்டமர் வந்து கேட்கும் போது, வேறொரு குமாஸ்தா வழக்கமான இடத்தில் தேடிவிட்டு, ஸ்டாக் இல்லை என்று சொல்லி விடுவான் வியாபாரம் கெட்டுப் போகும்.

கீழே சிந்தியது, சிதறியதையெல்லாம் அன்றைக்கு கடை மூடுவதற்கு முன்னமே எடுத்துத் துடைத்து, சரியான இடத்தில் அடுக்கி வைக்க வேண்டும்.

"நாளைக்குப் பார்த்துக்கலாம்" -என்ற எண்ணமே வரக்கூடாது.

எவனோ தட்டிப் போட்டதைச், சிந்தி சிதறியதை நான் ஏன் எடுத்து வைக்கணும்? அவனவன் வைச்சா வைக்கிறான் வைக்காட்டிப் போறான்.... நமக்கென்ன" என்ற அலட்சியம் வரவே கூடாது.

நம்ம சட்டையை, துணிமணிகளைக் காயப்போட்ட இடத்தில், எவனாவது வந்து "சர்ருன்னு" தள்ளி ஒரங்கட்டிட்டு, அவனுடைய துணியைக் காயப்போட்டாலே நமக்கு எப்படி கோபம் பொத்துகிட்டு வருது, நம்ம துணியைச் சற்று ஒரங்கட்டிப் போட்டாலே நமக்கு வர்ற அக்கறையும் பொறுப்பும், நம்ம கடையில் உள்ள சாமான்கள் சிந்தினால் வரமாட்டேன் என்கிறதே ஏன்...? "தன் பண்டம் தவிடு, ஊரான் பண்டம் உமி" அப்படியா...?

நாம் அப்படி இருக்கவே கூடாது. நாம் அங்கு வேலை பார்க்கும் கடைசி நிமிஷம் வரைக்கும், அது நமது கடை, நமது பொருள், நமது பொருள், நமது முதலாளி... என்ற உள்ளன்பான எண்ணம்தான் வரவேண்டும்.

"சிலர் எட்டுமணி நேரம்தான் வேலை செய்வேன்" என்று கொடி பிடிப்பார்.

"முதலாளி தர்ற சம்பளத்துக்கு இப்ப செய்யிறதே அதிகம்" - என்று சமயம் கிடைக்கும் போதெல்லாம் கடைக்குள்ளேயோ அல்லது கோடவுனுக்குள்ளேயோ படுத்துத் தூங்குவாங்க.

அவன் தூங்குறது மட்டுமில்லாம அடுத்தவனையும் துணைக்குக் கூப்பிட்டுக்குவாங்க.

இவர்களெல்லாம் அந்தக் கடைக்குள்ளிருக்கும் களைகள்.

முதலாளிகிட்டச் சொல்லி அந்த தெனாவட்டுக் காரனை நிறுத்திவிட்டால் மற்றவர்கள் சரியாயிடுவார்கள்.

முற்றவிட்டால் மொத்தபேரும் கெட்டுப் போய்விடுவார்கள், அப்புறம் முதலாளியும் நாமளும்தான் கடையைக் கவனிக்கவேண்டியது வரும்.

சிலர் லீவு வராதான்னு ஏங்கிகிட்டு இருப்பாங்க. லீவு வந்தால் ஜாலியா சுத்தலாமேன்னு அதே நெனப்புல திரிவாங்க.

நாம அப்படி இருக்கக் கூடாது.

லீவு வந்தால், அந்த லீவுல என்னன்ன செய்யலாம், யாரை யாரைப் பார்த்து ஆர்டர் எடுக்கலாம், வசூலுக்குப் போகலாம், - கோடவுனைக் கிளீன் பண்ணலாம், ஸ்டாக் சரிபார்த்து, எதை எதை ஆர்டர் போடலாம்னு அதே சிந்தனையிலதான் இருக்கணும். லீவு நாளையும் பயனுள்ளதாக மாற்றிக்கணும். பயன்படுத்திக்கணும்.

சிலர் நாளைக்கு லீவுன்னா இன்னைக்கு சாயங்காலத்திலிருந்தே மெதப்புல அலைவாங்க, ஒரு வேலையும் ஒழுங்காச் செய்யமாட்டாங்க.

அதாவது பரவாயில்ல... சமயத்துல, லீவு அன்றைக்கு, ஏதாவது சரக்கு லோடு வந்திருக்கும். எல்லோரும் கோடவுன்லதான் இருப்போம்.

இந்த "நமக்கென்ன"-ங்கிற கோஷ்டி, சரக்கு கொண்டுவந்த டிரைவர்கிட்ட சண்டைக்குப் போவாங்க.

"யோவ்.. இன்னைக்கு லீவுன்னு தெரியுமில்லா...ஏய்யா இன்னைக்கு வந்த கழுத்தறுக்கிற...

"எங்களுக்கு என்ன சார் தெரியும், உங்க கடை இன்னைக்கு லீவுன்னு... இறக்கணும்னா இறக்குங்க... இல்லாட்டி "ஹால்ட்டிங் சாஜ்" ஒரு நாளைக்கு 1500 ரூபா கட்டுவீங்க" என்பார் டிரைவர்.

"நாங்க ஏன் கட்டுறோம்.. எங்களுக்கு என்ன தலையெழுத்தா.. முதலாளி கட்டுவாரு... போய் வாங்கிக்க, ... வந்திருக்காம் பாரு" - ன்னு வாதம் பண்ணுவாங்க.

நாம என்ன செய்யணும்...?

முதலாளிக்கு ஒரு பைசா கூட நஷ்டம் வராம பாத்துக்கணும்.

வெளியே கிளம்புவதற்காக "டிரஸ்" எல்லாம் போட்டிருந்தால் கூட,

"அண்ணே - கொஞ்சம் பொறுங்க - டிரஸ்ஸ மாத்திட்டு வந்துடறோம்" -னு சொல்லி, நமக்கு ஏத்தமாதிரி, நமக்குக் கட்டுப்பட்ட, ஒத்தாசையாயிருக்கிற இரண்டு மூன்று பேரைக் கூப்பிட்டுக் கொண்டு, வந்த சரக்கை நல்லமுறையில் இறக்கிவைத்து, சரிபார்த்து, கையெழுத்துப் போட்டு அனுப்பி வைக்கணும்.

வெளியே போகணும்னு ஆசை ஆசையாகத்தான் கௌம்பியிருப்போம் - இருந்தாலும் என்ன, இந்த வாரம் இல்லன்னா அடுத்தவாரம் போய்க்கிலாமே! வந்திருக்கிறது நம்ம சரக்கு, நம்ம பொருள் என்ற எண்ணம்தான், நம்மை வாழ்வில் உயர வைக்கும்.

(நாம் நமது பண்பின் காரணமாக, அடக்கத்தின் காரணமாக, முதலாளிகிட்ட, "நான்தான் இறக்கினேன், அவனுகல்லாம் கிட்டே வரலை"- ன்னு சொல்லமாட்டோம்) ஆனால், மறுநாள் எப்படியும் முதலாளிக்கு உண்மை தெரிந்துவிடும்.

... அப்படி உண்மை தெரியும் போது அவரது நெஞ்சில் நாம் நீங்காத இடத்தைப் பிடித்துவிடுவோம்.

Owned at Published by K.M.JULIAN from 21, Krishnappa Naickan Street, Mettupalayam, Chennai-33 and Printed by K.M.JULIAN at "NEW MERIT PRINTERS" No: 14/51, Reddykuppam Road, Saidapet, Chennai-15. Editor K.M.JULIAN.


WE'RE BIG ON FUN
Reach levels of fun and fantasy never before experienced. Regale in a holiday experience filled with high energy entertainment at one of India's largest amusement park.
THRILLING INTERNATIONAL RIDES
WATER RIDES, WAVE POOL & WATER FALLS
MARYWORLD FOR KIDS
AMPHITHEATRE AND ENTERTAINMENTS
AMPLE CAR PARKING, RESTAURANTS AND POWER BACK-UP
MGM
Dizzee World
East Coast Road, Muttukadu
M.G. Muthu Group
FOR DETAILS CALL
+91-44-27472129 / 27472131
9790955554 / 9500063716 / 17
www.mgmdizzeeworld.com

Regd.No.TN/CC(S) DN/112/2024-2026
Registered Newspaper RNI 55354/1992
Posted at Egmore RMS-1, Partrika Channal Posted on 8.1.2024
PUBLISHED ON FIRST OF EVERY MONTH WPP Licence No.TN/PMG(CCR)/WPP 315/24-26

If underlivered please return to INDIAN NADARMURASU
21,Krishnappa Naiyakan Street,
Mettupalayam, Chennai-600 033.








# பிறந்தநாள் வாழ்த்துக்கள்!!

17.1.2024 அன்று பிறந்த நாள் காணும் R.S.முத்து தலைவர் தமிழ்மாநில காங்கிரஸ் வர்த்தகர் அணி, நல்லழகு நாடார் பாலிடெக்னிக் கல்லூரி நிர்வாக குழு உறுப்பினர் அவர்களை வாழ்த்துகிறோம்.





**P.சண்முகவேல்**
மாநிலபொதுச் செயலாளர்வர்த்தக அணி



**சதிஷ்பிரபு**
மாவட்ட தலைவர்வர்த்தகர்அணி



**A.விநாயகம்**
வடசென்னைகிழக்கு மாவட்ட தலைவர்
தமிழ்மாநில காங்கிரஸ்வர்த்தகஅணி



**R.சீனிவாசன்**
மாநில செயலாளர் தமிழ் மாநில
காங்கிரஸ் வர்த்தக அணி